பொதிகள் அனுப்பும் முகவர் நிலையங்களில் மோசடிகள் பக். 07

விலை ரூபா 20
பக்கங்கள் 32

# உதயன்

35c - 28c
ஓரளவு மேக மூட்டம்

சுடர் 31 | கதிர் 137 | வள்ளுவர் ஆண்டு 2047 | பங்குனி 29, திங்கட்கிழமை 11.04.2016

# சிவில் நிர்வாகத்தில் இராணுவம் தலையீடு

## பணியிலிருந்த கிராம சேவகர்களின் அடையாள அட்டையை பறித்ததால் முல்லைத்தீவில் நேற்றுப் பதற்றம்

முல்லைத்தீவு, ஏப்ரல் 11
கிராம சேவகர்களின் பணியில் தலையிட்டு, அவர்களை அச்சுறுத்தும் வகையில், அவர்களது அடையாள அட்டையையும் இராணுவத்தினர் பறித்துச் சென்ற சம்பவத்தால் கொக்குத்தொடுவாயில் நேற்று மாலை கடும் பதற்றம் ஏற்பட்டது.
இவ்வாறு இராணுவத்தினர் நடந்துகொள்வது, சிவில் நிர்வாகத்தில் இராணுவத் தலையீடு என்று கரைதுறைப்பற்று பிரதேச செயலர், அந்தப் பகுதி இராணுவ அதிகாரியைத் தொடர்பு கொண்டு அழுத்தமாகச் சுட்டிக்காட்டியதையடுத்து, பறிமுதல் செய்த அடையாள அட்டைகள் மீண்டும் உரியவர்களிடம் வழங்கப்பட்டதாக, சாட்சிகள் உதயனுக்குத் பக். 30



## பாலியல் குற்றச்சாட்டுக் குறித்து விசாரணைகள் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 11
உடுவில் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட சமுர்த்தி வங்கி ஒன்றில் பாலியல் துஷ்பிரயோகம் நடைபெற்றதாகக் குற்றம் சுமத்தப்பட்ட நிலையில், இது பக். 30

முச்சந்தி முரளி



இதைத் தான் நல்லாட்சி என்றாங்கள் பாருங்கோ...

## நல்லிணக்கம் தொடர்பில் ஜூனில் ஐ.நாவுடன் பேச்சு

### பிரதமர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.11
இலங்கையில் நல்லிணக்க நடவடிக்கைகளை முன்னெடுப்பது குறித்து, ஐ.நா. மனித உரிமைகள் சபையுடன் எதிர்வரும் ஜூன் மாதம் பேச்சு நடத்தவுள்ளதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பக். 30



## 20 பில்லியன் அமெரிக்க டொலர்கள் இலங்கையை விட்டு வெளியேற்றம்

### பத்து ஆண்டுகளில் சட்டவிரோதமாக என்கிறது அமெரிக்க ஆய்வு நிறுவனம்

வொஷிங்டன், ஏப்.11
கடந்த ஆண்டுகளில் (2004 - 2013) அரசியல்வாதிகள், தொழிலதிபர்கள், குற்றச்செயல்களில் ஈடுபடுவோர் மற்றும் வரி ஏய்ப்பாளர்களால் 20 பில்லியன் அமெரிக்க டொலர்கள் (2 இலட்சத்து 88 ஆயிரம் கோடி ரூபா) சட்டவிரோதமான முறையில் இலங்கையை விட்டு எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.
இவ்வாறு வொஷிங்டனைத் தளமாகக்கொண்ட உலக நிதி நாணயத் தன்மை தொடர்பில் ஆராயும் பக். 29

## அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சர் மீது விக்கி பாய்ச்சல்

### வெளிநாட்டுத் தூதுவரை அனுமதியின்றிச் சந்தித்ததற்காக

யாழ்ப்பாணம், ஏப். 11
கடந்த வாரம் இடம்பெற்ற வடக்கு மாகாண அமைச்சரவைக் கூட்டத்தின்போது, வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், மாகாண அமைச்சர் ஒருவரைக் கடுமையாகக் கடிந்துகொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
வடக்கு மாகாண பக். 27

## இரணைதீவுக்கடலில் 4 மீனவர்கள் கைது

யாழ்ப்பாணம், ஏப். 11
தடைசெய்யப்பட்ட வலைகளைப் பாவித்து மீன்பிடியில் ஈடுபட்டகுற்றச்சாட்டில் உள்ளூர் மீனவர்களைக் கடற்படையினர் நேற்றுக் கைதுசெய்து தம்மிடம் ஒப்படைத்துள்ளதாகக் கிளிநொச்சி கடற்றொழில் பக். 30

## மூன்று தினங்களில் இறுதியாகும் மக்கள் பேரவையின் தீர்வு வரைவு

### சட்டத்தரணி புவிதரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.11
தமிழ் மக்கள் பேரவையின் அரசியல் தீர்வுத் திட்டத்தை தயாரிக்கும் உப குழுவின் வரைவு திருத்தங்களுடன் பேரவையின் நிர்வாகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.
எனினும் குறித்த திருத்தங்களை மேற்கொண்டு இறுதித் தீர்வு வரைவு மூன்று தினங்களுக்குள் பேரவையிடம் கையளிக்கப்படுமென தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத்திட்ட வரைவைத் தயாரிக்கும் உப குழுவின் உறுப்பினர் சட்டத்தரணி வி.புவிதரன் தெரிவித்தார்.
தமிழ் மக்கள் பேரவையின் அரசியல் தீர்வுத்திட்ட வரைவை இறுதி செய்வது தொடர்பான கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றது. இதில் வடக்கு மாகாண பக். 29

## சித்திரைப் புத்தாண்டு வியாபாரம் யாழ்.நகரில் இம்முறை படுவீழ்ச்சி

### தென்னிலங்கை வியாபாரிகளின் வருகை அதிகரிப்பெனக் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஏப்.11
தென்னிலங்கை வியாபாரிகளின் வருகையினாலும், இந்திய வியாபாரிகள் கடனடிப்படையில் வீடு வீடாகச் சென்று வியாபாரம் செய்வதாலும், யாழ். நகரில் சித்திரைப் புத்தாண்டு வியாபாரம் வழமைக்கு மாறாக மந்தகதியில் நடைபெறுவதாக நகர வியாபாரிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.
அத்துடன் சுட்டெரிக்கும் வெயிலும் மக்களின் வரவு குறைவாகக் பக். 30



## வட்டுவாகலில் கடற்படைக்கு காணி மதிப்பீடுகள் ஆரம்பம்

### பாதுகாப்பு அமைச்சு முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், ஏப். 11
வட்டுவாகலில் கடற்படைத் தளம் அமைப்பதற்காக, சுவீகரிப்பதற்கு அடையாளப்படுத்தப்பட்ட 612 ஏக்கர் காணியின் விலை மதிப்பீடுகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
முல்லைத்தீவு மாவட்டத்தின் வட்டுவாகல் பிரதேசத்தில் பொது மக்களுக்குச் சொந்தமான காணியை அபகரித்துள்ள பக். 29

உங்களது நீர் மாசடைந்துள்ளது என்பதை அறிவீர்களா?
உங்களது நீர் எவ்வகையான நீராக இருந்தாலும் நவீன முறைகளில் சுத்திகரிக்கப்பட்டு இலங்கை தர நிர்ணயசபையின் நியமங்களுக்கு அமைவாக (SLS 614 (2013)) நீரின தரத்தை குறைந்த செலவில் சுத்திகரிப்பதற்கான இயந்திரங்களை பெற்றுக்கொள்ள அணுகுங்கள்
UV Water Solution
water science technologies
Right solution for water issues
தொடர்புகளுக்கு:- 0775092737
277 கச்சேரி நல்லூர் வீதி யாழ்ப்பாணம்
ஒரு மணித்தியாலத்தில் 10 லீற்றர் வரையிலான நீரை வடிகட்டுவதற்கான இயந்திரம் ஒரு வருட உத்தரவாதத்துடன் ரூபா 20000.00 மட்டுமே
வீடுகள் அலுவலகங்கள் கடைகளுக்கென பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட இயந்திரங்களும் உள்ளன

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



# உள்ளூர் உற்பத்தி விற்பனைக் கண்காட்சி சந்தைப்படுத்தும் பிரச்சினையை தீர்க்கும்

## யாழ். மாவட்ட முயற்சியாளர்கள் நம்பிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.11
கைத்தொழில் முயற்சிகளை கற்றுக் கொண்டபோதும், சிறுகைத் தொழில் உற்பத்திப் பொருள்களை சந்தைப்படுத்துவதில் பெரிய பின்னடைவு காணப்படுகின்றது. இன்று (நேற்று) ஆரம்பிக்கப்பட்ட இந்தத் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் கண்காட்சி இத்தகைய பின்னடைவுக்குத் தீர்வை வழங்கும் என நம்புகின்றோம் - இவ்வாறு யாழ். மாவட்ட முயற்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.
யாழ்.மாவட்டச் செயலகத்தின் சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவினரால் ஏற்பாடு செய்யப்பட்ட யாழ் முயற்சியாளரின் உள்ளூர் உற்பத்திப் பொருள்களுக்கான விற்பனைக் கண்காட்சி யாழ்.மாநகரசபை மைதானத்தில் நேற்று மாவட்ட அரச அதிபர் நாகலிங்கன் வேதநாயகனால் ஆரம்பிக்கப்பட்டது. இந்தக் கண்காட்சியில் கலந்து கொண்ட முயற்சியாளர்களே மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்தனர்.
யாழ். மாவட்டத்தில் முதல் முறையாக நடத்தப்படும் இந்தக் கண்காட்சி நேற்றும், இன்றும் - இரண்டு தினங்கள் முற்பகல் 10 மணி முதல் இரவு 7 மணிவரையில் நடைபெறும்.
யாழ். சிறு தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருள்களை சந்தைக்கு அறிமுகப்படுத்தும் நோக்கிலும், சந்தை வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கிலும் முன்னெடுக்கப்பட்ட கண்காட்சியில் 82 முயற்சியாளர்கள் கலந்து கொண்டனர். இவர்கள் பனம் பொருள் உற்பத்திகள், சிரட்டை அலங்காரப் பொருள்கள், வாழ்த்து அட்டைகள், பெண்கள், சிறுவர்களுக்கான உடைகள், குளிர்பானங்கள், யாழ்.மாவட்டத்துக்கே உரிய சிறு முதலீட்டு உணவுப் பண்டங்கள், சமையல் பாவனைக்கான உள்ளீட்டுப் பொருள்கள், தும்பு உற்பத்திகள், கைப்பைகள், புத்தகப் பைகள், அலங்காரத் தாவரங்கள், அழகு சாதன மையங்கள் முதலான பல்வேறு காட்சிக் கூடங்கள் அமைக்கப்பட்டிருந்தன.
குறைந்த விலையிலும் நீடித்தபாவனையிலும் பயன்படும் வகையில் இவை விற்பனை செய்யப்படுகின்றன. அத்துடன் 18 வயது முதல் 40 வயதுக்கு உட்பட்ட தொழிலற்றவர்களுக்கு சிறுதொழில் முயற்சிகளை இலவசமாகப் பெற்றுக் கொடுப்பதற்கான விண்ணப்பங்கள் சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவினரால் வழங்கப்படுகின்றன.
இந்த நிகழ்வில் கலந்து கொண்ட யாழ். மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி இரஞ்சிதமலர் மோகனேஸ்வரன் கருத்துத் தெரிவிக்கையில்-
யாழ். மாவட்டச் செயலகத்தின் கீழ் சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவினரின் முயற்சியில் மாவட்ட சிறுகைத் தொழிலாளர்கள் இணைந்து இவர்களின் உற்பத்தித் தரத்தை உயர்த்தும் நோக்கில் குறித்த கண்காட்சி முன்னெடுக்கப்பட்டுள்ளது.
யாழ்.மாவட்ட செயலகத்தால் கைத்தொழில் முயற்சியாளர்களுக்கான இலவச சந்தை வாய்ப்பு, தொழில் முயற்சிகள், பொதியிடல் வசதிகள் என்பவற்றை ஆரம்பித்துக் கொடுக்கும் வகையில் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. அவற்றினுடாக முயற்சியாளர்களுக்கான பயிற்சியை வழங்குதல், செயற்திறனை அதிகரித்தல், தென்பகுதியில் இங்கு உற்பத்தி செய்யப்படும் பொருள்களை விற்பனை செய்யும் வகையில் செயற்படுதல் என தீர்மானிக்கப்பட்டன.
அத்துடன் யு.என்.டி.பி நிறுவனத்தால் தெரிவு செய்யப்பட்ட 200 முயற்சியாளர்களுக்கான பகுதியளவில் பிரிக்கப்பட்ட ஐந்து திட்டங்கள் முன்னெடுக்கப்பட உள்ளன. இவர்கள் முயற்சிக்குரிய கல்வியைப் பெற்றபோதும் அதற்கான தகைமைகளை வெளிப்படுத்தும் சான்றிதழ்கள் அற்றவர்களாகவே உள்ளனர்.
தற்போது அதிமாக தொழில் வாய்ப்புக்களில் என்.வி.கியு சான்றிதழ் கோரப்படுகின்றது. எனவே இந்தச் சான்றிதழை இவர்களுக்குப் பெற்றுக் கொடுப்பதற்கும், எஸ்.எல்.எஸ் வரையான தொழில் பயிற்சிகளை வழங்குவதற்கும் ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.
யாழில் தற்போது 3 ஆயிரத்துக்கு மேற்பட்ட தொழில் முயற்சியாளர்கள் உள்ளனர். இவர்கள் தமக்கான சங்கம், சமாசம் வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர். இவற்றை அமைப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.- என்றார்.
நிகழ்வில், யாழ்.மாவட்ட அரச அதிபர் நாகலிங்கன் வேதநாயகன், சிறுகைத் தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவுத் தலைமைப் பணிப்பாளர் சுதீர ஜயரத்ன, யாழ்.மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. இரஞ்சிதமலர் மோகனேஸ்வரன், சனச அபிவிருத்தி வங்கி முகாமையாளர் சு.சபேஸ், யாழ்.மாவட்ட செயலகத்தினர், தொழில் முயற்சியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.
(ற-ஐ-ரி5)

## சிறுமி கர்ப்பம் இளைஞனுக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஏப். 11
சுன்னாகம் பொலிஸ் பிரிவில் பதின்ம வயதுச் சிறுமியைக் காதலித்துத் திருமணம் செய்வதாக கூறி துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் ஈவினையைச் சேர்ந்த 21 வயதுடைய இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார். அவரை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்று உத்தரவிட்டது.
குறித்த சிறுமியை 2 வருடங்களாகக் குறித்த இளைஞன் காதலித்துள்ளார் என்று கூறப்பட்டுள்ளது. பின்னர் அந்தச் சிறுமியுடனான தொடர்பைத் துண்டித்து விட்டார் என்று கூறப்பட்டுள்ளது.
அதனைத் தொடர்ந்து குறித்த சிறுமி தற்போது கர்ப்பமாக உள்ளமை வைத்திய பரிசோதனையில் தெரிய வந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.
சம்பவம் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இவருக்கு எதிரான வழக்கு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டபோது விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.
(ற-ஐ-4,107)

## புதுவருட வியாபாரம் செய்வதற்கு வெளிமாவட்டத்தவர்களுக்குத் தடை

### கரைச்சிப் பிரதேச சபை அறிவிப்பு

யாழப்பாணம், ஏப்.11
கரைச்சிப் பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட சந்தைப் பிரதேசத்தில் புதுவருட வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு வெளிமாவட்ட வியாபாரிகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.
இவர்கள் உரிய அனுமதியை நாளை மறுதினம் 13 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச சபையில் பெறும் பட்சத்தில் வியாபாரச் செயற்பாட்டுக்கான இடம் ஒதுக்கிக் கொடுக்கப்படும் என கரைச்சிப் பிரதேச சபை செயலர் க.கம்சன் தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
சித்திரைப் புதுவருடத்தை முன்னிட்டு வெளிமாவட்ட வியாபாரிகள் பலர் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளுக்கு வியாபாரம் செய்வதற்காக வருகின்றனர். அவர்களால் நிரந்தர வியாபாரத்தில் ஈடுபடும் எம்முடைய உள்ளூர் வியாபாரிகள் பெரிதளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.
இது தொடர்பில் பல முறைப்பாடுகளை பிரதேச சபையில் முன்வைத்துள்ளனர். இவற்றைக் கருத்திற் கொண்டு புதுவருடக் கொண்டாட்டம் நடைபெறும் ஒரு வாரகாலப் பகுதியில் அதாவது கடந்த 8ஆம் திகதி முதல் 13ஆம் திகதி வரையில் பிரதேச சபையின் சந்தைப் பகுதியில் வெளிமாவட்டத்தவர்களுக்கு வியாபார செயற்பாடுகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.
இவ்வாறு இவர்கள் வியாபாரச் செயற்பாட்டில் ஈடுபடுவது எனின் உரிய அனுமதிகளை 13 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளவேண்டும். அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளும் தருணத்தில் வெளி மாவட்ட பண்டிகைக்கால வியாபாரிகள் தம்முடைய வியாபாரச் செயற்பாட்டை மேற்கொள்வதற்கு இடம் ஒதுக்கப்படும். தற்போதைய சந்தைப் பகுதியில் இருந்து ஒரு கிலோமீற்றர் தூரத்துக்கு அப்பால் அவர்களுக்கான இடம் ஒதுக்கப்படும்.
13ஆம் திகதிக்கு முன்னர் உரிய அனுமதிகளைப் பெறாமல் செயற்படும் வியாபாரிகள் மீது சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். தற்போது அனுமதி பெறாமல் செயற்படும் வியாபாரிகள் தொடர்பான தகவல்களை வழங்குவதற்கு எம்முடைய தொலைபேசி இலக்கங்கள் சந்தையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.- என்றார்.
(ற-ஐ-ரி5)

## வெப்பத்துடன் கிடு கிடுவென இளநீர் விலையும் அதிகரிப்பு



யாழ்ப்பாணம், ஏப்.11
குடாநாட்டில் நிலவும் அதிக வெப்பத்துடன் கூடிய கால நிலையை அடுத்து இளநீரின் விலை சடுதியாக அதிகரித்துள்ளது. தற்போது நிலவும் கடும் வெப்பம் காரணமாக பாதசாரிகள் , பயணிகள் முதல் வீட்டினில் உள்ளோரும் இளநீரை நாடுகின்றனர்.
இதன் காரணமாக கடந்த வாரங்களில் 60 ரூபா முதல் 70 ரூபா வரை விற்பனை செய்யப்பட்ட இளநீர் தற்போது நூறு ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது.
(ற-ஐ-101)

## வருடாந்த மகோற்சவம்

யாழ்ப்பாணம், ஏப். 11
உடுவில் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வர சுவாமி தேவஸ்தான தவஜாரோகண மகோற்சவ விஞ்ஞாபனம் இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 நாள்கள் நடைபெறவுள்ளது என்று ஆலய நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.
எதிர்வரும் 20 ஆம் திகதி புதன்கிழமை தேர்த் திருவிழாவும், மறுநாள் வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.
(ற-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குனித் திங்கள் உற்சவம் இன்று

வரலாற்றுச் சிறப்புமிக்க மட்டுவில் பன்றித் தலைச்சி கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த பங்குனித் திங்கள் உற்சவத்தின் ஐந்தாம் திங்கள் உற்சவம் இன்று மிகவும் பக்திபூர்வமாக இடம்பெறவுள்ளது.

இதன்போது பெருமளவு பக்தர்கள் ஆலயத்தில் கூடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதனையொட்டி விரிவான ஏற்பாடுகள் ஆலய நிர்வாகத்தினால் செய்யப்பட்டுள்ளன.

சுகாதாரம், குடிதண்ணீர், போக்குவரத்து, பாதுகாப்பு உள்ளிட்ட சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆலயத்துக்கு வரும் பக்தர்கள் தங்க நகைகள் அணிந்து வருவதைக் கூடியளவு தவிர்க்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

குடிதண்ணீர் மற்றும் சுகாதார வசதிகளை சாவகச்சேரி பிரதேச சபை, தென்மராட்சி பிரதேச செயலகம் என்பனவும் சாவகச்சேரி சுகாதார வைத்தியதிகாரி பணிமனையும் தேவையான வசதிகளைச் செய்துள்ளன. ஆலய உற்சவம் அதிகாலை முதல் இரவு 10 மணி வரை நடைபெறவுள்ளது.

நண்பகல் உற்சவத்துக்கான போக்குவரத்து வசதிகளை இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை மற்றும் யாழ்ப்பாணம் சாலையினரும் மற்றும் தனியார் போக்குவரத்துச் சேவையினரும் நடத்தவுள்ளனர்.

அடியார்கள் சைவ ஆசாரசீலர்களாகவும் கலாசாரத்தைப் பேணும் உடைகளுடனும் ஆலயத்துக்கு வருகைதந்து வழிபாட்டில் ஈடுபடுமாறு இந்து இளைஞர் மன்றத்தினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-131)

## கஞ்சாவுடன் பெண் கைது

ஒரு கிலோ கஞ்சாவை உடைமையில்வைத்திருந்த பெண்ணை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.


யாழ். பொலிஸ் நிலைய சட்ட விரோத தடுப்புப் பிரிவுப் பொலிஸார் யாழ். திருநகர் இராஜேந்திரா வீதியில் உள்ள வீடொன்றில் சோதனை மேற்கொண்ட போது, ஒரு கிலோ கஞ்சாவை வைத்திருந்த பெண்ணைக் கடந்த சனிக்கிழமை கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட பெண்ணை நீதிவானின் வாசஸ்தலத்தில் முன்னிலைப்படுத்திய போது; அவரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.நீதிவான் உத்தரவிட்டார். (ற-ஜ-106)

புபே செட்


ரூ. 2655/= இருந்து


கேட்டரின் சேவைகள்
கிடாரம்
உடன் சமையல் அடுப்பு
வொக்


3 mm கரண்டி வகைகள்




www.titusstores.com
டயிடஸ் ஸ்ரோர்ஸ்
புறக்கோட்டை லிபர்டி ப்ளாசா
112439422 112574446
HOTLINE: 0777-384671

பாராட்டி வாழ்த்துகின்றோம்



அகவை அறுபதில் மணி விழாக் காணும் எமது பிரதி அதிபர்
திரு. வேலாயுதம் மோகன்ராஜ்
அவர்களை பல்லாண்டு காலம் சீரும் சிறப்புமாக வாழ வாழ்த்தும்
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசார் ஊழியர்கள்
மு/ கூழாமுறிப்பு அ.த.க. பாடசாலை.

யாழ் பாரதி வெளியீட்டகத்தின்
புதிய கட்டடத் திறப்பு விழா

திகதி : 11.04.2016
காலம் : பகல் 12.00 மணி
இடம் : ஸ்ரீ முத்துமாரியம்மன் வீதி, அளவெட்டி தெற்கு.

தலைமை
திரு.வை.சின்னப்பு (JP)

ஆசியுரை
செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் அவர்கள்
முன்னாள் அதிபர் (யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி)
தலைவர், தெல்லிப்பழை துர்க்கையம்மன் தேவஸ்தானம்.

பிரதம விருந்தினர்
உயர்திரு.நா.வேதநாயகன் அவர்கள்
அரசாங்க அதிபர், யாழ் மாவட்டம்

சிறப்பு விருந்தினர்கள்
திரு.மு.செல்வஸ்தான் அவர்கள்
அதிபர், யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, சுன்னாகம்.
திரு.க.ஞானபாஸ்கரன் அவர்கள்
சிரேஸ்ர உதவிப் பதிவாளர், பரீட்சைக்கிளை, யாழ்.பல்கலைக்கழகம்.
திரு.இ.சிவநாயகம் அவர்கள்
முன்னாள் போரூட் அணித் தலைவர், மத்தியஸ்தர், இணக்கமன்றம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திரு.சி.சதீஸ்
இயக்குனர்,
நியூ பாரதி பிரிண்ரேர்ஸ் & யாழ் பாரதி வெளியீட்டகம்.

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 10.04.2016 | வெற்றி வாரம் 1966 | ஊதா
கடகம்
வெற்றி இலக்கங்கள்
08 38 49 61
செவ்வாய்க்கிழமை வெற்றிப்பொதி
ரூ 2,746,880 /-

Galaxy Star
வெற்றி வாரம் 050
திகதி 10.04.2016
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
07 33 41 52 57
அடுத்த புதன்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 2,504,640/-
Web: www.dlb.lk

2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் ஈஸ்வரி (ரோகினி) செல்வராசா
மலர்வு 1955.06.19
உதிர்வு 2014.04.04

நீங்கள் எம்மைவிட்டு மறைந்து ஈராண்டு கடந்தாலும் உங்கள் நினைவுகள் எங்கள் இதயங்களில் நீங்காத நினைவாக நிறைந்து நிற்கும் உங்களின் வார்த்தைகள் என்றும் எம் இதயங்களில் ஒலித்துக்கொண்டே இருக்கும்

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்...
என்றும் உங்கள் அன்பு நினைவுகளுடன்
2ஆம் ஒழுங்கை, அரசடி வீதி, நல்லூர். (11,18) குடும்பத்தினர்.

நியூ அபிராமி ரெக்ஸ்ரைல்
புதுவருடத்தை முன்னிட்டு நியூ அபிராமி ரெக்ஸ்ரைல் வழங்கும்
மிகப் பெரிய மலிவு விற்பனை ஆம்



5000/= Or 6000/= விற்கப்பட்ட சாறிகள் 1000/= ரூபாவிற்கு.
4500/= விற்கப்பட்ட சின்னசைஸ் (20-38) நெற் பஞ்சாபிகள் 1000/= ரூபாவிற்கு.
பெண்களுக்கான கொட்டன் பஞ்சாபிகள் 6000/= விற்கும் 5000/= விற்கப்பட்டது 3000/= ரூபாவிற்கும் மற்றும் கொட்டன் சாறிகள் சகலவிதமான ஆடை தெரிவுகளையும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்.

நியூ அபிராமி ரெக்ஸ்ரைல்ஸ்
ஆஸ்பத்திரி பின் பக்கம்,
225C மின்சார நிலைய வீதி, யாழ்.

மலிவு விற்பனை கையிருப்பு உள்ளவரை மட்டுமே.

மதிப்பிற்குரிய நளின் வாடிக்கையாளர்களுக்கு...!

தங்களால் எமது நிறுவனத்திடம் திருத்தவேலைகளுக்காக அல்லது உத்தரவாதத்தினை பெற்றுக்கொள்வதற்காக 29.02.2016 முன்னர் ஒப்படைக்கப்பட்ட கணனி மற்றும் கணனி சார்பான பொருட்களை எதிர்வரும் 10 நாட்களுக்குள் (21.04.2016) மீளப் பெற்றுக்கொள்ளுமாறு தங்களை மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

குறிப்பு: ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 09.30 மணி தொடக்கம் மாலை 05.30 மணிவரைக்கும் பின்வரும் தொலைபேசி எண்களுடன் தொடர்புகளை மேற்க்கொள்ளலாம். 021 - 2221166, 0777667974

மேற்குறிப்பிட்ட திகதிக்கு பின் இப்பொருட்களுக்கு நளின் நிர்வாகம் எவ்விதத்திலும் பொறுப்பேற்கமாட்டாது என்பதை மிகத்தாழ்மையுடன் அறியத்தருகின்றோம்.



சேவை முகாமையாளர்
நளின் கணனி சேவை மையம்

NALIN INFORMATION TECHNOLOGIES (PVT) LTD.
No. 195/4, Parameswara Junction, Palaly Road. T.P: 021-2221166,0777667974

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தாண்டு கால குதூகலத்தில் சொப்ட்லொஜிக் உடன் இணைந்திடுங்கள்

softlogic max

**250 மில்லியனுக்கு மேல் பெறுமதியான தள்ளுபடிகள் மற்றும் பரிசுகள்**

Panasonic 32" LED



3 வருட உத்தரவாதம்
6,999/- மாத்திரம் செலுத்தி எடுத்துச் செல்லுங்கள்

SAMSUNG 32" LED JOY PLUS



3 வருட உத்தரவாதம்
6,999/- மாத்திரம் செலுத்தி எடுத்துச் செல்லுங்கள்
இலவச DVD

**மீதி வட்டியில்லாத 15 மாத தவணைக் கொடுப்பனவு முறையில்**

DEL Laptop 3543 i3



FREE Printer

ரூ. 85,999/-
மாதம் ரூ. 5,200/-
15 மாதங்களில் இலவசம்

6 வது Generation இல் புதிய மடிக்கணினியை
14,999/- செலுத்தி எடுத்துச் செல்லுங்கள்

Panasonic 32" LED 32sv7



ஆரம்ப கட்டணம் 9,999/-
மற்றும் இலவச Home theater (XH166)

**இந்தச் சலுகைகள் எமது கிளையில் மட்டுமே**

தொடர்புகளுக்கு:

softlogic MAX
maximum experience

பிரதான கிளை

இல.420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (KFC கட்டடம்)

0777 397734 / 021 567 8989 / 077 982 4213

## 2016 சித்திரைப் புதுவருடத்தை முன்னிட்டு...

இந்தியன் செலக்ஷனின்

# இந்தியன் பஜார்

## வழங்கும்



## மாபெரும் விசேட விலைக்கழிவுகள்

உங்களுக்குத் தேவையான திருமண பட்டுப் புடைவைகள் விதம் விதமான அழகிய சாறி வகைகள் மற்றும் அனைத்து வகையான ஆடைகளையும் மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.





### சல்வார் துணிகள்

சில்க் 2 டொப் சல்வார் துணி
~~1500/-~~ 1000/-
சில்க் 3 டொப் சல்வார் துணி
~~2000/-~~ 1500/-
குண்டன் 2 டொப் சல்வார் துணி
~~1500/-~~ 1200/-
கொட்டன் 3 டொப் சல்வார் துணி
(Special) ~~3000/-~~ 2500/-

இடம் : யாழ்.வீரசிங்க மண்டபம்.
காலம் : 30.03.2016 முதல் 15.04.2016 வரை

## சித்திரைப் புதுவருடத்தை முன்னிட்டு மிகத் தரமான உடைகள்

# மிகப்பெரிய மலிவு விற்பனை

பணத்தினை மீதப் படுத்துங்கள்

பல வகையான சாறங்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் மலிவு விலையில்



- கொட்டன் துணிகள் பல வண்ணங்களில்
- றொப் வகைகள்
- சல்வார் துணிகள்
- பற்றிக் கவுன் பல டிசைன்களில்
- பல விலைகளில் பல டிசைன்களில் சில்க், கொட்டன் சாறிகள்
- சிறுவர்களுக்கான சோளிகள், குருதாக்கள்
- குவாலிட்டி சாறங்கள்
- வேட்டிகள் இன்னும் பற்பல

தெரிவுகளுக்கு முந்துங்கள்

தரமானவற்றை மலிவாகப் பெறுங்கள்

நம்பமுடியாத விலைகளில்

ஒவ்வொரு வாடிக்கையாளரையும் திருப்திப்படுத்தும் எமது சேவை.

# அம்பாள்

ரேட் (பிறைவேற் லிமிடெட்)

புடைவை விற்பனையில் மாபெரும் புரட்சி

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய மாநகரசபைக் கட்டடத் தொகுதி, முதல் மாடி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# மலர்வளையத்திலும் மகிந்த மோசடியாம்!

**கொழும்பு,ஏப்.11**

கொழும்பின் பிரபல மலர்ச்சாலை ஒன்றிலிருந்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த, மோசடியான முறையில் மலர் வளையங்களைக் கொள்வனவு செய்திருந்தார் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சட்டமாஅதிபர் திணைக்களத்தின் சில அதிகாரிகள் இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதனைத் தடுக்கும் வகையில் செயற்பட்டு வருகின்றனர் என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

மகிந்த ராஜபக்ச பதவி வகித்த காலத்தில் பொதுமக்களின் பணத்தைப் பயன்படுத்தி விலை கூடிய மலர் வளையங்களைப் பெற்றுக் கொண்டார் என்றும், அதனை விடவும் விலை அதிகமாக அவற்றுக்கு பற்றுச்சீட்டுக்களைப் பெற்றுக் கொண்டு கணக்குக் காட்டியுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த மலர்ச்சாலைக்கும் சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகளுக்கும் இடையில் காணப்படும்தொடர்பு காரணமாக இந்த விசாரணைகள் கிடப்பில் போடப்பட்டுள்ளன என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எவ்வாறெனினும், இந்த விடயம் குறித்து விசாரணைகள் நடத்தப்படுவதாக தமக்கு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அறிவிக்கவில்லையென்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். (ற-ஐ-5)

## அதி உயர் கௌரவ தேசிய விருது - 2016



அகில இன நல்லுறவு ஒன்றியத்தால் வழங்கப்பட்ட நற்சான்றிதழான "SAMASRI DESHAMANYA" எனப் பெருமையுடன் அழைக்கப்படும் அதி உயர் கௌரவ விருதினைப் பெற்றவரும் தன்னலம் கருதாது, காலநேரம் பாராது தன்னை நாடிவருகின்ற அனைத்து விதமான கல்வி, கலாசார, சமூக மற்றும் ஆன்மீக சேவைகளிலும் தொடர்ச்சியாகத் தன்னை ஈடுபடுத்தி விடா முயற்சியுடனும் எண்ணத் துணிவுடனும் திறமையுடன் செயலாற்றி நம்மவர்க்கெல்லாம் பெருமை சேர்க்கும் "SAMASRI DESHAMANYA"

**Mrs. Kamala Balasubramaniam J.P**

அவர்களை அவரது பெரும் பணியானது சிறக்கவும் இன்னும் பல கௌரவ விருதுகள் அவரை நாடி வந்து சிறப்பிக்கவும் வேண்டுமென நாங்கள் பகவான் ஸ்ரீசத்யசாயி பாபாவை வேண்டி மனதார வாழ்த்துகின்றோம்.

**J/102, கிராம அலுவலகர்,**

**ஸ்ரீ சிவகுருநாத குருபீட மகாதேவ சுவாமிகள் ஆச்சிரமத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர்**

**க.கனகரத்தினம்**

**குமாரசுவாமிகள் வீதி,**
**கந்தர்மட நண்பர்கள் சார்பில்**
**தே:ந:கனகவேல்ராசா**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



R.Anurajah
(Senior Advisor)
(Bronze Medal)



A.Vijinthan
(Senior Advisor)
(Bronze Medal)



T.Tharmarasa
(Advisor)
(Bronze Medal)

இன்று (11.04.2016) HNB Assurance PLC நிறுவனத்தால் Colombo Hilton Hotel இல் நடத்தப்படும் வருடாந்த விருது வழங்கும் விழாவில் கலந்துகொண்டு பதக்கங்களைப் பெறும் எமது நண்பர்களை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்: நண்பர்கள்.**

## காசி யாத்திரை

**ஆரம்பம் 10.06.2016, யாத்திரீகர்கள்.20, நாள்கள் 10**

**தரிசிக்கும் இடங்கள்:**

டெல்லி அட்ஷயதாம் மற்றும் சில இடங்கள் ஆக்ரா, தாஜ்மகால், மதுரா, கிருஷ்ண ஜென்மபூமி, அலகாபாத், கங்கா, ஜமுனா, சரஸ்வதி, திருவேணிசங்கமம், நேருவீடு, சயன ஆஞ்சினேயர், சீத்தாமடி, சீதை தாயாருடன் பூமியுள் புதையுண்ட இடம் பிர்லா மந்திர், காசிவிஸ்வநாதர், காசிவிசாலாட்சி காலபைரவர், அரிச்சந்திரமகாராஜா சுடலை காத்த சுடலை உட்பட காசியில் பல இடங்களில். அத்துடன் இராமேஸ்வரம், இராமர்பாதம், பஞ்சமுக ஆஞ்சினேயர், திருப்புலானி, உத்திரகோசமங்கை உட்பட ஒரு நாள் சென்னையில் சொப்பிங்.

மடப்பள்ளி ஆள்கள் சமைத்த சுத்தமான சைவ உணவு மூன்றுவேளை, காலை மாலை,கோப்பி, ரீ, 2 லீற்றர் குடிநீர், பயணம் முழுவதும் AC வாகன வசதி மற்றும் விமானம், 2பேருக்கு குளியறை இணைந்த அறைகள் மேலும் மடப்பள்ளி ஆள்கள் சமைப்பதனால் நமது குருக்கள்மார்களும் தயக்கமின்றி சேர்ந்துகொள்ளலாம்.

பயணம்: கொழும்பு, டெல்லி, காசி, டெல்லி, சென்னை, மதுரை, சென்னை, கொழும்பு விமானம் சுற்றிப்பார்க்க AC பஸ், AC வான்.

விருப்பமுடையவர்கள் மேலும் விவரங்களைக் கேட்டறிந்து பதிவு செய்யவும்.

**மேலதிக விவரங்களுக்கு**
**கலாநிதி T.ஸ்ரீரொங்கநாதன்**
**மகன் - ராஜன்**
**இல.59, 3/6 செட்டியார்தெரு, கொழும்பு - 11**
**077 768 0102, 077 736 2154**

(R29947)(3.7.6)

## "மாசற்ற நீரே குறைவற்ற செல்வம்"



RO with Ultraviolet
~~Rs. 38,000/-~~
Rs.35,000/-
முந்துங்கள்



இச்சலுகை 30.04.2016 வரை மட்டுமே

- உங்கள் கிணற்று நீர் பருகுவதற்கு உகந்ததா என்பதில் சந்தேகமா?
- மேலதிக கல்சியம், மக்னீசியம், நைட்ரைட் ஒரு பிரச்சினையா?
- மலத்தொற்று கிருமிகள் போன்ற உயிர்க்கொல்லி நோய்க்கிருமிகள் உங்கள் கிணற்று நீரிலும் இருக்கலாம் என அச்சமா?
- போத்தலில் அடைக்கப்பட்ட நீருக்கான செலவு அதிகமா?
- மேற்குறிப்பிடப்பட்டவை போன்ற அனைத்து பிரச்சினைகளுக்கும் நம்பிக்கை உத்தரவாதத்துடனான தீர்வு எம்மிடம் மட்டுமே...
- UV உடனான HI-PURE RO நீர் சுத்திகரிப்பு இயந்திரத்தின் மூலம் 100% தூய நீரை உங்கள் வீட்டிலேயே பெற்று பயன் பெறலாம்.
- அனைத்து நீர் சுத்திகரிப்பு தொடர்பான சிறந்த தீர்வுக்கு எங்களை நாடுங்கள்.

**EVER PURE HI-TEC (PVT) LTD**
**341,K.K.S ROAD ,JAFFNA.**
**TEL:- 0215677567,0773626230**

## சிறிகுமரன் ரெக்ஸ்

**தட்டாதெருச் சந்தியில் புது வருடத்தை முன்னிட்டு விசேட விலைக்கழிவில் புத்தம் புதிய தெரிவுகள்**



**இந்தியாவில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட அனைத்து ரக ஆடைகளையும் நம்ப முடியாத விசேட விலைக்கழிவில் பெற்றுக்கொள்ளலாம்.**

**விசேடமாக Office Wear Sarees 690/= இலிருந்து**

- பட்டுச் சாறி
- பன்சி சாறி
- கொட்டன் சாறி
- சல்வார்
- சல்வார் துணி
- TOPவகைகள்
- ரவுசர், சேட்

**என்பவற்றை மலிவாகப் பெற்றுக்கொள்ள**

**சிறிகுமரன் ரெக்ஸ்**
**770,K.K.S. றோட், தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம்.**

## நீங்களும் ஆங்கில ஆசிரியராகலாம்

- ஆங்கிலத்தினை அடிப்படையிலிருந்து கற்று ஆங்கில ஆசிரியராக விரும்புபவர்களுக்கும்
- ஆங்கிலத்தினை முழுமையாகக் கற்பதற்கு விரும்புபவர்களுக்கும்
- ஆங்கில மொழிமூல கற்கை நெறிகளைப் பின்பற்ற உள்ளவர்களுக்கும்
- ஆங்கில அறிவினை மேலும் விருத்தி செய்ய விரும்பும் ஆங்கில ஆர்வலர்களுக்குமான மிகக் குறைந்த கட்டணத்தில் பொது கற்கைநெறி.

(Trainer Training (Teacher Training Diploma)

- 500 மணித்தியாலங்களில் நீங்களும் மிகச்சிறந்த ஆங்கில ஆசிரியர்
- அனைத்தும் அடிப்படையிலிருந்து.(The Stracture of Language and oral situation approaches)
- நவீன அணுகுமுறைகள்
- Psychology, Leadership, Personality development.
- Teaching practice
- How to use the Techniques and teaching aids effectively in English

**New batches Start On : 9.am (16.04.2016) சனி (weekend batch)**
**9.am (18.04.2016) திங்கள் (Week day batch)**

**4th, 5th Batch இல் இணைய பதிவுகளுக்கு முந்துங்கள்**

ELAS
English Language Adventure School
Sir Pon Ramanathan Road, Thirunelveli, Jaffna.
T.P: 021 221 2410, 076 697 3040

## யாழ்ப்பாணத்தில் காண்டம் வாசிக்கப்படுகின்றது

ஸ்ரீ கௌசிக அகஸ்திய நாடி சோதிட நிலையம் (pvt)Ltd

**P. ஜெய்சங்கர்**

கொழும்பில் கடந்த 25 வருடங்களாக,கௌசிக அகஸ்திய முனிவர்களால் எழுதப்பட்ட ஏட்டுச் சுவடிகள் மூலம், தங்களின் கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம், கல்வி, திருமணம், குழந்தைகள், தொழில்வாய்ப்புகள் வெளிநாட்டுப் பயணம் போன்றவற்றைக் கூறிப் புகழ் பெற்ற சோதிடர்களால் தற்போது யாழ்ப்பாணத்தில் பலருடைய வேண்டுகோளுக்கு இணங்கி கீழ் கண்ட முகவரியில் காண்டம் வாசிக்கப்படுகின்றது.

**தொடர்புகளுக்கு:**
**384 A, நாவலர் வீதி, (கைலாசபிள்ளையார் கோயில் சந்தி, நல்லூர்)**
**தொலைபேசி: 021 221 7944**
**கொழும்பு முகவரி:**
**19,1/1, கொத்தலாவல மாவத்தை, பம்பலப்பிட்டி**
**தொலைபேசி: 011 258 6180/ 011 258 6208**

(சி. 22235)
(12.18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரோட்பாண்ட் இணைப்பு விற்க வந்தவர் பண மோசடி

## யாழ்.நகரில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஏப்.11

யாழ்ப்பாணத்தில் இயங்கும் தொலைபேசி இணைப்பு வழங்கும் நிறுவனத்தின் புரோட் பாண்ட் இணைப்பை வாடிக்கையாளர்களுக்கு கொண்டு சென்று விநியோகிக்கும் பணியாளர் ஒருவர், பணமோசடியில் ஈடுபட்டுள்ளார்.

குறித்த பணியாளர், வாடிக்கையாளர் ஒருவரின் பணப்பையைத் திருடிச் சென்று அதற்குள்ளே இருந்த வங்கி தானியங்கிப் பண வரவு அட்டையை திருடிச் சென்று யாழ்.நகரிலுள்ள ஹோட்டல் ஒன்றில் நண்பர்களுடன் இணைந்து மது அருந்தியுள்ளார். இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்.நகரிலுள்ள வியாபார நிலையமொன்றில் இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

புரோட்பாண்ட் இணைப்பை விற்பனை செய்வதற்காக யாழ்.நகரில் இயங்கும் வியாபார நிலையம் ஒன்றுக்குச் சென்ற தனியார் தொலைபேசி சேவை வழங்கும் நிறுவனத்தின் பணியாளர், அங்கு தமது புரோட்பாண்ட் இணைப்பை விற்பனை செய்வது தொடர்பில் விளக்கமளித்து விட்டு, குறித்த வியாபார நிலையத்தின் உரிமையாளரின் பணப்பையைத் திருடி வந்துள்ளார்.

இந்த நிலையில் குறித்த உரிமையாளர், தமது பணப்பையை காணவில்லை என தாமதமாகவே அறிந்த காரணத்தினால், எல்லா இடமும் தேடிவிட்டு, குறித்த புரோட் பாண்ட் விற்பனைக்கு வந்த நபர் மீது சந்தேகம் கொண்டுள்ளார்.

இதனால் அந்த புரோட்பாண்ட் விற்பனை நபரின் தொலைபேசிக்கு உறவினர் ஒருவரின் ஊடாக அழைத்து வரவைத்துள்ளார். வந்தபோது அந்த நபரிடம் தமது பணப்பை தொடர்பில் விசாரித்த போது, அவர் கீழே கிடந்து எடுத்த பணப்பை ஒன்றை யாழ்.தபாலகத்தில் ஒப்படைத்ததாகத் தெரிவித்துள்ளார்.

இதன் பின்னர் குறித்த நபரிடமிருந்து அடையாள அட்டைப் பிரதியைப் பெற்றுக் கொண்டு விட்டு அவரை வீடு செல்ல அனுமதித்துள்ளனர்.

இதனையடுத்து மறுநாள் யாழ்.தபாலகம் சென்று உரிய அடையாளங்களைத் தெரிவித்து பணப்பையைப் பெற்றுப் பார்த்த போது, தானியங்கி பண வரவு அட்டையை காணவில்லை. இதனால் பாதிக்கப்பட்ட நபர், தமது வங்கிக் கணக்கை சென்று ஆராய்ந்த போது, 20 ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட தொகைக்கு பொருள் வாங்கப்பட்டுள்ளதாக, வங்கி உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ய முன்னர், குறித்த புரோட்பாண்ட் விற்பனையாளரை தொலைபேசி ஊடாக, தமது இடத்திற்கு பாதிக்கப்பட்ட நபர் அழைத்துள்ளார். இதனையடுத்து அங்கு வந்த புரோட்பாண்ட் விற்பனையாளர், தாம் யாழ்.நகர ஹோட்டல் ஒன்றில் குறித்த பண வரவு அட்டையைப் பயன்படுத்தி நண்பர்களுடன் மது அருந்தியதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், குறித்த பணத்தொகையை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் திருப்பித் தருவதாகவும், பொலிஸ் நிலையம் செல்ல வேண்டாம் என்றும் மன்றாட்டமாகக் கேட்டுள்ளார். இதனையடுத்து அவரை பாதிக்கப்பட்ட நபர் கால அவகாசம் வழங்கி வீடு செல்ல அனுமதித்துள்ளார். (த-வ)

# அச்சுவேலி தெற்கில் விழிப்புக் குழு

அச்சுவேலி தெற்கில் அண்மையில் நடைபெற்ற முகமூடி ஆயுததாரிகளின் கொள்ளைச் சம்பவத்தை அடுத்து விழிப்புக் குழு அமைக்கப்படுகின்றது.

அச்சுவேலி தெற்கு விழிப்புக் குழுவின் ஆரம்பக் கூட்டம் இன்று திங்கட்கிழமை மாலை 5.30 மணிக்கு அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது. கூட்டத்தில் அச்சுவேலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமன் ஜெயசிங்கா கலந்துகொண்டு விழிப்புக்குழுவின் செயற்பாடு தொடர்பாக கருத்துரை வழங்கவுள்ளார்.

அச்சுவேலி தெற்கு சிவில் பாதுகாப்புக் குழுவின் ஏற்பாட்டில் அச்சுவேலி தெற்கு விழிப்புக்குழு அமைக்கப்படுகின்றது. (ற-ஐ-11)

திருமண வாழ்த்துக்கள்

எழுத்தாளர் செ.யோசப்பாலா அவர்களின்
இரண்டாவது புதல்விக்கு இலக்கிய
நண்பர்களின் வாழ்த்துக்கள்
இன்று யாழ் மரியன்னை பேராலயத்தில்
இல்லறத்தில் இணையும் புதுமணத்
தம்பதிகளான
திரு. திருமதி
அருண் - ஸர்மலா
அவர்களின்
இல் வாழ்க்கை சிறப்புற நல்வாழ்த்துக்கள்
இலக்கிய நண்பர்கள்



திறப்புவிழா அழைப்பு

நிகழும் மங்கல கரமான மன்மத வருடம் பங்குனி
மாதம் 11 ஆம் திகதி இன்று (11.04.2016) திங்கட்கிழமை
காலை 9.10 முதல் 10.00 மணிவரை உள்ள சுபமுகூர்த்த
வேளையில் இல.923, கே.கே.எஸ். வீதி,
தட்டாதெருச்சந்தியில் அமைந்துள்ள
எமது புதிய வெதுப்பகமான
"ஐங்கரன் வெதுப்பகம்"
திறப்பதற்கு இறைவன் திருவருள் கூடி இருப்பதால்
அவ் விழாவிற்கு அனைவரும் வருகை
தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
உரிமையாளர் - இ.பொன்குமார்
077 728 3705

# மதுபோதையில் சாரத்தியம் 37 ஆயிரம் ரூபா அபராதம்

## சமுதாய சீர்திருத்தத்துக்கும் உத்தரவு

மதுபோதையில் வாகனம் செலுத்திய 3 பேருக்கு பருத்தித்துறை நீதிமன்றம் 37 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன், சமுதாய சீர்திருத்தப்பணியிலும் ஈடுபடுமாறும் உத்தரவிட்டது.

மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் 3 பேர் நெல்லியடிப் போக்குவரத்துப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு எதிராகப் பருத்தித்துறை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கு விசாரணைகள் நீதிமன்றில் நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் இடம்பெற்றது.

அதன்போது குறித்த நபர்கள் தம் மீதான குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து 2 பேருக்கு தலா 11 ஆயிரத்து 500 ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. அத்துடன் 10 மணித்தியாலங்கள் சமூக சீர்த்திருத்தப் பணியில் ஈடுபடுமாறும், மற்றைய நபருக்கு 15 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து 50 மணித்தியாலங்கள் சீர்திருத்தப் பணியில் ஈடுபடும்மாறும் நீதிவான் உத்தரவிட்டார். (ற-ஐ-4,108)

# இலங்கையில் ஐ.நா. அலுவலகம் அமைக்கும் கோரிக்கை நிராகரிப்பு

கொழும்பு, ஏப்.11

இலங்கையில், ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகத்தின் கிளை ஒன்றை அமைக்கும் கோரிக்கையை அரசு நிராகரித்துள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

தமது காரியாலயமொன்றை அமைப்பது குறித்து ஜெனிவாவை தலைமையகமாகக் கொண்டு இயங்கி வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை இலங்கை அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது. எனினும், இவ்வாறு இலங்கையில் காரியாலயமொன்றை அமைக்க இடமளிக்கப்பட முடியாது என்று அரசு தெரிவித்துள்ளது என்று சிங்கள ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இவ்வாறு காரியாலயம் அமைப்பதன் மூலம் இலங்கையின் உள் விவகாரங்களில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை தலையீடு செய்யக் கூடிய சாத்தியம் காணப்படும் என்று அந்த ஊடகம் தெரிவித்துள்ளது.

புலம்பெயர் புலி ஆதரவு தரப்புக்களே இவ்வாறு காரியாலயம் அமைக்கப்பட வேண்டுமென மனித உரிமைகள் சபையிடம் யோசனை முன்வைத்துள்ளன என்றும் அந்த ஊடகம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (ற-ஐ-5)

# பாடசாலைக் கிணறு விசமிகளால் சேதம்

தனியார் நிறுவனம் ஒன்றால் வவுனியா ஓமந்தை மகிழங்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் கட்டப்பட்டுக் கையளிக்கப்படவிருந்த குழாய்க் கிணறு விசமிகளால் சேதமாக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

ஓமந்தை மகிழங்குளம் கிராமத்துக்குத் தனியார் நிறுவனம் ஒன்றின் உதவியுடன் அமைத்துக் கொடுக்கப்படவிருந்த குழாய்க் கிணறு, பாடசாலை மாணவர்களின் குடிதண்ணீர்த் தேவையைக் கவனத்திற் கொண்டு பாடசாலை வளவில் அமைத்துக் கொடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதனடிப்படையில் குறித்த பாடசாலை வளாகத்தில் குழாய்க் கிணறு அமைக்கப்பட்டது.

இந்தக் குழாய்க்கிணற்றின் கட்டுமானப் பணிகள் நேற்று முன்தினம் மாலை நிறைவடைந்தநிலையில், அதிகாலை கிணற்றின் கட்டுக்கள் இடித்து உடைத்து சேதமாக்கப்பட்டுள்ளன. (த-ஐ-21)

# ஜப்பான் புலனாய்வுப் பணிப்பாளர் இலங்கைக்குத் திடீர்ப் பயணம்

ஜப்பானின் தீவிரவாத முறியடிப்பு புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் அகிரா சுகியாமா இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார். பாதுகாப்பு அமைச்சில் கடந்த வியாழக் கிழமை பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சியை இவர் சந்தித்துப் பேச்சு நடத்தினார். இரு தரப்பு நலன்கள் சார்ந்த விவகாரங்கள் பற்றி இந்தச் சந்திப்பில் பேசப்பட்டது என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேவேளை, புலனாய்வுப் பிரிவு மற்றும் பாதுகாப்புத்துறை உயர்மட்ட அதிகாரிகளுடனும், ஜப்பானின் தீவிரவாத முறியடிப்பு புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் அகிரா சுகியாமா பேச்சு நடத்தியிருந்தார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

தீவிரவாத முறியடிப்பு விவகாரத்தில் இருதரப்பு ஒத்துழைப்புக்களை வலுப்படுத்திக் கொள்வதற்கே இவர் இலங்கைக்கு வந்துள்ளார்.

கடந்த ஆண்டு நவம்பர் 13 ஆம் திகதி பாரிஸில் நடத்தப்பட்ட தீவிரவாதத் தாக்குதலை அடுத்து, கடந்த டிசெம்பர் மாதம் ஜப்பான் இந்த தீவிரவாத முறியடிப்பு புலனாய்வுப் பிரிவை ஆரம்பித்திருந்தது. ஜப்பானியப் பிரதமர் பணியகத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தப் புலனாய்வுப் பிரிவு, ஜப்பானிய வெளிவிவகார அமைச்சின் வழிகாட்டுதலில் செயற்படுகிறது.

ஜப்பானில் மே மாதம் அபிவிருத்தி அடைந்த நாடுகளின் (ஜி-7) தலைவர்களின் உச்சி மாநாடு நடைபெறவுள்ளது. இதில் பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான், அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இந்த மாநாட்டில் பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டுக்கான பாதுகாப்பை ஏற்படுத்தும் நோக்கிலேயே ஜப்பான், அவசர அவசரமாக தீவிரவாத முறியடிப்பு புலனாய்வுப் பிரிவை உருவாக்கியுள்ளது.

இந்த நிலையிலேயே, தீவிரவாத முறியடிப்பு துறையில் இலங்கையின் ஒத்துழைப்பையும் பெற்றுக் கொள்ளும் முயற்சியில் ஜப்பான் ஈடுபட்டுள்ளது. ஜப்பானின் தீவிரவாத முறியடிப்பு புலனாய்வுப் பிரிவுக்கு பயிற்சி அளிக்க இந்தியா ஏற்கனவே முன்வந்துள்ளது. (ற-ஐ-5)

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம், நல்லூர் செட்டித்தெரு
லேனில் இரண்டு பரப்புக்காணி
விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 614 6434

கார் விற்பனைக்கு 077 356 4950
நல்ல நிலையில் உள்ள 14-XXXX
இலக்கமுடைய Mitsubishi Galant கார்
விற்பனைக்குண்டு.

சிறுநீரகம் தேவை
இரு சிறுநீரகங்களும்
செயலிழந்துள்ள 58 வயது
தந்தைக்கு "A" அல்லது "O"
இரத்த வகையைச் சேர்ந்த
ஒருவரிடமிருந்து(வயது 25 முதல் 55
வயது வரை) சிறுநீரகம்
எதிர்பார்க்கப்படுகின்றது. தகுந்த
சன்மானம் வழங்கப்படும்.
011 2364 865, 077 6925 226

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழிலிருந்து திருமலை சென்ற இ.போ.ச. பஸ்ஸின் மீது கல் வீச்சு

யாழ்ப்பாணம், ஏப்.11

யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலை நோக்கிச் சென்று கொண்டிருந்த இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ் மீது வவுனியா நகருக்கு அண்மையில் வைத்து கல் வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதனால் பஸ்ஸின் சாரதி காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.




யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலை நோக்கி நேற்றுக் காலை புறப்பட்டுச் சென்ற பஸ், வவுனியா நகரைத் தாண்டி திருகோணமலை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் போதே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

சிறுவன் ஒருவனே வீதியில் நின்று கல் வீசி எறிந்துள்ளான். அதனால் பஸ்ஸின் சாரதியின் பக்கம் உள்ள கண்ணாடி உடைந்துள்ளது. உடனடியாக அந்தச் சிறுவனைப் பிடிப்பதற்கு பஸ்ஸில் உள்ளவர்கள் முயற்சித்தபோது, சிறுவன் மோட்டார் சைக்கிளில் ஏறித் தப்பிச் சென்றுள்ளான் என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ற-ஜ-5)

# பொதிகள் அனுப்பும் முகவர் நிலையங்களில் மோசடிகள்

## யாழ்.மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் ரி.வசந்தசேகரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.11

யாழ். நகரப் பகுதியில் நடைபெறும் வெளிநாட்டுப் பொதிகள் சேவைகள் முகவர் நிறுவனங்களில் அதிகளவான மோசடிகள் நடைபெறுகின்றன என முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று யாழ்.மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் ரி.வசந்தசேகரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.நகரப்பகுதியில் இயங்கிவரும் சில வெளிநாட்டுப் பொதிகள் சேவை நிலையங்களிலேயே மோசடிகள் நடைபெறுகின்றன என்று அதிக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.- என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது யாழ்.நகரில் இருந்து வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவைகளை தம்முடைய உறவினர் மற்றும் நண்பர்களுக்கு அனுப்புபவர்களின் எண்ணிக்கை அதிகரித் துள்ளது. இவர்கள் அனுப்பும் பொருள்கள் உரியவர்களை சென்றடையாது விடின் அதற்கு வெளிநாட்டுக்கான பொதிகளை அனுப்பும் முகவர்களே பொறுப்புடையவர்களாக உள்ளனர்.

உரிய நேரத்தில் பொதியைச் சேரவேண்டிய முகவரியில் சேர்க்காமை, பொருள்களைச் சேதப்படுத்துதல் மற்றும் அனுப்பிய பொதிகள் உரியவரைச் சென்றடையாமல் காணாமல் போதல் முதலான வகைகளில்மோசடிகள்நடைபெறுகின்றன என்று முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன-என்றுஅவர் சுட்டிக்காட்டினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இதுவரையில் ஐந்து முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. முறைப்பாடுகள் மீதான விசாரணைகள் நடைபெற்று நட்டஈடுகளும்உரியவர்களுக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன. பொதிகள் சேவையில் ஈடுபடும் முகவர்கள், வெளி நாடுகளுக்கான பொதிகள் ஐந்து நாள்களில்சென்றடையும்என்று கூறுகின்றனர். அதனால் பொதிகளை வெளிநாடுகளுக்கு அனுப்புபவர்கள் 7 அல்லது 8 நாள்களில் கெட்டுப் போகும் வகையிலான சில பொருள்களையும் பொதிகளில் அனுப்புகின்றனர்.

பொதிகள் குறிப்பிட்ட நாள்களுக்குள் சென்று சேராமல் தாமதிப்பதால் இந்தப் பொருள்கள் பழுதடைந்து போகின்றன. பொதிகளை உரிய கவனத்துடன் கொண்டு செல்வதில்லை. அதனால் உடையும் தன்மையுடைய பொருள்கள் சேதமடைகின்றன.

அதுமட்டுமின்றி சில பொதிகள் உரிய முகவரிக்கு கிடைக்காமல் போகின்றன. இவற்றுக்கு என்ன நடந்தது என்பது எவருக்கும் தெரிவதில்லை. சில நாடுகளில் சில பொருள்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான பொருள்களைச் சிலர் பொதிகளில் வைத்து அனுப்புகின்றனர். இது சட்டவிரோதமான செயற்பாடு. அதற்கான அனைத்துப் பொறுப்பும் பொதிகளை அனுப்பும் முகவரையே சாரும். பொதிகள் தொடர்பான சில முறைப்பாடுகளில் உரிய சிட்டைகள் பொதி அனுப்பியவர்களிடம் இல்லாத நிலையில் முறைப்பாடுகளை விசாரணை செய்வது கடினமானதாக உள்ளது. இனிவரும் காலங்களில் வெளிநாடுகளுக்கான பொதிகளை அனுப்புபவர்கள், பொதிகளை அனுப்பும் கால எல்லையையும், பொதிஉரிய முகவரிக்குச் சென்றடையும் காலம் என்பவற்றையும் எழுத்து மூலம் முகவர்களிடம் இருந்து பெறுவது விசாரணைகளை முன்னெடுப்பதற்கு எமக்கு உதவியாக இருக்கும்.

வெளிநாட்டுப் பொதிகளில் செய்யப்படும் இந்த முறை கேடுகள், விசாரணைகள் மூலமாக நிரூபிக்கப்படும் பட்சத்தில் பொதிகள் சேவையில் ஈடுபடும் முகவர்கள் பொதி அனுப்புநருக்கு பொதியின்பெறுமதி மற்றும் பொதி அனுப்புவதற்காக செலவிடப்பட்டபணப் பெறுமதி என்பவற்றை மீளக்கையளிக்கும் நிலைமை உருவாகும்.- என்றார். (ற-ஜ-ரி5)

# விவசாயிகளின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் வழங்கத் திட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.11

யாழ். மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் புலமைப் பரிசில் நிதியத்தின் ஊடாக வருமானம் குறைந்த விவசாயக்குடும்பத்தைச்சேர்ந்த உயர்தரம் கற்கும் மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று யாழ். மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் இ.நிஷாந்தன் தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தில் 2014 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜீ.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்து 2017 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு தலா 20 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது.

புலமைப் பரிசில் பெறும் நபர், முழுநேர விவசாயத்தைத் தொழிலாகக் கொண்ட குடும்பத்தைச் சேர்ந்தவராகவும், பெற்றோரில் ஒருவராவது யாழ். மாவட்டத்தில் உள்ள ஏதாவது ஒரு கமக்காரர் அமைப்பில் உறுப்பினராகவும் இருத்தல் வேண்டும்.

தகைமையுடையவிண்ணப்பதாரிகள் தமது எல்லைக்குட்பட்ட கமநல சேவைகள் நிலையத்தில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று தத்தமது கமக்காரர் அமைப்பின் பரிந்துரையுடன், உரிய கமநலசேவைகள் நிலைய கமநல அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் தமது சுய விவரங்கள் அடங்கிய விண்ணப்பத்தைக் கல்வி கற்கும் பாடசாலை அதிபர் மற்றும் கிராம சேவையாளர் ஆகியோரின் பரிந்துரைக் கடிதத்துடன் எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன்பு நேரடியாகக் கையளிக்கப்பட வேண்டும். இந்தத் திட்டத்தில் வறுமை, குடும்பநிலை, பிள்ளையின் கல்வித் தரம், மீள்குடியமர்வு என்பன கருத்தில் எடுக்கப்பட்டு தெரிவு நடைபெறும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ற-ஜ-ரி)




# தெல்லிப்பழை முதலாம் வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.11

கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக பல கடிதங்களையும், மனுக்களையும் முன்வைத்த போதும் இதுவரை தெல்லிப்பழை முதலாம் வீதியைப் புனரமைக்க வலி.மேற்கு பிரதேச சபை முன்வரவில்லை என மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இதுகுறித்து பிரதேச சபைச் செயலாளரிடம் கேட்டபோது குறித்த வீதியை அமைப்பதற்கு நிதி கிடைத்தால் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

தெல்லிப்பழை பிரதான வீதியில் இருந்து ஆரம்பித்து வட்டு தெற்கு நாவலடி வைரவர் கோயில் வரை சென்று ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் வட்டுமத்திய கல்லூரி ஆகியவற்றை இணைக்கும் பிரதான பிரதேச சபை வீதியாக இந்த வீதி காணப்படுகின்றது. வீதியைத் திருத்துமாறு அந்த வீதியைச் சேர்ந்த 100 பேர் கையெழுத்திட்டு வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ் வரன், அரச அதிபர் நா.வேதநாயகன், பிரதேச செயலாளர் அ.சோதிநாதன் ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டு சென்றோம் என்று மக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த பிரதேச செயலாளர் திருமதி குணவதி சண்முகலிங்கம் –

போதுமான நிதி வசதிகள் இல்லை. இந்த வருடம் பெறப்படும் வருமானத்தைக் கருத்திற் கொண்டும் ஏற்கனவே திட்டமிடப்பட்ட செயற்பாடுகளை முடித்து மிகுதியாக அமையும் நிதியில் இருந்து மேற்படி வீதியை மீள்புனரமைப்புச் செய்யத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது – என்றார். (ற-ஜ-ரி5,50)

## யாழ்ப்பாண மாவட்டத்தின் கல்வி வீழ்ச்சிக்கு ஆசிரியர் வகுப்பில் இல்லாமையே காரணம்

### வடக்கு மாகாண ஆளுநர் தெரிவிப்பு

வவுனியா, ஏப்.11

யாழ்ப்பாண மாவட்டத்தில் முதலிடத்திலிருந்த கல்வி இன்று கீழ் நிலையில் இருப்பதற்கு ஆசிரியர்கள் வகுப்பறையில் இல்லாமையே காரணம் என வடக்கு மாகாண ஆளுநர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த புதன்கிழமை வவுனியா மாவட்ட செயலகத்தில் மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பாக மாவட்ட அரச அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடிய போதே வடக்கு மாகாண ஆளுநர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மாவட்டத்தின் கல்வி அபிவிருத்தி பற்றி கலந்துரையாடப்பட்ட போது வவுனியா தெற்குவலயக்கல்விபணிப்பாளர் அன்ரன் சோமராஜா, வவுனியா மாவட்டத்தில் பல பாடசாலைகளில் விஞ்ஞானம் மற்றும் கணித பாடத்துக்கு ஆசிரியர்கள் பற்றக்குறை இருக்கின்றது என்று சுட்டிக்காட்டியிருந்தார்.

பணிப்பாளருடைய கருத்துக்கு பதிலளித்த ஆளுநர் அனைத்துப் பாடசாலைகளிலும் இவ்வாறான பிரச்சினைகள் உள்ளன என்று தெரிவித்ததுடன், வவுனியா பாடசாலைகளில் மேலதிகமாக உள்ள ஆசிரியர்களை பற்றாக்குறையாக உள்ள பாடசாலைகளுக்கு உடனடியாக இடமாற்றம் செய்யுமாறு அறிவுறுத்தினார்.

அத்தோடு பணிப்பாளரின் நிர்வாக திறனின்மையே பிரச்சினைக்குக் காரணம் எனவும் சுட்டிக்காட்டினார். பணிப்பாளர் ஆசிரியர்களுக்கு தண்டனை மற்றும் இடமாற்றம் வழங்காமையே இவ்வாறான பிரச்சினைகளுக்கு காரணம் எனவும், கல்விப் பணிப்பாளர் ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்காத பட்சத்தில் பணிப்பாளருக்கு தன்னால் இடமாற்றம் வழங்கப்படும் எனவும், ஆளுநர் நேரடியாக எச்சரித்தார்.

உலகளாவிய ரீதியில் 30 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் இருக்கின்றனர். இலங்கையில் 17 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர்கள் உள்ளனர். இலங்கையில் ஆசிரியர்களுக்காக பெருந்தொகை பணம் செலவு செய்யப்படுகின்றது. ஆசிரியர்கள் நீண்ட விடுமுறைகளை எடுக்கின்றமை, வெளிநாடுகளுக்கு செல்கின்றமை காரணமாக மாணவர்களின் கல்வி பரிதாப நிலையில் உள்ளது.- என்றும் ஆளுநர் குறிப்பிட்டார். (ற-ஜ-21)

# சிதம்பரபுரம் முகாம் மக்களுக்கு அதே இடத்தில் நிரந்தரக் காணி

### வடக்கு மாகாண புனர்வாழ்வு அமைச்சு தெரிவிப்பு

வவுனியா, ஏப்.11

வவுனியா சிதம்பரபுரம் முகாமில் வாழ்ந்த 193 குடும்பங்களுக்கு அதே இடத்தில் தலா 4 பரப்புகளைக் கொண்ட நிரந்தர காணி உறுதிப்பத்திரங்கள் மிக விரைவில் கையளிக்கப்பட உள்ளன என்று வடக்குமாகாண புனர்வாழ்வு அமைச்சு தெரிவித்துள்ளது.

வடக்குமாகாண புனர்வாழ்வு அமைச்சால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நாட்டின் அசாதாரண சூழ் நிலைகளால் உள்ளக மற்றும் இந்தியாவுக்கு இடம்பெயர்ந்து நாடு திரும்பியவர்களில் 193 குடும்பங்கள் கடந்த 20 வருடங்களாக சிதம்பரபுரம் முகாமில் வாழ்ந்து வருகின்றனர். அடிப்படை வசதிகளின்றி வாழ்ந்து வரும் இவர்களின் நிலை தொடர்பில் வடக்கு மாகாண புனர்வாழ்வு அமைச்சின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதை தொடர்ந்து, இவர்களுக்கு குடும்பமொன்றுக்குத் தலா நான்கு பரப்புக் காணி வழங்கப்பட்டுள்ளதுடன் அதற்கான காணி அனுமதிப்பத்திரமும் வழங்கப்படவுள்ளன. காணி அனுமதிப் பத்திரமும், தற்காலிக வீடுகள் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வடக்குமாகாண புனர்வாழ்வு அமைச்சர் ப.சத்தியலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார். இவர்கள் குடியிருப்பதற்கான தற்காலிக வீடுகள் அமைப்பதற்கு மாகாண புனர்வாழ்வு அமைச்சு ஒவ்வொரு குடும்பத்துக்கும் தலா 69 ஆயிரம் ரூபா நிதி வழங்கியுள்ளது- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ற-ஜ-21,402)




சம்பூர் அனல் மின் நிலையத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து, மூதூர் கிழக்கில் உள்ள கிராமங்கள் தனித்தனியாக முன்னெடுக்கும் கவனவீர்ப்பு போராட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை கடற்கரை சேனை கிராமத்தில் இடம் பெற்றது. (ற-ஜ-40)

## சுகாதார சேவை பயிற்சிக்கு பதிவு செய்யுமாறு அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.11

குடும்ப சுகாதார சேவைப் பயிற்சி நெறிக்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள் தாதியர் கல்லூரியில் தம்மைப் பதிவு செய்து கொள்ளுமாறு தாதியர் கல்லூரி அதிபர் கேட்டுள்ளார். அவர்களுக்கான இரு வாரகால பயிற்சி ஆரம்பிக்கப்படவுள்ளதால் தெரிவு செய்யப்பட்டவர்களை இன்றைய தினம் பதிவு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது.

முதலில் இவர்களுக்கு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இரு வார கால பயிற்சி நெறியும், பின்னர் ஒரு வருட காலம் தாதியர் கல்லூரியிலும் பயிற்சி நெறியும் வழங்கப்படவுள்ளது. எனவே, இப்பயிற்சி நெறிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு தாதியர் கல்லூரி அதிபர் ரஜுலாதேவி வல்லிபுரநாதன் கேட்டுள்ளார்.

ஆர்.சுமித்ரா- தொண்டமனாறு, ஜி.செந்துசா- தாளையடி, கே.கம்சனா- வியாபாரிமூலை, பி.சத்தியாங்கனி- ஆனைக்கோட்டை, கே.விதுர்சனா- மிருசுவில், எஸ்.சங்கீதா- பண்ணாகம், கே.நிகோசனா- சாவகச்சேரி, ஜி.தனுசா- தெல்லிப்பழை, என்.யதீஸ்வரி- காரைநகர், எம்.மேகலா- சுழிபுரம், ஜே.ஜெயாளினி- குடத்தனை, என்.நிறஞ்ஜனா- சுழிபுரம், பி.டிலக்சனா- வரணி, எஸ்.டென்சியா- அச்சுவேலி, வி.டக்சனா- உரும்பிராய், ஆர்.துளசி- கோப்பாய், ஆர்.அபிசா- கோப்பாய், எஸ்.சனுசியா- கொழும்புத்துறை, எஸ்.துவாரகா- அளவெட்டி, எஸ்.கீர்த்திகா- கைதடி, வை.யசிதா- எழுதுமட்டுவாழ், வி.அன்ரனிற்றா- ஆனைக்கோட்டை, வி.நிறோசினி- உரும்பிராய், வி.செந்திதா- மீசாலை, ஆர்.தமிழினி- மாதகல், எம்.சிவகௌரி- பண்டத்தரிப்பு, ஜே.ஜனனி- வண்ணார் பண்ணை, பி.யாழினி- கொக்குவில், பி.றாஜினி- அரியாலை, கே.துசியந்தி- முல்லைத்தீவு, வி.ஜெயமீரா- பருத்தித்துறை, ஆர்.சுபீனா- சித்தங்கேணி, எஸ்.பவானி- பருத்தித்துறை, எஸ்.லாவண்யா- புலோலி, பி.தயாபரசிங்கம்- சண்டிலிப்பாய், கே.றூபிகா- சுன்னாகம், கே.விபியா- மல்லாகம், வி.ஜெனிலா- பருத்தித்துறை, ஆர்.திசாந்தினி- பண்டத்தரிப்பு, எஸ்.கிருசாந்தினி- பண்டத்தரிப்பு, ஆர்.அபிராமி- யாழ்ப்பாணம், ஆர்.றேனுகா- மானிப்பாய், டி.ராஜதுரை- யாழ்ப்பாணம், கே.நிதர்சினி- கீரிமலை, வி.ஜனுசா- பருத்தித்துறை ஆகியோரையே தாதியர் கல்லூரியில் பதிவு செய்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ற-ஜ-4)

திருமண வாழ்வில் பொன்விழா

50th ANNIVERSARY

11.04.2016

இருமனம் இணைந்து
திருமண வாழ்வில்
ஐம்பது ஆண்டுகள்
நிறைவு காண்
கலாபூஷணம்
திரு.யோசேப் இருதயராசா
புளோரன்ஸ் ராணி இருதயராசா
தம்பதியினர்
வளமோடு நலம் சூழ்ந்து
பல்லாண்டு காலம்
புவிமீது வாழ
உளமார வாழ்த்துகின்றோம் !

Golden Jubilee

வாழ்த்துவோர்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.



"சித்திராலயா", 4ம் குறுக்குத் தெரு,
பருத்தித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 65,000 வீடமைப்புத் தொடர்பில் மதிப்பீடுகள் பெறப்பட்டனவா?

### மீள்குடியேற்ற அமைச்சரிடம் சுமந்திரன் எம்.பி. கேள்வி

யாழ்ப்பாணம், ஏப். 11
வடக்கு-கிழக்கு மாகாணங்களில் நிர்மாணிக்கப்படவுள்ள 65ஆயிரம் வீடுகள் தொடர்பாக உள்ளூர் ஒப்பந்தகாரர்களிடம் வீடமைப்புக்கான செலவுத் தொகை பற்றிய மதிப்பீடுகள் பெறப்பட்டு ஆலோசனை நடத்தப்பட்டுள்ளதா என எதிர்வரும் 21ஆம் திகதிக்கு முன்னர் பதில் வழங்குமாறு மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம் சுவாமிநாதனிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

> குறித்த நிறுவனத்துக்கு இந்த வீடமைப்புத் திட்டத்தை வழங்குவதற்கான கேள்வி மனு எவ்வாறு கோரப்பட்டது? என்பது குறித்தும் தெளிவுபடுத்தவேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் நிர்மாணிக்கப்படவுள்ள 65 ஆயிரம் வீடமைப்புத் திட்டம் தொடர்பான உண்மை நிலவரங்களை வெளிப்படுத்துமாறு வலியுறுத்தித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதனுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். கடந்தவியாழக்கிழமை அனுப்பி வைக்கப்பட்ட இந்தக் கடிதத்தில், போரால் பாதிக்கப்பட்ட மக்கள் பயன்பெறக் கூடிய வகையில், இந்த வீடுகள் அமைக்கப்படுகின்றனவா என்பது குறித்தும், வீட்டுத்திட்டத்துக்காகப் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்ட முறை குறித்தும், உள்ளூர் ஒப்பந்தகாரர்களிடம் வீடமைப்புக்கான செலவுத் தொகை பற்றிய மதிப்பீடுகள் பெறப்படதா என்பது தொடர்பிலும் விளக்கமளிக்கவேண்டும்.அதேவேளை குறித்த நிறுவனத்துக்கு இந்த வீடமைப்புத் திட்டத்தை வழங்குவதற்கானகேள்வி மனு எவ்வாறு கோரப்பட்டது? அந்த நிறுவனத்திடமே இந்தப் பொறுப்பை கைளிப்பது தொடர்பாக எவ்வாறு முடிவெடுக்கப்பட்டது? என்பது குறித்தும் தெளிவுபடுத்தவேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது.

அத்துடன், சர்வதேச பொது அமைப்புக்களின் உதவியுடன் வடக்கு -கிழக்கில் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வரும் வீடமைப்புத் திட்டங்கள் தொடர்பாகவும் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். (த-ரி5-ரி4)

# ஓய்வூதியர் தமது அனுபவங்களை நூல் வடிவில் வெளியிட வேண்டும்

### வலி.கிழக்கு பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் தெரிவிப்பு

அச்சுவேலி,ஏப்.11
அனுபவமும் - ஆற்றலும் வாய்ந்த ஓய்வூதியர்களின் தனித்துவமான சேவை சமூகத்துக்குக் காத்திரமான முறையில் பயன்பட வேண்டும். அந்த வகையில் ஓய்வூதியர்கள் தமது அனுபவங்கள் மற்றும் ஆலோசனைகளை நூல் வடிவில் வெளியிட்டு சமகாலத்திலும், எதிர்காலத்திலும் பயன்படுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். -இவ்வாறு வலி.கிழக்கு பிரதேச செயலக பிரதித்திட்டமிடல் பணிப்பாளர் திருமதி தபேந்திராதேவி ஜெயராசா தெரிவித்தார்.

அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் வலி.கிழக்கு பிரதேச செயலக பிரிவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

சங்கத்தின் தலைவர் கே.வி. குணசேகரம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அவர் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மூத்த பிரஜைகள், ஓய்வூதியர்கள் சமூகத்தால் மதிக்கப்பட வேண்டியவர்கள். அவர்களுக்கு உதவுவதற்கு சமூகத்தில் உள்ள அனைவரும் தன்னார்வ நிலையில் முன்வர வேண்டும். ஓய்வூதியர்களின் நலன்களைப் பேணுவதிலும், அவர்களுக்கு முதுமையில் பல்வேறு நலனோம்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும் அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியம் நிறுவன மயப் படுத்தப்பட்ட நிலையில் செயற்றிட்டங்களை மேற்கொண்டு வருகின்றது.

ஓய்வூதியர்கள் தமது சேவையால் பல்வேறு அனுபவங்களையும் பெற்றவர்கள். அவர்களது அனுபவங்கள் சமகாலச் சமூகத்துக்கும் எதிர் காலச் சமூகத்துக்கும். முன்னு தாரணமாக இருந்து வழிநடத்தக்கூடியவை. எனவே ஓய்வூதியர்கள் தமது சேவைக்கால அனுபவங்கள் மற்றும் உதாரணங்களை சம காலச் சமூகத்துக்கும், எதிர் காலச் சந்ததிக்கும் கையளிக்க வேண்டும். அந்த வகையில் அவற்றைத் தொகுத்து நூல் வடிவில் வெளியிட முன்வர வேண்டும்.

அது காத்திரமான பணியாகவும், பங்களிப்பாகவும் நின்று நிலைக்கும்.

ஓய்வூதியர்கள் மற்றும் மூத்த பிரஜைகள் தமது சேவைக் காலத்தில் மற்றும் வாழ்க்கைப் பாதையில் கண்டு கொண்டவைகளை மற்றும் தாம் சமூகத்துக்கு செய்தவைகளை ஆக்கங்களாகத் தொகுத்து ஆவணமாகச் சமூகத்துக்குக் கையளிக்க வேண்டும் -என்றார். (ற-ஐ-11)

# தொழிற்சங்கம் என ஏமாற்றும் சிலரே நிர்வாகத்தை குழப்புவதற்கு முயற்சி

### இ.போ.ச. யாழ். சாலை முகாமையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.11
தொழிற் சங்கம் எனக் கூறி கடந்த காலங்களில் கடமையைச் செய்யாமல் விடுமுறை பெற்றுச் சம்பளம் பெற்ற சிலர், மீண்டும் எமது நிர்வாகத்தை குழப்பி சம்பளம் வழங்க முடியாத நிலையை உருவாக்கி, ஊழியர்களின் குடும்பங்களை நடு வீதிக்கு நிறுத்த முயற்சிக்கின்றனர். - இவ்வாறு தெரிவித்தார் யாழ். சாலை முகாமையாளர் செ.குலபாலசெல்வம்.

இலங்கை போக்குவரத்துச் சபை சாலை முகாமையாளருக்கு எதிராக தொழிற்சங்க நடவடிக்கையை விரைவில் ஊழியர் சங்கங்கள் இணைந்துமேற்கொள்ளவுள்ளன என்று செய்திகள் வெளியாகி இருந்தன. அது தொடர்பாக வழங்கியுள்ள விளக்கத்திலேயே முகாமையாளர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

தங்களை ஊழியர் சங்கம் என்று கூறிக் கொள்ளும் சிலர் காலத்துக்குக் காலம் ஏற்படுகின்ற அரசியல் மாற்றத்துக்கு ஏற்பத் தம்மை மாற்றிக் கொள்பவர்களாகவே உள்ளனர். அவர்கள் தாம் புரிகின்ற குற்றங்களை மறைப்பதற்காகவே தொழிற்சங்கங்களை ஆரம்பிக்கின்றனர். தொழிற்சங்கவாதியையும் சாதாரண ஊழியரையும் ஒன்றாக மதித்து நடுநிலையாகத் தீர்ப்பு வழங்குகின்ற சாலை முகாமையாளரை மாற்றுவது இவர்களது குறி. அதற்காக தொழில் திணைக்களம் மனித உரிமைகள் ஆணைக்குழு போன்றவற்றை நாடி இவர்களது பக்கம் நியாயம் இல்லை எனக் கண்டு அவர்களால் புறக்கணிக்கப்பட்ட பின்னர், எதுவும் செய்ய முடியாத நிலையில் சாலை முகாமையாளரின் கௌரவத்துக்கு இழுக்கு ஏற்படக் கூடிய வகையில், பத்திரிகைகளுக்குத் தகவல் வழங்குகின்றனர். அதற்காக அவதூறு குற்றச்சாட்டின் கீழ் வழக்குத் தொடர உள்ளோம். எதுஎவ்வாறாயினும்பொதுமக்கள் மத்தியில் இலங்கை போக்குவரத்துச் சபைகௌரவத்தை பாதுகாக்கும்பொருட்டு சிலவற்றை அறியத் தருகின்றேன்.

இலங்கை போக்குவரத்துச் சபை சாரதிகளுக்கு வீதி ஒழுங்கு தொடர்பான சரியான அறிவுறுத்தல் வழங்கப்பட்டே வீதியில் விடப்படுகின்றனர். இதுவரை எந்த ஒரு சாரதிக்கும் வேகமாக சாரத்தியம் செய்யவில்லை என்று தண்டம் விதிக்கப்படவில்லை. மாறாக வேகமாக சாரத்தியம் செய்த சாரதிகளுக்கே தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. எமது யாழ்.சாலையீல் 99 வீத ஊழியர்கள் சபைக்கு விசுவாசமாக கடமை செய்கின்ற போது, தொழிற்சங்கம் எனக் கூறி கொண்டு கடந்த காலங்களில் கடமைசெய்யாது கடமைவிடுமுறைபெற்று சம்பளம் பெற்ற சிலர் நிர்வா கத்தை குழப்பி மீண்டும் சம்பளம் வழங்க முடியாத நிலையை ஏற்படுத்த முயல்கின்றனர். எமது ஊழியர்களின் குடும்பங்களை வீதியில் விடுவதற்கு நான் தயாரில்லை. - என்று தெரிவித்துள்ளார். (ற-ரி5)

## அரச ஊழியர்களுக்கு ஆக்கத்திறன் போட்டி


யாழ்ப்பாணம், ஏப்.11
அரச ஊழியர்களுக்கிடையில் வருடாந்தம் நடத்தப்படும் ஆக்கத்திறன் போட்டிக்கான 2016 ஆம் ஆண்டுக்கான ஆக்கங்கள் உள்ளக அலுவல்கள் வடமேல் மாகாண அபிவிருத்தி மற்றும் கலாசார அமைச்சால் கோரப்பட்டுள்ளன.

அரச அலுவலகங்களில் நிரந்தர சேவையில் உள்ள ஊழி யர்கள் தமது ஆக்கங்களை நிறுவனத் தலைவரின் பரிந்துரையுடன், எதிர்வரும் மே மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு அமைச்சின் செயலாளர் டி.சுவர்ணபால அறிவித்துள்ளார்.

சிறுகதை, சிறுவர் கதை, பாடலாக்கம், கவிதை, சித்திரம், குறுநாடகம் போன்ற ஆக்கங்களை அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. போட்டியில் வெற்றி பெறும் ஆக்கங்களுக்கு பெறுமதிமிக்க பணப் பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-ஐ-9)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னையின் மடியில் 10 . 01 . 1956



அம்பாளின் அடியில் 16 . 03 . 2016

அமரர் சண்முகம் மகேஸ்வரநாதன்
(இத்தாலி அங்கிள்)

கடந்த 16.03.2016 இறைபதம் அடைந்த அமரர் சண்முகம் மகேஸ்வரநாதன் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (11.04.2016) திங்கட்கிழமை காலை 08 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அகிலாண்டேஸ்வரி அருளகம் (சிவன் கோயில்) நடைபெற்று. அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம். அத்துடன் அவரின் மரணச் செய்தி அறிந்து நேரிலும் தொலைபேசியிலும் அனுதாபம் தெரிவித்தோருக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரம் வெளியிட்டவர்களுக்கும் எல்லா விதத்திலும் உதவி புரிந்தவர்களுக்கும் துயரத்தில் பங்கு கொண்டவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ச. மகேஸ்வரநாதன்
இல. 31, அம்மன் கோயில் வீதி,
பண்டாரிக்குளம். வவுனியா.
077 633 0865

மனைவி, பிள்ளைகள்,
சகோதரங்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வட மாகாண சபைத் தீர்வு வரைவு அப்பாவித் தமிழர்களை பாதிக்கும்

## மகிந்த அமரவீர கூறுகின்றார்

கொழும்பு,ஏப்.11
இனவாதத்தை மாத்திரமே நோக்காகக் கொண்டு செயற்படும் வட மாகாண சபை உறுப்பினர்களின், தீர்வுத் திட்ட வரைவு அப்பாவித் தமிழ் மக்களையே பாதிக்கும் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையால் வெளியிடப்பட்டுள்ள தீர்வுத் திட்ட வரைவு தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

> போர் நிறைவுக்குக் கொண்டு வரப்பட்டு, நாட்டில் நல்லிணக்கம் உருவாகி வரும் நிலையில் வட மாகாண சபை முன்மொழிந்துள்ள யோசனை பொருத்தமற்ற ஒன்று.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
போர்நிறைவுக்குக்கொண்டு வரப்பட்டு, நாட்டில் நல்லிணக்கம் உருவாகி வரும் நிலையில் வட மாகாண சபை முன்மொழிந்துள்ள யோசனை பொருத்தமற்ற ஒன்று. இனவாதத்தை மாத்திரமே நோக்காகக் கொண்டு செயற்படும் வட மாகாண சபை உறுப்பினர்களின் இந்த யோசனை அப்பாவித் தமிழ் மக்களையே பாதிக்கும்.

வட மாகாண சபையில் முன்மொழியப்பட்டுள்ள யோசனை உண்மையில் தவிர்க்கப்பட வேண்டியதொரு விடயமாகும். அனைவரையும் இலங்கையர் என்ற நிலைப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கான முயற்சிகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னெடுத்து வருகின்றார்.

அத்துடன், புதிய அரசியலமைப்பில் அதிகாரப் பகிர்வுக்கு அதிகூடிய முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், இவ்வாறான தொரு முன்மொழிவு அனைத்து முயற்சிகளையும் பாதிப்புக்குள்ளாக்கும். எவ்வாறாயினும், வட மாகாண சபையின் இந்த யோசனையை தென் மாகாண மக்கள் வித்தியாசமான கண்ணோட்டத்திலேயே பார்ப்பார்கள். இதன் காரணமாக அநாவசியமாக இனவாதம் தூண்டப்படுவதற்கு வாய்ப்புக்கள் இருக்கின்றன. இதேவேளை- இனவாதத்தை மறந்து ஒரு நாடு என்ற நினைப்பில் செயற்பட்டு வரும் நிலையில் இவ்வாறானதொரு தீர்மானம் தேவையற்றது- என்றார். (ற-ஐ-5)

# தோல்விக்குப் பின்னரும் மகிந்த பாதுகாப்புடனே வீடு சென்றார்

## சுட்டிக் காட்டுகின்றார் மைத்திரி

கொழும்பு, ஏப். 11
மக்களால் கடந்த ஜனவரி 8 ஆம் திகதி தோல்வியடையச் செய்யப்பட்ட மகிந்த ராஜபக்சவை இரண்டு உலங்கு வானூர்திகளில் பாதுகாப்பாக வீடு செல்ல வழியனுப்பிய சம்பவம் உலகிலேயே இலங்கையில் மாத்திரமே நிகழ்ந்துள்ளது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.



நான் ஜனாதிபதியாகியதால் இது இவ்வாறு நடந்தது. மாறாக, மகிந்த ஜனாதிபதியாகி நான் தோல்வியடைந்திருந் தால் எனக்கு என்ன நடந்திருக்கும் என்று யோசிக்கத் தேவையில்லை எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

மொனராகல மாவட்ட பிபில தொகுதியில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
குண்டு துளைக்காத கார்களையும், தனது பாதுகாப்புக்கு தான் விரும்பிய இராணுவ அதிகாரிகளையும் அழைத்துக் கொண்டுதான் மகிந்த தோல்வியடைந்த பின்னர் சென்றார். ஜனாதிபதியாகிய நான் நினைத்திருந்தால், இதனை வேறு விதத்தில் அமைத்திருக்கலாம்.

இவ்வாறெல்லாம், செய்ததன் பின்னர் தான், சில எதிர்க் கட்சி உறுப்பினர்கள் மகிந்தவின் பாதுகாப்பைக் குறைத்ததாக கூக்குரல் இடுகின்றனர்- என்றார். (ற-ஐ-5)

# கூட்டு எதிரணி உறுப்பினர்கள் மைத்திரி பக்கம் தாவத் திட்டம்

கொழும்பு, ஏப்.11
மகிந்த ராஜபக்ச ஆதரவுக் கூட்டு எதிர்க் கட்சியில் இடம்பெற்றுள்ள சுமார் 20 நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பக்கத்துக்குத் தாவ உள்ளனர் என்று கொழும்பு ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

கூட்டு எதிர்க்கட்சியில் இடம்பெற்றுள்ள, சிறிய கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களே, மைத்திரிபாலசிறிசேன அரசுடன் இணைந்து கொள்ளவுள்ளனர் என்றும், அவர்களுக்குப் பதவிகளும் வழங்கப்படலாம் என்றும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

கூட்டு எதிர்க்கட்சியில் இடம்பெற்றிருந்த மனுச நாணயக்கார மற்றும் லக்ஸ்மன் செனிவிரத்ன ஆகியோர், கடந்தவாரம், பிரதி அமைச்சர் மற்றும் இராஜாங்க அமைச்சர்களாகப் பதவியேற்றிருந்தனர். இவ்வாறு மேலும் பலர் அரசுடன் இணையலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையே, கடந்த வாரம், மூன்று புதிய அமைச்சர்கள் நியமிக்கப்பட்டதையடுத்து, தற்போதைய அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்களின் மொத்த எண்ணிக்கை 92 ஆக அதிகரித்துள்ளது. இது குறித்து விமர்சனங்கள் எழுந்துள்ள நிலையில், மேலும் புதிய அமைச்சர்கள் நியமிக்கப்படலாம் என்று அரசு தரப்பில் இருந்து தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதனிடையே, கூட்டு எதிர்க்கட்சியைச் சேர்ந்த வேறு எவரும் அரசுடன் இணைய மாட்டார்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். (ஐ-5)


## மரண அறிவித்தல்

### திருநாவுக்கரசு இராசரத்தினம்

(உரிமையாளர் - விஜிதா அரிசி ஆலை தாவடி)



வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பில் வசித்தவரும் தற்போது தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு இராசரத்தினம் 09.04.2016 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு - தர்மலெட்சுமி தம்பதிகளின் புதல்வனும், காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - அன்னம்மா தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற யோகம்மாவின் அன்புக் கணவரும், கல்யாணி, கலைவாணி, கருணாகரன் (லண்டன்), இரவீந்திரன் (லண்டன்), விஜிதா ஆகியோரின் அன்புத் தந்தையும், Dr.சுரேஸ் (ஆதாரவைத்தியசாலை - தெல்லிப்பழை), சுபாஸ்சந்திரன் (கணக்காளர் - கொழும்பு), பிரகலதா (லண்டன்), பதிமிலா (லண்டன்), காண்டீபன் (பொறியியலாளர்- கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும், நகுலேஸ்வரி (லண்டன்), நவரட்ணம்மா (லண்டன்), மங்கையர்க்கரசி (ஓய்வுபெற்ற ஆசிரியர் - இந்து மகளிர் கல்லூரி), சீவரத்தினம் (நந்தலாலா இரும்பகம்), மீனாம்பாள் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற வர்களான துரைசிங்கம் (A.K.T), சிவஞானம் (A.K.S), திருநாவுக்கரசு (விகடகவி, ஓய்வுநிலை மாவட்ட நீதிபதி) மற்றும் தயாளன் (கணக்காளர் - கனடா), சிவகலை, காலஞ்சென்ற பேரம்பலம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், யோகம்மாவின் உடன்பிறவா சகோதரனும், ஹரினி, பிருந்தாபன், சுபாங்கி, டீபக் ,சுஜின், பிறிட்டிகா, சுகந், கிஷான், அக்ஷியா, அக்ஷானா, கிரிசாந் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (11. 04.2016) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.47, ஆனைக் கோட்டைவீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல்: குடும்பத்தினர்.
Dr.சுரேஸ்

077 762 9337






# நாடாளுமன்ற உறுப்பினர்களின் புத்தாண்டுக் கொண்டாட்டங்கள்

கொழும்பு, ஏப். 11
எதிர்வரும் வியாழக்கிழமை கொண்டப்படவுள்ள சிங்கள - தமிழ் புத்தாண்டை முன்னிட்டு, நாடாளுமன்ற மைதானத்தில் நேற்று முன்தினம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்ற பாரம்பரிய புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் இடம்பெற்றன.

இதன்போது, ஐக்கிய தேசியக் கட்சியின் இளம் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டாரவும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஆனந்த அளுத்கமகேயும் தலையணைச் சண்டையில் ஈடுபட்டனர்.

புத்தாண்டுக் கொண்டாட்டத்தில் மற்றொரு பகுதியாக நடந்த துடுப்பாட்டப் போட்டியில், அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா துடுப்பெடுத்தாடினார். (ற-ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றிணைந்து செயற்பட தமிழ்க் கட்சிகள் இணக்கம்

## தமிழர் பிரச்சினைகள் தொடர்பில்

**கொழும்பு, ஏப்.11**

**தமிழ் மக்களின் பொதுவான பிரச்சினைகள் தொடர்பில் ஒன்றிணைந்து கூட்டமைப்பாகச் செயற்படுவதற்கு ஏழு தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் இணக்கம்கண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.**

ஈ.பி.டி.பியின் கொழும்பில் உள்ள அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை அந்தக் கட்சியின் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே இந்த இணக்கப்பாடு காணப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் ஜனநாயக மக்கள் காங்கிரஸ் சார்பில் அதன் ஸ்தாபகத் தலைவரும், முன்னாள் பிரதியமைச்சருமான பிரபா கணேசன், தலைவர், நல்லையா குமரகுருபரன், ஈழ விடுதலை இயக்கத்தின் சார்பில் என்.சந்திரமோகன், ஈரோஸ் சார்பில் இரா.பிரபாகரன், சிறிரெலோ சார்பில் ப.உதயராசா, தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் அதன் நிர்வாகச் செயலாளர் இரா.சங்கையா, போராளிகள் ஜனநாயகக் கட்சியின் சார்பிலான பிரதிநிதிகள் என்று ஏழு அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டுள்ளனர்.

கடந்த மாதம் 26 ஆம் திகதி தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் வீ.ஆனந்தசங்கரியின் கொழும்பிலுள்ள அலுவலகத்தில் முதலாவது கூட்டம் இடம்பெற்றிருந்தது. அதன் தொடர்ச்சியாகவே இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

இதன்போது தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு, தேர்தல் முறை மாற்றம், அரசியல் கைதிகள் விவகாரம், காணாமற் போனோர் விவகாரம், வடக்கு கிழக்கில் அமைக்கப்படவுள்ள வீடமைப்புத் திட்டம், மீள்குடியேற்ற விவகாரம், மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பளப் பிரச்சினை மற்றும்காணிப்பிரச்சினை என்பவை தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் பொதுவான பிரச்சினைகள் குறித்து தமிழ் அரசியல்கட்சிகள்ஒன்றிணைந்து கூட்டமைப்பாக செயற்பட வேண்டியதன்அவசியம்குறித்தும்இதன் போது கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

இந்த நிலையில் தமிழ் மக்களின்பொதுவானபிரச்சினைகள் தொடர்பில் ஒன்றிணைந்து கூட்டமைப்பாக செயற்படுவது என்றும் அடுத்த கூட்டங்களின் போது ஏனைய அரசியல் கட்சிகளையும் இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பது எனவும் இந்தக் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ர-ஜ-5)

# இலங்கை – சீன உறவைப் பிரிக்க மூன்றாம் தரப்பினரால் முடியாது

## சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் தெரிவிப்பு

**கொழும்பு, ஏப்.11**

சீன அரசு இலங்கைக்கு உதவிகள் வழங்கும் போது அரசியல் கட்சிகளையோ அல்லது தனி நபர்கள் தொடர்பிலோ அவதானம் செலுத்துவதில்லை. மாறாக இலங்கை வாழ் மக்களையும் நாட்டின் கொள்கையையும் மாத்திரமே கருத்தில்கொண்டு செயற்படும். அத்துடன் இருநாடுகளுக்கிடையிலான உறவை மூன்றாம் தரப்பினரால் சீர்குலைக்க முடியாது. – இவ்வாறு சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், சீன ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இதன்போதே சீன ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

கொழும்புத் துறைமுக நகர் திட்டத்தை இலங்கை அரசு மீளவும் ஆரம்பிக்கும் தீர்மானத்தை எடுத்தமை குறித்து மகிழ்ச்சி அடைகின்றேன். மேலும் துறைமுக நகரை நாணய மற்றும் பொருளாதார வலயமாக்கும் அரசின் நடவடிக்கை பாராட்டத்தக்கது.

அரசின் வெளிநாட்டு கொள்கை மிகவும் பாராட்டத்தக்கதாகும்.

சீன அரசு இலங்கைக்கு உதவிகள் புரியும் போது அரசியல் கட்சிகளையோ அல்லது தனிநபர்கள் குறித்தோ அவதானம் செலுத்துவதில்லை. மாறாக இலங்கை வாழ் மக்களையும் நாட்டின் கொள்கையை மாத்திரமே கருத்திற்கொண்டு செயற்படும்.

> “இலங்கையில் இரண்டு பிரதான கட்சிகளும் ஒன்றிணைந்து தேசிய அரசை நிறுவியுள்ளமை அரசியல் வரலாற்றில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.”

2014 ஆம் ஆண்டு என்னுடைய இலங்கைக்கான பயணமும், கடந்த ஆண்டின்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சீனாவுக்கு வருகை தந்ததும் இரு நாட்டு உறவுகளை மேலும் பலமடையச் செய்துள்ளன. மேலும், இலங்கையில் இரண்டு பிரதான கட்சிகளும் ஒன்றிணைந்து தேசிய அரசை நிறுவியுள்ளமை அரசியல் வரலாற்றில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இதன் மூலம் இரு நாடுகளுக்குமிடையில் உறவை மேலும் பலப்படுத்த முடியும் என்று நான் நம்புகின்றேன்.

தொழிற்சாலை வலயங்களை உருவாக்கி புதிய தொழில்நுட்ப யுகத்தை நோக்கி இலங்கை பிரவேசமாகும் செயற்பாடு பல்வேறு நன்மைகளைக் கொண்டு வந்து சேர்க்கும். இதனை இலக்காகக் கொண்டு இலங்கையில் பல்வேறு முதலீடுகளைச் செய்து நாணய உதவிகளை செய்வதற்கு சீன அரசு தயாராகவே உள்ளது.

இதன் முதற்கட்டமாக சிறுநீரக வைத்தியசாலை ஒன்றை நிர்மாணிக்கவுள்ளோம். இலங்கைக்கும், சீனாவுக்குமிடையிலான நட்புறவைச் சீர்குலைப்பதற்கு மூன்றாவது தரப்பினால் முடியாது.– என்றார்.

இதன்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கருத்து வெளியிடுகையில்–


இலங்கையின் அபிவிருத்திநடவடிக்கைகளுக்கு தொடந்தும் உதவிகளை வழங்குவதை நினைத்து நன்றி கூற விரும்புகின்றேன். இலங்கையும், சீனாவும் பூகோள பொருளாதார வளர்ச்சி என்ற இலக்கை நோக்கி பயணிக்கின்றன. இதற்கான சீனாவின் ஒத்துழைப்பு பாராட்டத்தக்கது. கடந்த காலங்கள் தொடர்பில் விமர்சனம் மாத்திரம் செய்யாமல் எதிர்கால இலட்சியத்தை அடைவதே தேசிய அரசின் நோக்கமாகும். ஆசிய பிராந்தியத்தை பலப்படுத்தும்வகையில் இந்து சமுத்திர வலயத்தில் சமாதானத்தை நிலைநாட்ட வேண்டியுள்ளது. இதற்கு சீனாவின் பங்களிப்பு அளப்பரியது–என்றார். (ர-ஜ-5)

# கண்ணீர் அஞ்சலி

## செல்லத்துரை இளங்கோவன் (ராசா)

பிறப்பு 1954.04.18

இறப்பு 2016.04.09



மரமனாய் மனதினிலே நிலைத்திருந்தீர்
மௌனமாய் நீர் எம்மோடு இருந்தாலும்
நீர்பேசும் ஓரிரு வார்த்தைகள்
மனதினிலே நிலைத்திருக்கும் - மாமா
மாற்றான் உடைமை எனதல்ல என்று
நீர் வாழ்ந்தீர் மாமா
மருமகன் என்ற உறவிருந்தாலும்
மகனாய் நினைத்து எனை அழைப்பீர்
மனம்விட்டு அழுதும் என்
இதயத்தை சீர் செய்ய முடியவில்லை மாமா......

**பிரிவால் வாடும்**
**நவரட்ணம் குடும்பம்.**

AL MUGHAM Aluminium Company
**உரிமையாளர்**
**மருமகன் சசிகாந்தன் (டோகா, கட்டார்)**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## சகலருக்கும் சமத்துவம் வழங்கும் அரசமைப்பு அமைவது சாத்தியமா?

நாட்டின் எதிர்கால நன்மை கருதியும், இங்கே வாழுகின்ற சகல தரப்பு மக்களின் உரிமைகளை ஒருசேர பாதுகாப்பதையும் நோக்கமாகக் கொண்டு புதிய அரசமைப்பு ஒன்றை வடிவமைப்பதற்கான முன்னெடுப்புக்களில், பதவியிலுள்ள மைத்திரிபால சிறிசேன-ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இன்றைய அரசு, சில சிறப்பு நடவடிக்கைகளில் இறங்கியிருப்பதை, உள்நாட்டில் மட்டுமல்லாது உலகம் முழுவதிலும் உன்னிப்பாக அவதானிக்கப்பட்டு வருகின்றது.

சிறுபான்மை மக்களான தமிழர்கள் சார்பில் நடத்தப்பட்ட பல்வேறு அரசியல் போராட்டங்கள் பயனற்றுப் போனமையால், உரிமை கோரி சாத்வீக போராட்டங்களில் இறங்கிய எம்மக்கள் இராணுவ மற்றும் பொலிஸ் படையணிகளைக் கொண்டு கொடூர அடக்குமுறைகளுக்கு உட்படுத்தப்பட்டமையாலும், விரக்தியுற்ற தமிழ் இளைஞர்கள் வெகுண்டெழுந்து நடத்திய ஆயுதப் போராட்டங்கள் முடிவுற்றதன் பின்னர், நாட்டைத் தொடர்ச்சியாகச் சீரழித்துக் கொண்டுவரும் தேசியப் பிரச்சினைக்கு ஒரு முடிவைக் காணவேண்டும் என்று பேரினத் தலைவர்கள் சிலரும், அவர்களின் கட்சிகளும் முனைந்திருப்பது, ஒரு வகையில் வரவேற்கத்தக்கதே.

கடந்த காலங்களில் புதிதாக அரசமைப்புக்கள் உருவாக்கப்பட்டதைப் பார்த்திருக்கின்றோம். சிறிலங்கா சுதந்திரக் கட்சி, சிறிமாவோ பண்டாரநாயக்க அம்மையாரின் தலைமையில், 1972 ஆம் ஆண்டளவில் ஆட்சிக்கு வந்தபோதும் இவ்வாறான அரசமைப்பு உருவாக்கப்பட்டதுண்டு.

சோல்பரி அரசமைப்பில் இருந்த 29 ஆவது பிரிவைப் பயன்படுத்தி, தமிழ் மக்கள் இங்கிலாந்திலுள்ள பிரிவி கவுன்சிலருக்கு மேல்முறையீடு செய்யும் உரிமையை இல்லாமல் செய்யும் கபட நோக்கமே அந்த அரசமைப்பில் முக்கியமாக இடம்பெற்று இருந்தமை பழைய கதை. நாடு குடியரசு ஆக்கப்பட்டதால், சிறுபான்மையோர் மேலும் நெருக்குதலுக்குள்ளானார்களே தவிர அவர்களுக்கு எந்தப் பயனும் ஏற்படவில்லை. பின்னர், ஐ.தே.கட்சியின் தலைவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா காலத்தில் உருவான அரசமைப்பும் ஜனாதிபதியின் அதிகாரங்களை அதிகரித்துக் கொள்ளும் நோக்கத்தையே முக்கியமாகக் கொண்டிருந்துள்ளது.

எனவே, இந்தவிதமான கபட நோக்கங்கள் உள்ளடங்காத வகையிலும், சிறுபான்மை மக்களின் உரிமைகளை உறுதியாக நிலைநாட்டுவதாகவும் புதிய அரசமைப்பு அமைய வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், இதய சுத்தியுடனேயே இப்போதைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தமிழ் மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

வடக்கு-கிழக்கு தமிழ் மக்களைப் பொறுத்தவரை தங்களுக்குரிய உரிமைகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதைத் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வந்துள்ளார்கள். அந்த வகையில் தங்கள் சார்பில் மிகத் தெளிவாகவும் அழுத்தமாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது யோசனைகளை முன்வைக்கும் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

தமிழ் மக்கள் பேரவையின் இணைத்தலைவர்களில் ஒருவரும், வடக்கு மாகாண முதலமைச்சருமான க.வி.விக்னேஸ்வரன் மாகாண சபையில் தீர்வுத் திட்டமொன்றை முன்மொழிந்துள்ளார். ஏற்கனவே தமிழ் மக்கள் பேரவையின் மூலமாகவும் ஒரு தீர்வு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. இவை தமிழ் மக்கள் சார்ந்த சில அமைப்புக்களின் யோசனைகள் மட்டுமே. நாடாளுமன்ற அமைப்புக் குழுவில் இவைகள் எவ்வாறு முன்வைக்கப்படும் என்பது தெரியவில்லை. அதேசமயம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆலோசனைகளில் இவைகளும் இடம் பெறுமா என்பதும் இன்னும் தெரியவில்லை.

தங்கள் சார்பிலான உரிமைகளை வென்றெடுப்பதற்காகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மக்கள் தேர்ந்தெடுத்து நாடாளுமன்றம் அனுப்பியுள்ளார்கள். அனைவரும் அதனைப் புரிந்து கொள்ள வேண்டும்.

எதுவானாலும் அரசுத்தலைவர்கள் அடிக்கடி கூறிவருவதுபோல், அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய--அனைவரது உரிமைகளையும் பாரபட்சமின்றி பேணக்கூடிய--அரசமைப்பு ஒன்று உருவாக வேண்டும் என்பதையே சகலரும் விரும்புகிறார்கள்.

இந்த நாட்டில் சிங்களவர் பெரும்பான்மையாக இருக்கிறார்கள். அதனால் தொடர்ந்தும் அவர்களின் தயவிலும், ஆட்சி அதிகாரத்திலும் சிறுபான்மையினர் கொத்தடிமைகள் போல் வாழும் முறையை எவ்வாறு, இந்தத் தலைவர்கள் மாற்றி அமைக்கப் போகிறார்கள் என்பது பெரும் கேள்விக்குறி.

ஆட்சி அதிகாரத்தில் சிறுபான்மையோருக்கும் பங்கு இருக்கும்படி செய்ய இவர்களால் முடியுமா என்பது, ஓர் உருசிகரமான கேள்வி.

உதாரணமாக, இந்த நாட்டின் ஜனாதிபதியாகவோ, பிரதமராகவோ ஏன் நிதி மற்றும் சட்ட மந்திரியாக வரும் வாய்ப்புக்கூட, சிறுபான்மை இனத்தவருக்குக் கிடையாது...!

இந்த நிலையில் எல்லா மக்களும் சமஉரிமையோடு வாழ்வதற்கு எவ்வாறு வழிகாணப்படப் போகின்றது? எனவேதான் தீவிர யோசனைகளின் பின்னர், பல நாடுகளின் ஆட்சி முறைகளை ஆராய்ந்ததன் பின்னர் ஒற்றையாட்சி முறையைவிட இந்த நாட்டுக்கு சமஷ்டி முறையே மிகப்பொருத்தமாக இருக்கும் என்று தமிழர் தரப்பில் முன்மொழியப்படுகின்றது.

அதனை, இனவாதத்துடன் பிணைத்துக் குழப்பி, கருத்துக்களை முன்வைப்பவர்களின் தீர்வுத் திட்டம்தான் என்ன? அனைத்து மக்களும் ஒரேவித உரிமைகளுடன் வாழும் நிலைமையை எவ்வாறு இவர்கள் உருவாக்கப்படப் போகின்றார்கள்? எதிர்வரும் நாள்களிலாவது இவற்றுக்கு விடை கிடைக்குமா? பொறுத்திருந்து பார்ப்போமே...!

# பொய்களும் புனைகதைகளும்

சரா

நாட்டுக்கு இன்று பெரும் அச்சுறுத்தலாக இருப்பது பெருகிவரும் மதுபானப் பாவனை மற்றும் போதைப் பொருள் என்பனவாகும். இலங்கையில் மதுபான விற்பனையில் முதலிடம் வகிப்பது வடபுலமே என்பதை மதுபான விற்பனை சம்பந்தப்பட்ட புள்ளி விவரங்கள் தெளிவுபடுத்தியுள்ளன. அது போக யாழ்ப்பாணம் உள்ளிட்ட மன்னார் பிரதேசங்களிலேயே கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான போதைப்பொருள்கள் அண்மைக் காலமாக கைப் பற்றப்பட்டு வருவதும் நாட்டுக்குப் பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது. வடபுலத்தின் இளைய சமுதாயம் சீர்கெட்டுப் போவதற்கும், யாழ். குடாநாட்டின் பண்பு மிக்க கலாசாரம் சீர்கெட்டு அடி தடி, வழிப்பறிக்கொள்ளை, வாள்வெட்டு, வன்புணர்வுகள் மலிந்து வருவதற்கும் இந்தப் போதைப் பொருள்களும்மதுபானங்களும் முக்கிய பங்கை வகிக்கின்றன என்பதை எவராலும் மறுத்துரைக்க முடியாது. இதேநிலை நாட்டின் வடபுலத்தில் மட்டுமல்ல தென்புலத்திலும் பரவி வியாபித்திருப்பதைக் காணமுடிகிறது. கொலை, கொள்ளை, வழிப்பறி, பெண்கள் மீதான வன்புணர்வுகள் வடக்கு முதல் தென்பகுதி வரை தினம்தினம் அதிகரித்து வருவது மிகத் தெளிவாகத் தெரிகிறது. அந்த வகையில் இலங்கைக்கு மட்டுமல்ல ஒட்டுமொத்த உலகுக்கும் பெருத்த அச்சுறுத்தலாகியிருப்பது இந்தப் போதைப் பொருள்களேயாகும்.

### தேசிய அளவிலான வேலைத்திட்டம்

இத்தகைய பெருத்த அச்சுறுத்தலை முறியடித்து நாட்டின் சமூகங்கள் சீர்திருத்தப் பாதையில் இட்டுச்செல்வதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் தேசிய அளவிலான வேலைத் திட்டமொன்று தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அவரது தலைமையில் தேசிய போதைப்பொருள் ஒழிப்பு செயலணிப் படையொன்றும் கட்டமைக்கப்பட்டுள்ளதோடு அதிவேக நடவடிக்கைகளிலும் அது இறங்கிச் செயற்பட்டு வருகிறது. அவற்றின் பெறுபேறாகத்தான் பல நூறு கோடிகள் பெறுமதியான போதைப் பொருள்கள் வடக்கு, கிழக்கு, தெற்கு அடங்கலான பல பிரதேசங்களில் கைப்பற்றப்பட்டுள்ளதோடு சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். இலங்கையை மையமாகக் கொண்டு உலகளாவிய ரீதியில் போதைப்பொருள் கடத்தல்களை நடத்திவரும் முக்கிய சூத்திரதாரிகளுக்கும்கூட தற்போது வலை விரிக்கப்பட்டிருக்கிறது. நாட்டின் பொருளாதார வளர்ச்சி, கலாசார மேம்பாடு பாதுகாப்பான ஜனநாயகம் மற்றும் நல்லிணக்கம் உருவாக்கப்படுவதற்கு போதைப் பொருளற்ற நாடொன்று பெரிதும் அவசியமானது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் போதைப்பொருள்களுக்கு எதிரான இன்றைய நகர்வுகள் உண்மையில் பாராட்டத்தக்கனவாகும். இத்தகையதொரு நல்ல கருமத்துக்குத் தாமும் தமது பங்களிப்புக்களை வழங்கி நாட்டின் எதிர்காலச் சமுதாயத்தைத் தூக்கி நிறுத்தி தீமைகளைக் களைந்து விடுவதற்கு எதிராக இந்த நாட்டு மக்களின் பிரதிநிதிகள் என்த் தம்மைக் கூறிக்கொள்ளும் அழுக்காறு நிறைந்த தரம் கெட்ட அரசியல் தலைவர்கள் உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களில் கணிசமான ஒரு தொகையினர் இருப்பதும் அவர்கள் நாட்டையும் மக்களையும் பொய்கள் புனைகதைகளைக் கூறித்தவறாகவழிநடத்திச்செல்ல எத் தனித்து வருவதும் உண்மையில் வெட்கக் கேடானதே.

> மைத்திரி-ரணில் நிர்வாகத்தின் கீழ் நாடு இன்று வெளிப் படையாகத் தெரியும் சுமுக நிலையொன்றில் பயணிப்பதை அந்த அரசியல் வாதிகளால் ஜீரணித்துக் கொள்ள இயலாதுள்ளது.

### நாட்டில் சுமுக நிலை

மைத்திரி-ரணில் நிர்வாகத்தின் கீழ் நாடு இன்று வெளிப்படையாகத் தெரியும் சுமுக நிலையொன்றில் பயணிப்பதை அந்த அரசியல்வாதிகளால் ஜீரணித்துக் கொள்ள இயலாதுள்ளது. அதனால்தான் நாட்டு மக்கள் நம்பக்கூடிய புனைகதைகள், பொய்களை உருவாக்கி அவற்றை நம்பச் செய்து இந்த அரசின் செல்வாக்கை சரியச் செய்து பழையபடி தமது செல்வாக்கை நிலைப்படுத்திக் கொள்வதில் அவர்கள் குறியாக நின்று செயற்பட்டு வருகின்றனர்.

பொதுவாகப் போர் இடம்பெற்றிருந்த நாடொன்றில் சுமுக நிலை தோன்றியதன் பின்னர் குண்டுகள், ஆயுதங்கள், கிளைமோர்கள், எறிகணைகள், தற்கொலை அங்கிகள் ஆங்காங்கே, கிடைப்பதும் கண்டறியப்படு வதும் ஒன்றும் அதிசயமான சம்பவங்கள் அல்ல. நாட்டில் போர் முடிவுக்கு வந்ததன் பின்னரான இன்றைய காலகட்டம் வரையிலும் பல சந்தர்ப்பங்களில் இது போன்ற எண்ணற்ற தடயப்பொருள்கள் பொதுமக்களாலும் கண்டறியப்பட்டுள்ளன. இராணுவம், பொலிஸ் மற்றும் புலனாய்ப்புப் பிரிவுகளாலும் தேடிக்கண்டறியப்பட்டுள்ளன. போரின் பின்னர் இவை போன்ற சம்பவங்கள் மிகச் சாதாரணமானவைகளே. இரண்டாம் உலகப் போர் முடிந்து பல ஆண்டுகள் கடந்துள்ள போதிலும், இன்றும் போராயுதங்கள் கண்டெடுக்கப்படுகின்றன. சாவகச்சேரி தனங்களப்புப் பிரதேசத்திலிருந்து மிக அண்மையில் கண்டறியப்பட்டிருந்த தற்கொலை அங்கி உள்ளிட்ட சில வெடிப்பொருள்களும் கூட அந்தச்சம்பவங்களுள் ஒன்றேயன்றி அதிசயமானதல்ல.

ஆனால் கூட்டு எதிர்க்கட்சியென்று தம்மைக் கூறிக் கொள்ளும் கையாலாகாத தரப்பொன்று அரசியல்வாதிகளுக்கு அரசியல் இலாபத்தைத் தேடிக்கொள்ள நன்றாகவே பயன்பட்டிருக்கிறது. நாட்டின் தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது. புலிகள் மீளவும் தலைதூக்கப் போகிறார்கள். அந்தத் தற்கொலை அங்கியும் குண்டுகளும் வெள்ளவத்தைக்குக் கொண்டு செல்லப்படத் திட்டமிட்டுமறைத்து வைக்கப்பட்டிருந்தன. வடக்கில் தமிழீழமொன்று மீண்டும் உருவாகப் போகிறது என்ற புனைகதைகளை, பொய்களை இவர்கள் உருவாக்கி வருகின்றனர். கூட்டு எதிர்க்கட்சியின் தலைவராகக் கருதப்படும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச இதைநல்லதொரு சாதகமாக்கிப் பரப்புரைகளை மேற் கொள்கின்றார். அவரது அடியாள்களான தினேஷ் குணவர்த்தன, வாசுதேவ நாணயக்கார, உதய கம்மன்பில, விமல்வீரவன்ச, ஜீ.எல்.பீரிஸ் போன்றோர் தமது எண்ணக்கருக்களுக்கு ஏற்றவாறு உருவகித்து நாட்டையும் மக்களையும் அச்சுறுத்திவிடும் கருத்து வெளிப்பாடுகளை வெளிப்படுத்தி வருகின்றனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேரலாதன்

# தாமதிக்கப்படும் மீள்குடியமர்வு

நீண்ட போர் ஒன்று இடம்பெற்றதால் மக்கள் அடிக்கடி இடம்பெயர்ந்து செல்ல வேண்டிய அவலநிலை ஏற்பட்டது. சிறுபான்மையினராகிய தமிழ் மக்கள்தான் இடப்பெயர்வினால் பெரிதும் பாதிக்கப்பட்டனர். தமது சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்த இந்த மக்கள் அனுபவித்த இன்னல்கள் ஏராளம். தமது சொத்துக்களை இழந்தமை ஒரு புறமிருக்க, இருப்பதற்கு இடம்தேடி இவர்கள் அங்குமிங்கும் அலைந்து திரிந்தது தான் பரிதாபத்துக்குரியது.

கடந்த 2009 ஆம் ஆண்டு போரை முடிவுக்குக் கொண்டு வந்ததாகக் கூறுகின்றனர். ஆனால் இடம்பெயர்ந்து சென்ற மக்களில் கணிசமானவர்கள் இன்னமும் அகதி வாழ்க்கையே நடத்தி வருகின்றனர். இவர்கள் தமது சொந்த இடங்களில் வாழவே விரும்புகின்றனர். ஆனால் அந்த விருப்பம் சாத்தியமான தொன்றாகக் காணப்படவில்லை.





> போர் இடம் பெற்றபோது இடம் பெயர்ந்த மக்களின் காணிகளில் கணிசமான அளவு படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டது. குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள வலி.வடக்குப் பிரதேசத்தில் இதைக் காண முடிகின்றது.

### காணிகள் ஆக்கிரமிப்பு

போர் இடம்பெற்றபோது இடம்பெயர்ந்த மக்களின் காணிகளில் கணிசமான அளவு படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டது. குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள வலி.வடக்குப் பிரதேசத்தில் இதைக் காணமுடிகின்றது. பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள அந்தப் பிரதேசத்தில் படையினர் விவசாயச் செய்கைகளில் பெருமளவு ஈடுபட்டு வருகின்றனர். கால்நடை வளர்ப்புக்கும் அங்கு குறைவில்லை. இதைவிட உல்லாசவிடுதிகளும், உணவகங்களும் கூட அங்கு அமைக்கப்பட்டுள்ளன. முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் ஆடம்பர மாளிகையும் அங்குதான் அமைக்கப்பட்டுள்ளது. பலாலி விமான நிலையத்தின் விஸ்தரிப்புக்கென பொதுமக்களின் காணிகளில் கணிசமான அளவு கையகப்படுத்தப்படவுள்ளதாக வெளிவந்த செய்திகள் அந்த மக்களைக் கவலையில் ஆழ்த்திவிட்டன. இதற்கு அவர்கள் தமது எதிர்ப்பையும் வெளியிட்டனர். பின்னர் பலாலி விமான நிலையத்தின் விஸ்தரிப்புத் தொடர்பாக ஆராய்வதற்கென இங்கு வருகை தந்த இந்திய நிபுணர் குழு, தற்போதைய நிலையில் வைத்தே விமான நிலையத்தை அபிவிருத்தி செய்யலாமெனக் கருத்து வெளியிட்டதன் பின்னர் கலக்கமடைந்திருந்த அந்த மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர்.

### மக்களை ஏமாற்றும் செயல்கள்

போர் முடிவடைந்து ஏழு ஆண்டுகள் ஆன நிலையிலும் இடம்பெயர்ந்த மக்களை அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்தாது ஏமாற்றி வருவது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. ஏற்கனவே மீள்குடியமர்ந்த மக்களுக்கு வீட்டுத்திட்டங்களை வழங்குவதில் கூட ஏனோதானோ என்ற நிலைதான் காணப்படுகின்றது. இந்திய வீட்டுத் திட்டத்தால் எதிர்பார்த்த பயனைப் பெறமுடியவில்லை. அந்த வீட்டுத் திட்டப் பயனாளிகள் தாம் வீடுகளை அமைத்ததில் பெரும் நிதி நெருக்கடிகளை எதிர்கொண்டதாகக் குமுறுகின்றனர். தற்போது மீள்குடியேற்ற அமைச்சின் ஏற்பாட்டில் அமைக்கப்படவிருந்த 65 ஆயிரம் பொருத்து வீடுகள் கூட பொருத்தமற்றதென ஒதுக்கி வைக்கப்படும் நிலை உருவாகியுள்ளது.

இரும்பினால் ஆன பொருத்து வீடுகள் குளிர் வலய நாடுகளுக்குப் பொருத்தமானவை. ஆனால் இதே வீடுகள் கடும் உஷ்ணத்தால் பாதிக்கப்படும் எமது நாட்டின் வடகிழக்குப் பிரதேசங்களில் அமைக்கப்படுவதை ஏற்றுக்கொள்ளவே முடியாது. இந்த விடயத்தில் மீள்குடியேற்ற அமைச்சர் பிடிவாதமாகவே காணப்பட்டார். ஆனால் வடக்கு மாகாண சபை பொருத்து வீடுகளுக்கு எதிராகத் தீர்மானம் நிறைவேற்றியது மட்டுமல்லாது ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் கடிதங்களை அனுப்பி வைக்க வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டது. தற்போது இந்தத் திட்டத்தைத் தற்காலிகமாக ஒத்திவைக்குமாறு ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார். இதனால் வீடுகளை அமைக்கும் திட்டம் மேலும் தாமதமடையப் போகின்றது. இடம்பெயர்ந்த மக்களே இதனால் பாதிக்கப்படப் போகிறார்கள். ஏற்கனவே அகதி வாழ்க்கைக்குள் உழன்று கொண்டிருக்கும் இந்த மக்கள் மேலும் துன்பங்களை அனுபவிக்கப் போகிறார்கள். இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்களில் பெரும் பான்மையின மக்களுக்கு வீடுகள் அமைக்கப் படவுள்ளதாக அமைச்சரொருவர் உறுதி வழங்கியுள்ளமை நெஞ்சை வருடுகின்றது.

ஆட்சியாளர்கள், இடம்பெயர்ந்து அகதி வாழ்க்கை வாழுகின்ற மக்களின் விடயத்தில் அக்கறையின்றிச் செயற்படுவதை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ளமுடியாது. வெறும் வாய் வார்த்தைகளைக் கேட்டுக்கேட்டு அந்த மக்கள் சலிப்படைந்து விட்டனர். ஆகவே இனியாவது விரைவான மீள் குடியமர்வுக்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

## இதற்கு யார் பொறுப்பு?

முன்பு எமது மூதாதையர் காலத்தில் மாட்டு வண்டிலில், இரவு நேரங்களில் பயணிப்பதாயின் சிவில் சட்ட முறைமைக்கும் தமது பாதுகாப்புக்கும் என, வண்டிலின் துலாவில் அச்சுப் பெட்டியின் கீழ் லாம்பு கட்டப்பட்டிருக்கும். அந்த வெளிச்சத்துடன் எங்கும் சென்று வரலாம், மற்றையது சைக்கிளில் டைனமோ லைற் பொருத்தப்பட்டு, அந்த வெளிச்சத்துடன் எங்கு வேண்டும் என்றாலும் சென்று வரலாம், அப்போது அப்போதைய காலங்களில் வீதிகளில் மின் விளக்குகள் குறைவாகக் காணப்படும் நிலை.

தற்போது பெருந்தெருக்கள் உள்ளூர் வீதிகள், என்பவற்றுக்கு மின்சாரசபை, அல்லது, பிரதேச சபையால் தெருவிளக்குப் போடப்படுகின்றது.

தற்போது அளவெட்டியில் பிரதான வீதிகள், உள்ளூர்சிறு வீதிகள் என்பவற்றுக்குக் கடந்த வருடத்தின் முற்பகுதியில். பிரதேச சபையினரால் மின்விளக்குகள் பொருத்தப்பட்டன. ஆனால் தற்போது கூடுதலான மின் விளக்குகள் ஒளிர்வதில்லை. கீரிமலை நகுலேஸ்வரர் வீதி, ஆலடிச்சந்தியில் இருந்து அளவெட்டிவரையான மின் விளக்குகளும் இதற்குள் அடங்குகின்றன. பகலில் வீதி சரியில்லை.

இரவில் எப்படி இருக்கும் இந்த வீதிகள்? மக்கள் எத்தனை துன்பத்தைத் தாங்குவது? எனவே இந்த மின் விளக்குகளுக்கு வெகு விரைவில் விமோசனம் ஏற்படுமா?

வலிகாமத்தான்

## கவனத்தில் எடுப்பார்களா?

வலி.வடக்கின் ஒரு பிரதேசமாகத் திகழ்ந்து கொண்டிருப்பது அளவெட்டி. அதில் அளவெட்டி மேற்குப் பகுதியில் காணப்படுகின்ற சிறு சிறு வீதிகள் எல்லாம் பிரதேச சபைகளில் முன்வைக்கப்படும் கோரிக்கைகளுக்கு அமைவாக புனரமைக்கப்பட்டு வருவது எவரும் அறிந்ததே. இதில் என்ன விடயம் என்றால் வீதிகள் புனரமைக்கப்படுகின்றபோது, புனரமைக்கப்படுகின்ற வீதிகளில் சில தூரங்கள் விலக்கப்பட்டு வருவதேயாகும். இதற்கு இந்த வீதியும் எடுத்துக்காட்டாக உள்ளது. அதுதான் அளவெட்டி மலை வேம்படியில் இருந்து இறங்கும் வீதியாகும்.

இரண்டு தடவைகள் இதன் வடக்குப் பக்க வீதித் திருத்தத்துக்குப் பின் தம்பனை வீதித்திருத்தம் நடைபெற்றது. ஆனால் இந்த 150 மீற்றர் அளவு மட்டும் திருத்தப்படவில்லை. வீதி வேலை செய்பவர்களிடம் கேட்டால் இவ்வளவுக்கும் எமக்கு வேலை தரவில்லை என்று சாட்டுச் சொல்வார்கள். இவ்வளவு சூனியப் பிரதேசமாகக் காட்சியளிக்கும். இடம் எவருக்குச் சொந்தம்? அதிகாரிகள் இதனைக் கவனிப்பதில்லையா? இந்த வீதியால் மழை காலங்களிலும் சரி கோடை காலங்களிலும் சரி செல்கின்ற பாடசாலை மாணவர்கள், பாதசாரிகள் எனப்பலரும் பலதுன்பங்களுக்கு ஆளாகுவதை அவதானிக்க முடிகின்றது. எனவே பிரதேச சபை இதைக் கவனத்தில் எடுக்குமா?

நலன்விரும்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சீனாவில் 26 ஆயிரம் குங்பூ மாணவர்கள் பங்கேற்ற திடல் நிகழ்ச்சி கடந்த வாரம் நடைபெற்றது. மத்திய சீனாவின் டெங்பெங் நகரில் அமைந்துள்ள தற்காப்புக் கலைப் பாடசாலை மாணவர்களால் இந்தத் திடல் நிகழ்வு நிகழ்த்தப்பட்டது. ஆயிரத்து 500 வருடப் பாரம்பரியத்தைக் கொண்ட ஷாலின் மடத்திற்கு அருகாமையில் அமைந்துள்ளது என்பதுடன், மடத் துறவிகளும் இங்கு குங்பூ கற்றுக் கொடுப்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-ரி4)

# பிரான்சில் வன்முறை

## 200 நகரங்களில் அரசுக்கு எதிராகப் போராட்டம்

பாரிஸ், ஏப்.11
பிரான்ஸில் தொழிலாளர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் சட்டத்தில் மறுசீரமைப்பு மேற்கொள்ள முடிவு செய்துள்ள அரசுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று முன்தினம் நடைபெற்ற போராட்டத்தில் வன்முறை வெடித்தது.

பிரான்ஸில் வேலை இல்லாதவர்களின் எண்ணிக்கை பெருமளவில் அதிகரித்துள்ளது. எனவே அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பாக இதனைக் கட்டுப்படுத்தத் தற்போதைய ஜனாதிபதி பிராங்கோஸ் ஹாலண்டே முடிவு செய்துள்ளார்.

இதன் ஒரு பகுதியாக வாரத்துக்கு 35 மணி நேரங்களுக்கு மேல் உழைக்கும் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் கூடுதல் சம்பளத்துக்குத் தடை விதித்து சட்டத்தில் புதிய திருத்தம் மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் நிறுவனங்கள் கூடுதல் தொழிலாளர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ளும் என அந்த நாட்டு அரசு திட்டமிட்டிருந்தது.

இந்தச் சட்டச் சீரமைப்புக்கு நிறுவனங்கள், தொழிலாளர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். இந்நிலையில் இந்த சட்ட



திருத்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து பிரான்ஸின் முக்கிய நகரங்களில் போராட்டங்கள் நடைபெற்றன.

தலைநகர் பாரிஸ் உட்பட 200 நகரங்களில் நடைபெற்ற இந்தப் போராட்டங்களில் சுமார் ஒரு இலட்சத்து 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.. அவர்களில் பெரும்பான்மையானவர்கள் மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒரு சில இடங்களில் இந்தப் போராட்டங்கள் வன்முறையாக மாறின. இதன் காரணமாக ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் பட்டாசுகளை வெடித்தும் பொலிஸாரை நோக்கிக் கற்களை வீசியும் எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

பதிலுக்குப் பொலிஸாரும் கண்ணீர் புகைக்குண்டைப் பயன்படுத்தி ஆர்ப்பாட்டக்காரர்களை விரட்டியடிக்க முயன்றனர். மேலும் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் காரணமாக பிரான்ஸில் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

இந்தச் சட்டத்திருத்தம் தொடர்பான தீர்மானம் எதிர் வரும் மே மாதம் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படவுள்ளது. இந்த நிலையில் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மிகப் பெரிய அளவில் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட தொழிலாளர் சங்கங்கள் முடிவு செய்துள்ளன.


இந்த ஆர்ப்பாட்டத்தின் வன்முறைக்குப் பின்னனியில் தீவிரவாதம் இடம்பெற்றள்ளது. ஆர்ப்பாட்டத்தில் 7 பேர் காயமடைந்துள்ளனர். 26 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-ரி4)

## மீண்டும் புதிய ஏவுகணையை பரிசோதித்தது வட கொரியா

பியாங்யாங்,ஏப்.11
வடகொரியா கண்டம் விட்டுக் கண்டம் பாயும் புதிய வகை ஏவுகணையை மீண்டும் வெற்றிகரமாகப் பரிசோதித்துள்ளது என வட கொரிய கே.சி.என்.ஏ செய்திகள் தெரிவித்துள்ளன.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தையும் ஏனைய நாட்டு சக்திகளையும் கட்டுப்படுத்த இந்தப் பரிசோதனைகள் நிகழ்த்தப்பட்டுள்ளதாக மேலும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரகசிய தகவல்களின் படி வடகொரிய பதிய ஆயுதங்கள் பலவற்றை உருவாக்கியுள்ளது என அறியப்பட்டுள்ளது.



தற்போது நடத்தப்பட்ட ஏவுகணைப் பரிசோதனை கிம்-யோங்- உன் கட்டளைப்படி, சோஹே ஆய்வு மையத்தில் நடத்தப்பட்டதாக அந்த நாட்டுச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இது அணு ஆயுதத்தைக் காவிக் கொண்டு இலக்கை அடைந்து அவ்விடத்தைச் சாம்பலாக்கக் கூடியது. இந்த ஆயுதம் மூலம் அமெரிக்காவைச் சாம்பல் ஆக்கமுடியும். உலகத்தில் இருந்தே அவர்களை இல்லாது ஒழிக்க முடியும் எனவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (ஐ-ரி4)

## ஜோன் கெரி ஆப்கானுக்கு திடீர் பயணம்

காபுல்,ஏப்.11
அமெரிக்கச் செயலர் ஜோன் கெரியின் திடீர் பயணத்தை அடுத்து ஆப்கானில் ஆங்காங்கே பல குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. தலிபான்களைச் சமாதானப் பேச்சுக்கு அழைப்பு விடுப்பதற்காக அவரது இடம்பெற்றிருந்தது. இதனைக் கண்டிக்கும் வகையில் இந்தத் தாக்குதல்கள் இடம்பெற்றிருந்தன. சேத விவரம் குறித்து எந்தத் தகவல்களும் அதிகாரபூர்வமாகத் தெரிவிக்கப்படவில்லை. ஆனால் அண்மைக்காலமாக தலிபான்கள் அரசையும், இராணுவத்தினரையும் குறிவைத்துத் தாக்குதல்கள் நிகழ்த்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

ஜோன் கெரியின் காபுல் பயணமானது, 2001 ஆம் ஆண்டில் இருந்து போராடிவரும் இஸ்லாமியப் போராளிகளுக்கும், அரசு தரப்புக்கும் இடையில் சமாதானப் பேச்சை ஏற்படுத்தி நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காகும் என பயணம் தொடர்பில் ஜோன் கெரி தெரிவித்துள்ளார்.

மேலும் வன்முறையை முடிவுக்கு கொண்டு வரமுடியும் என நம்புவதோடு, சமாதானத்துக்கான சூழல் நிலவுவதாகத் தாம் நம்புவதாகவும் அவர் தெரிவித்தார். இந்தத் திடீர் வருகை குறித்துக் கருத்துத் தெரிவித்த ஆப்கான் ஜனாதிபதி கானி, ஆப்கான் அரசுக்கு சமாதானம் தேவை. இதனைக் கருத்திற் கொண்டு அமெரிக்கா சமாதான நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றது. அமெரிக்க இராணுவ வீரர்கள் பலர் தமது உறவுகளைத் துறந்து ஆப்கானுக்காகப் போராடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது எனத் தெரிவித்தார்.

அமெரிக்கப் படை வீரர்கள் 9 ஆயிரத்து 800 பேர் ஆப்கானில் பயிற்சிக்காகவும், ஆலோசனை வழங்கவும் குவிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயத்தில் தீ விபத்து

## 102 பேர் சாவு: 325 பேர் காயம்

### கேரளாவில் நடந்த விபரீதம்

புதுடில்லி,ஏப்.11
இந்தியாவின் கேரளாவில் திருவனந்தபுரத்தில் அமைந்த கோலம் மாவட்டத்தில் உள்ள ஆலயம் ஒன்றில் இடம்பெற்ற தீ விபத்தில் 102 பேர் உயிரிழந்ததுடன், 325 பேர் காயமடைந்துள்ளனர். புத்தின் கால் தேவி ஆலயத்தில் நேற்று முன்தினம் அதிகாலை இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

ஆலயத்தில் திருவிழா நடைபெற்று வருவதால் மக்கள் கூடியிருந்த போது இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது. நேற்று முன்தினம் அதிகாலை சுமார் மூன்றரை மணியளவில் வாண வேடிக்கைக்காக கொளுத்தப்பட்ட பட்டாசுகளில் ஒன்று அருகில் இருந்த பட்டாசுக் கிடங்கில் விழுந்துள்ளது. அங்கு சேமித்து வைக்கப்பட்டிருந்த பட்டாசுகளும், வெடி மருந்தும் ஒரே நேரத்தில் பயங்கரமாக வெடித்துச் சிதறியது. இதனால் அந்தக் கிடங்கு அமைந்திருந்த கட்டடம் இடிந்து விழுந்தது.



இடிபாடுகளுக்குள் ஏராளமானவர்கள் சிக்கிக் கொண்டனர். இதைக்கண்டு பீதியடைந்த பக்தர்கள் உயிருக்குப் பயந்து கட்டடங்களுக்குள் தம்மைப் பாதுகாக்க முயன்றனர். எனினும் வெடிவிபத்தில் இருந்து வெளியான ராட்சத தீப்பிழம்பில் சிக்கி ஆண், பெண், சிறுவர்கள், பொலிஸார் உட்பட 102 இற்கும் அதிகமானோர் உடல் கருகி உயிரிழந்தனர்.

தீக்காயமடைந்த சுமார் 325 பேர் கொச்சி மற்றும் அருகில் உள்ள திருவனந்தபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

ஆலயத்தில் இருந்து 2 கிலோ மீற்றர் சுற்றளவில் இந்த வெடி விபத்து சேதத்தை ஏற்படுத்தியது. மீட்புப்பணிகள் நெருக்கடி சூழலுக்குள் இடம்பெற்று வருகிறது. உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கலாம் எனவும் அஞ்சப்படுகிறது. ஆரம்ப கட்ட விசாரணைகளில் ஆலய அதிகாரிகள் பட்டாசு வெடிப்பதற்கான உரிமத்தை பெறவில்லை என தெரிய வந்துள்ளது.

விபத்து குறித்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தனது இரங்கலைத் தெரிவித்ததோடு, காயமடைந்தவர்களை இராணுவ ஹெலி கொப்டரில் மருத்துவமனையில் சேர்க்கும் படி உத்தரவிட்டுள்ளார். நேற்று முன்தினம் மாலை சம்பவ இடத்துக்கு நரேந்திர மோடி சென்று விபத்தை நேரில் பார்வையிட்டதோடு, பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவியை வழங்கும்படியும் தெரிவித்தார்.
(ஐ-ரி4)




## கமரூனை பதவி விலகக்கோரி ஆயிரக்கணக்கானோர் ஆர்ப்பாட்டம்

லண்டன், ஏப்.11
பிரிட்டன்பிரதமர்டேவிட்கமரூனை பதவி விலகக்கோரி ஆயிரக்கணக்கானோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். வரி ஏய்ப்பு செய்து சட்டவிரோத பணப்பதுக்கலில் ஈடுபட்ட உலகத் தலைவர்களின் பெயர்கள், சொத்து விவரங்கள் வெளியிடப்பட்டதில் இருந்து உலக அரசியல் தலைவர்கள் பலர் நெருக்கடிக்குள்ளாகியுள்ளனர். அந்த வரிசையில் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூனை பதவி விலகக்கோரி ஆயிரக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆர்ப்பாட்டத்தில் இறங்கியுள்ளனர்.

பனாமா ஆவணங்கள் தொடர்பான விளக்கத்தைப் பிரிட்டன் பிரதமர் தெரிவித்த பின்னர், அவ்விடத்தைச் சூழ்ந்த 5 ஆயிரம் ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரதமர் பதவி விலக வேண்டும் என்று கோஷம் எழுப்பினர். இதனால் சம்பவ இடத்துக்குப் பொலிஸார் விரைந்தனர்.

ஆர்ப்பாட்டக்காரர் சூழ்வதற்குள் பிரதமர் பாதுகாப்பாக அவ் விடத்தில் இருந்து விலகியுள்ளார். பிரதமரின் இந்த நடவடிக்கை கடும் கண்டனங்களை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது. மக்கள் ஆவேசத்துடன் வரி ஏய்ப்புக்கான கோஷங்களை முன்வைத்தனர். பல்வேறு இடங்களில் மக்கள் ,பதவி விலகக் கோரி ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். (ஐ-ரி4)

## சவூதி - எகிப்தை இணைப்பதற்கு செங்கடலில் பாலம் அமைக்கப்படும்

கைரோ, ஏப்.11
சவூதி அரேபியாவையும் , எகிப்தையும் இணைக்கும் வகையில் செங்கடலின் குறுக்கே பாலம் கட்டப்படும் என சவூதி அரேபியாவின் அரசர் சல்மான் அறிவித்திருக்கிறார். இந்தப் பாலத்தின் மூலம் இரு நாடுகளுக்கும் இடையில் வர்த்தகம் பெருமளவு மேம்படுமென ஓர் அறிக்கையில் அரசர் தெரிவித்துள்ளார்.

எகிப்தின் தலைநகர் கெய்ரோவுக்கு ஐந்து நாள் அரசு முறைப் பயணமாக வந்திருக்கும் அரசர், பயணத்தின் இரண்டாவது நாளில் இந்த அறிவிப்பை வெளியிட்டார். அந்தப் பாலத்துக்கு சவூதி அரசரின் பெயர் வைக்கப்படும் என எகிப்தின் ஜனாதிபதி அப்துல் படா அல் - சிசி தெரிவித்துள்ளார்.

'இந்த வரலாற்று நடவடிக்கையின் மூலம் ஆபிரிக்கா - ஆசியா ஆகிய இரண்டு கண்டங்களும் இணைக்கப்படும். இரு கண்டங்களுக்கும் இடையிலான வர்த்தகமும் முன்னெப்போதும் இல்லாத வகையில் மேம்படும்' என அரசர் சல்மான் தெரிவித்துள்ளார்.

இரண்டு நாடுகளுக்கும் இடையில், செங்கடலின் மீது பாலம் அமைக்கும் திட்டம் இதற்கு முன்பாக பல முறை முன்வைக்கப்பட்டும், உரிய வடிவம் பெறவில்லை. இந்தப் பாலத்தைக் கட்டி முடிக்க மூன்று முதல் நான்கு பில்லியன் டொலர்கள் வரை செலவாகும் என முன்பு மதிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால் தற்போதைய திட்டப்படி எவ்வளவு செலவாகும் என்ற தகவல் இல்லை. எகிப்தின் ஜனாதிபதியாக 2013 ஆம் ஆண்டில் சிசி பதவியேற்ற பிறகு சவூதி அரேபியாவும் பிற வளைகுடா நாடுகளும் கோடிக்கணக்கான டொலர்களை நிதியுதவியாக அளித்துள்ளன. இந்த அறிவிப்பின் பின்னர், இரு நாடுகளுக்கும் இடையில் புரிந்துணர்வுக்கு ஆதாரமாக 17 முதலீட்டு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. இந்தச் சந்திப்பில் 1.7 பில்லியன் டொலருக்கு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன என அரசு தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ-ரி4)

## பல்மைரா நகரில் மக்கள் மீள்குடியமர்வு

டமாஸ்கஸ், ஏப்.11
சிரியாவின் புராதன நகரான பல்மைராவிலிருந்து தப்பியோடிய ஒரு தொகுதி மக்கள் அங்கு மீளக் குடியமரும் நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளனர்.

முக்கிய நகரான பல்மைராவை இஸ்லாமிய அரசு என்று தங்களை அழைத்துக்கொள்ளும் தீவிரவாதிகளிடமிருந்து அரச படையினர் இரண்டு வாரங்களுக்கு முன்னர் மீட்டனர். அங்கு தீவிரவாதிகளால் புதைக்கப்பட்டிருந்த நிலக்கண்ணி வெடிகள் அகற்றப்பட்டதன் பின்னர், அப்பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் அங்கு மீண்டும் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பல்மைரா நகரை கடந்த மே மாதம் ஐ.எஸ். தீவிரவாதிகள் கைப்பற்றியதன் பின்னர், அந்நகரைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் அங்கிருந்து தப்பிச் சென்றனர். பல்மைராவின் பல இடங்கள் சேதமாக்கப்பட்டு அல்லது அழிக்கப்பட்டுள்ளதாக சிரியன் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு அழிக்கப்பட்ட பகுதிகளில் ஐ.நா.வினால் உலக பாரம்பரிய மையம் என்று பட்டியல்படுத்தப்பட்ட, புராதன இடிபாடுகள் மற்றும் நினைவுச் சின்னங்கள் இருப்பதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

10 மாதங்களுக்குப் பின்பு அங்கு பஸ் சேவை இடம்பெற்று வருகிறது. 5 வருடங்களுக்கு முன்னர் பல்மைரா நகரில் 70 ஆயிரம் மக்கள் வசித்து வந்தனர். தற்போது இங்கு நிலவும் போர்ச் சூழல் காரணமாக மக்கள் நாட்டை விட்டு வெளியேறியதுடன், கட்டடங்களும் போரினால் சிதைந்துள்ளன. வீடுகள் அனைத்தும் ஷெல்களையும், தோட்டாக்களையும் தாங்கிய படியுள்ளன. பல்மைரா நகரில் முழுமையாக திருத்த வேலைகள் நடைபெற்று முடியும் வரை மக்களை இரவு வேளைகளில் தங்க இராணுவத்தினர் அனுமதிக்கவில்லை என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் தண்ணீர், மின்சாரம் வசதி என்பன முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவித்தனர். அடிப்படைக் கட்டுமானப்பணிகள் இன்னும் 3 வாரங்களில் நிறைவடைந்ததும், மக்கள் இரவு வேளையில் தங்க அனுமதிக்கப்படுவர் என அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ-ரி4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பரந்தன் மூன்றாம் வா
# திருவருள் மிகு பன்னங்கண்டி
# திராவிட
# சித்திரத்தேர்

புதிய சித்திரத்தேர் நிர்மாணிப்பு
ஸ்தபதி செல்லையா பாலச்சந்திரன்
விஸ்வப் பிரம்ம ஸ்ரீ (குழுவினர்),
ஸ்ரீ காளிஹா சிற்பாலயம்,
கே.கே.எஸ்.வீதி, பூநாறி மடத்தடி, யாழ்ப்பாணம்.

2016.04.14 துர்முகி வருடம் சித்திரைத்
திங்கள் முதலாம் நாள் வியாழக்கிழமை
இரதோற்சவம் (தேர்த்திருவிழா)

## ஆசிச் செய்தி

அழகு வளம் கொழிக்கும் ஈழத்திருநாட்டில் முழந்த வரை தமிழ் காத்து சமயம் வளர்த்து அள்ளிக்கொடுத்து வாழவைக்கும் வடபால் கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடு அன்னை நர்த்தனமாடி அழகோடு வயல்வெளியில் நெல் வளர்க்க பன்னங்கண்டி கிராமத்தில் மருதமரத்தடியின் அழகுச் சோலையில் ஜில்லென காற்று கீதம் இசைக்க இசையின் இசையாக ஆற்றங் கரையில் எமைக் காக்க கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் அருள் மிகு விநாயகப்பெருமானுக்கு சித்திரத்தேர் ஒன்று செய்யவேண்டுமென ஆலய பரிபாலனசபையால் தீர் மானிக்கப்பட்டு 1974 ஆம் ஆண்டு தமிழ் சித்திரை வருடப்பிறப்பன்று ஆலய மகோற்சவ குருக்கள் சிவஸ்ரீ வாசு தேவக்குருக்களின் ஆசியுடன் அவர் வழங்கிய ஆரம்ப நிதியூடாக ஆரம்பிக் கப்பட்ட திருப்பணிக்கு பெரும் பங்காற்றி தேர் திருப் பணிச் சபை தலைவர் திரு.முருகேசு அவர்களும் பரிபாலனசபை செயலாளர் திரு. ப.பத்மநாதன். பொருளாளர் மா.இராமசாமி ஆகியோரும் ஆற்றிய பெரும் பங்களிப்பாலும் அயராத முயற்சியின் பயனாலும் திருப்பணிச்சபையினரதும் இளைஞர் களினதும் பேருதவி வழங்கிய அடியவர்களின் ஒத்துழைப்புடனும் இத் தேரினை வடிவமைத்த கலைஞர் திரு.செ.பாலச்சந்திரன் அவர்கள் உரிய காலத்தில் நிறைவேற்றித்தந்தமையாலும் 11.04.2016 வெள்ளோட்ட நிகழ்வு நடைபெற உள்ளது. இவர்களுக்கு எல்லாம் அருள்மிகு பன்னங்கண்டி விநாயகப் பெருமானின் அருள் கடாச்சம் கிடைக்க எனது ஆசிகளை வழங்கி நிற்கின்றேன். என்றும் இறைபணி எல்லோரும் வாழ்வில் தொடரவேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**ஆலய பரிபாலன சபை தலைவர்,**
**மா.நடராசா**

## தேரேறி எங்கள் தீவினை தீர்ப்பாய் பன்னயம்பதியானே....

அல்லவை அழிந்து நல்லவை நடந்தேற சித்திரத் தேரில் ஆரோகணித்து அருள்மேவும் பன்னக்கண்டி பிள்ளையாரின் சித்திரத்தேர் வெள்ளோட்டம் இன்று நடைபெறவுள்ளமை எம்மையெல்லாம் இறையானந்தத்தில் ஆழ்த்தியுள்ளது.

கிளிநொச்சி மண்ணில் பன்னாங்கண்டிப்பதியில் சீதள மருதுகளும் சிற்றோடை நீர்வளமும் மருதநில இயற்கையும் நிறைந்திருக்கும் சூழலில் எழுந்தருளி அருளாட்சி புரியும் பன்னயம்பதி விநாயகன் சித்திரத்தேரேறி வருதல் தெய்வீக வலிமையன்றி வேறில்லை. எம்பெருமான் வலம் வருகின்றபோது சிற்றூரின் வீதிகள் புனிதமடைகின்றது. அருகிருந்து அருள் வேண்டும் மனங்களின் ஆற்றல் பெருகுகிறது. தேரோடினால் எங்கள் தீவினைகள் அகலும் என்ற மெய்யுணர்வின் பிரவாகம் எம்மிடையே விரவுகிறது. எம்பெருமான் மீதும் ஆன்மீகத்தடம் மீதும் நாங்கள் கொண்டிருக்கின்ற நம்பிக்கையே எங்களின் வாழ்வை அர்த்தப்படுத்தி வருகிறது.

தேரோடும் மருதநிலத்தைச் சூழ்ந்திருக்கும் அல்லவை அகன்று நல்லவை நடந்தேற எம்பெருமானின் திருவருள் எல்லோர் மனங்களுக்கும் அருள்பாலிக்கவேண்டும் என பன்னயம்பதியானின் திருவடிகளைப் பிரார்த்திக்கிறோம்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்கும் உலகமெலாம்"

**சிவஞானம் சிறீதரன்**
**பாராளுமன்ற உறுப்பினர்,**
**யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம், கிளிநொச்சி.**

## அவன் அருளாலே அவன்தாழ் வணங்குவோம்...

கிளிநொச்சிப் பிரதேசத்தினது நீர்வளப் பொக்கிஷமான இரணைமடு குளத்தின் கீழான வாய்க்காலுக்கருகில் அமைந்திருக்கும் மூன்றாம் வாய்க்கால் பன்னங்கண்டி பிள்ளையார் ஆலயமானது எமது திணைக்களத்துடன் மிக நெருக்கமான தொடர்பைக் கொண்டமைந்த பழமை மிக்க ஆலயமாக விளங்குவது எமக்கு கிடைத்த பெரும் பாக்கியமாகவே கொள்கின்றோம். இவ் ஆலயத்தின் தேர்த்திருவிழா சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதற்கு கிடைத்த விநாயகரின் அருளை எண்ணி மகிழ்வடையும் இந்த வேளையில் அதற்குக் கருவியாய் இருக்கும் ஆலய பரிபாலன சபையினருக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

தேடிவரும் அடியவர்களுக்கு நாடி வரம் அருளவென தேரேறிவரும் விநாயகன், சமாதானத்தினையும் சுபீட்சத்தினையும் வழங்கி, அவர்களது வாழ்வை நிறைவாக்க அருள்பாலிக்க வேண்டும் என்று அவன் பாதம் பணிந்து, மீண்டும் இத் தேர்த்திருசவிழா சிறப்புற அமைய வாழ்த்தி அமைகின்றேன்.

" அவன் அருளாலே அவன்தாழ் வணங்கு"

**எந்திரி. என். சுதாகரன்**
**பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் கிளிநொச்சிப் பிராந்தியம்.**

## வாழ்த்துச் செய்தி

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல ஓங்காரத்தின் உட்பொருளான அருள்மிகு விநாயகப் பெருமானானவர் தம்மை வழிபட்டு நிற்கும் அடியார்களுக்கு அருள்புரியும் நோக்கில் எழுந்தருளி வீற்றிருந்து அருள்பாலிக்கும் இடந்தான் பன்னாங்கண்டித் திருக்கோயில். அருள்மிகு பன்னாங்கண்டிப் பிள்ளையார் என்னும் அற்புத திருநாமத்துடன் விளங்குகின்ற திருக்கோயிலானது இயற்கை எழிலுடன் கூடிய தெய்வீகம் நிறைந்த ஒரு திவ்ய ஆலயமாகும்.

பச்சைப்பசேலென்ற நல்ல நெற்பயிர் விளை நிலங்கள் சூழ்ந்திருக்க மேற்குத் திசையில் பன்னாங்கண்டியானும் இருப்பது இதன் விசேட அம்சமாகும். சுமார் அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் ஆற்றங்கரை அரசமரத்தடியில் ஓலையால் வேயப்பட்ட சிறு பந்தலிலே விநாயகர் விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப் பெற்று அடியார்கள் வழிபட்டு வந்தனர்.

ஆன்மீகப் பற்றும் தெய்வீக நாட்டமும் மிக்க அடியவர்கள் விநாயகப் பெருமானுக்கு அழகான முறையில் ஓர் ஆலயம் அமைக்க வேண்டுமென்ற ஆவல் மீதூரப் பெற்றவர்களாய் மிளிர்ந்தனர். அந்தவகையில் அங்கு வாழ்ந்திருந்த அமரர் செல்லத்துரை விதானையார் பிள்ளையாருக்குக் கோயில் கட்டும் திருப்பணியில் திடசங்கற்பம் பூண்டவராய் தம்முடன் அன்பு நெஞ்சம் கொண்ட அன்பர்களைச் சேர்த்துக்கொண்டு திருப்பணியை ஆரம்பித்தார். திருப்பணி சிறப்பாக நடந்தது.

தற்போது ஆலய பரிபாலன சபையினரின் நிறைவான முயற்சியினால் அடியார்கள் பலருடைய ஒத்துழைப்புடன் புதிய வடிவிலான சித்திரத்தேர் ஒன்று உருவமைக்கப்பட்டு இதில் விநாயகப் பெருமான் திருப்பவனி வருகின்ற அற்புதக் காட்சியைப் பார்க்கின்ற பெரும்பேறும் கிடைத்திருக்கின்றது. ஆகவே இன்று புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா சிறப்புற நிகழ எல்லாம் வல்ல பன்னாங்கண்டி விநாயகப் பெருமானை உளமாரச் சிந்தித்து வந்தித்துச் சேவித்து நின்று பெருமகிழ்ச்சியுடன் வாழ்த்துகின்றோம்.

வேழமுகத்து விநாயகரைத் தொழ வாழ்வு மிகுத்து வரும்

**அமரர் செல்லத்துரை விதானையார் குடும்பத்தினர் சார்பாக**
**திருமதி திலகவதி வைரமுத்து**
**பன்னாங்கண்டி, D3 பரந்தன்.**

## ஆலய வரலா

திருமூலர் கண்ட சிவபூமி ஈழமணித்திருநாடாகும். அந்நா
வடபால் குடிகொண்ட புண்ணியப்பகுதிகளாகும் அப்
இரணைமடுத்தாய் சுரந்தருளும் நீர்வளமும் நிலவளமும் செ
யாவும் உறைகின்ற கிளிநொச்சி மாவட்டத்தின் பரந்தன் பதியா
கிராமம். சைவச்சான்றோரும் விவசாய மேன்மக்களு
வருவதைக் காணலாம்.
அத்தகு வளம் பெருகி வருவதற்கும் இறைசித்தம் கூடிய
"ஆற்றங்கரையோரத்தில் அரசமரநிழலிலும் வீற்றிருக்கும்
தீர்க்கும் பிள்ளையார்...." என்ற பாடலடிக்கு அமைவாக ம
செய்திடும் பன்னாங்கண்டிப் பிள்ளையாரை முரசுமோட்டை
இருந்து விவசாய மேன் மக்கள் பசுக்களை நீர் அருந்த
சண்டேஸ்வர நாயனார் போல் பசுக்களையும் களைப்ப
பிள்ளையாரையும் மரத்தடியில் வழிபட்டனர். பின்பு பி
நீர்ப்பாசன பணிப்பாளர் திரு/ திருமதி பாலசுப்பிரமணியம்
வயல் நிலத்தை நன்கொடையாக ஆலயத்திற்கு வழங்கிய
ஆவார்கள்.
பிள்ளையாருக்கு கோயில் கட்ட வேண்டும் என்ற எண்ண
ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் சகோதரியார் வந்து திருமண
ஆகும். அப்பரம்பரைக்குரிய திருவாளர் வி.முத்துக்குமாரு
திருப்பணிச்சபை ஆரம்பிக்கப்பட்டது. அந்த சபைக்கு முத்
செயலாளராக திருவாளர் செல்லத்துரை அவர்களும் பொரு
அப்புத்துரை அவர்களும் உறுப்பினர்களாக திருவா
ப.பரமானந்தம் (ஆசிரியர்) கோப்பாய் சுப்பையா திரு வெள்ள
சி.கந்தையா றூ.றீ.றீ சின்னத்துரை திருமதி சிவபாக்கியம்
இறைபணி ஆற்றிய வேளையில் தலைவர் அவர்களால் அ
பெருமான் ஆலயத்துக்கு அத்திபாரம் இடப்பட்டது. நீண்ட கால
கோயில் இல்லா ஊரில் குடியிருக்கக் கூடாது என்ற கூற்றிற்கு
செல்லத்துரை விதானையார் அவர்கள் உடலால் உள்ளத்தா
அர்ப்பணித்து திருப்பணியை தன்னகத்தே அரும்பணியா
முதன்மையாளர் திருவாளர் செல்லத்துரை விதானையார்.
திருப்பணிச் சபையை ஒருங்கமைத்து ஆவணி பிள்ளை
பெருவிழாவாகக் கொண்டாடி பிள்ளையாரை வழிபட்டு நல்ல
அதனைத் தொடர்ந்து திருவாளர் செல்லத்துரை விதானைய
சபையினரும் இணைந்து அவர்களின் விடாமுயற்சியி
விநாயகப் பெருமானுக்கு பெரும் கோயில் அமைப்பதற்காக
ஆண்டு அக்காலப்பகுதியில் தலைவராக இருந்த தி
விதானையார் தனவந்தர்களின் கொடைகளாலும் அழகு
பொலிவுடன் இன்று ஆலயம் காட்சி அளிக்கின்றது.
இவ்வாலயம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பரம்பரையே
கால்பதிக்க புனித நகராயும் விளங்கும் திருவருட்கூடத்தில்
நித்தியகலாநிதி வேதாகமசிவாச்சாரியார் கைலைநாதக்குரு
கும்பாபிஷேகம் செய்து வைத்த புனிதப்பதியாய் பன்னாங்கண்
ஏற்பட்ட தமிழர் தம் தாயகத்தின் சோதனைகள் வே
அத்தனையும் இழந்து அந்நியமோகத்தில் நலிவுற்று சிதை
பரிபாலன சபையினர் மீளவும் கட்டியெழுப்பி 2011 ஆம்
கும்பாபிஷேகம் நிகழ்த்தி வருகின்ற பெருமையில் இ
காண்கின்றோம். ஸ்ரீகாளிஹா சிற்பாலயம் செல்லைய
குழுவினர்கள் கே.கே. எஸ் வீதி பூநாறி மரத்தடி யாழ்ப்பாண
சிற்பத் தேரினை விநாயகனுக்கு உருவாக்கியுள்ளார்.
இன்றைய வெள்ளோட்டத்தின் 2016 ஆம் ஆண்டு சித்திரை
புதிய தேரினில் பன்னாங்கண்டிப்பிள்ளையார் தேரேறி வந்து
எம்மைப் பீடித்த பீடைகள் மலங்கள் போக்கித் தேரினில்
பெருமான் அருள் பெற்றிட அனைத்து அடியார்களும் அ
வையகத்தில் வளம் பெருகி வாழ திருவருளை கடைத் தெ
சித்திரத் தேரினை கண்டு தரிசனம் செய்திடுவோம்.

ஆ

உரிமையாளர்: செல்வராசா சந்திரகுமார்
**அம்மை அப்பன்**
**அரிசிஆலை**
D3, மருதநகர், கிளிநொச்சி.

உரிமையாளர்: இலட்சுமணன் சுதாஜீவ்
**திவாணி**
**அரைக்கும் ஆலை**
D3, மருதநகர், கிளிநொச்சி.

உரிமையாளர்: மாயழகு செல்வகுமார்
**செல்வகுமார்**
**பல்பொருள் வாணிபம்**
D3, பன்னாங்கண்டி, கிளிநொச்சி.

சிவரத்தினம்
**பிள்ளையார்**
D3, பன்னாங்கண்டி

உரிமையாளர் : சு.விக்னேஸ்வரன்
**பிள்ளையார் பான்சி**
எண் - 34 அங்காடி உட்புறம், A9 வீதி, பரந்தன்.
077 594 8504
அழகு சாதனப் பொருள்கள், சிறுவர்களுக்கான விளையாட்டுப் பொருள்கள், பாதணிகள், பாட சாலைப் பொருள்கள், அலங்காரப் பொருள்கள், மற்றும் பரிசுப் பொருள்கள் முதலான அனைத்தினையும் நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

உரிமையாளர்: எஸ்.சந்திரன்
**பிள்ளைச்செல்வன்**
**மோட்டஸ்**
திருத்தகம் (அன்) சுத்திகரிப்பு நிலையம்
முல்லை வீதி, பரந்தன்.

**S.V முருகேசு ஏக விநியோகஸ்தர்**
1. பல்பொருள் வாணிபம் ம்4 எமல்சன் வீதி, மருநகர், கிளிநொச்சி (யாழ்.கிளை)
2. Litro GAS A-9 வீதி, கரடிப்போக்கு சந்தி, கிளிநொச்சி (யாழ்./கிளை)
3. Caltex oil D4, எமல்சன் வீதி, மருநகர், கிளிநொச்சி (யாழ்/கிளை)
4. Serendib flour (7star மாவு) D4, எமல்சன் வீதி, மருநகர், கிளிநொச்சி (யாழ்/ கிளை)
5. கல்,மண் நீக்கப்பட்ட சிவப்பு நாட்டரிசி, பச்சையரிசி மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனை செய்யப்படும்.
Cavadi mark camphor D4, எமல்சன் வீதி, மருதநகர், கிளிநொச்சி (யாழ்/ கிளை)

**வேலும் மயிலும் ந**
எமது நவீன மயப்படுத்தப்பட்ட அ
சில்லறையாகவும் தரமான
கொள்ளலாம். அத்துடன் எ
V.K.V'S மருந்துக்
விவசாயத்துக்கான மருந்து வகைகள், உ
என விவசாயிகளின் நல்
குமரபுர வீதி, பரந்தன் A9. வீதி
கிளிநொச்சி.

உரிமையாளர்- பா.சிவக்கொழுந்து
**ஆனைமுகன் களஞ்சியம்,**
விவசாய உள்ளீடுகள்
கட்டடப் பொருள்கள்.
3 ஆம் கட்டை, முரசுமோட்டை

**பாலமுருகன் அரிசி ஆலை**
எம்மிடம் தரமான அரிசி வகைகள் தரமான வறுத்த அரிசி மா ஆகியவற்றை சில்லறையாகவும் மொத்தமாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
உருத்திரபுரம் வீதி,

**வேலவன் அரிசி ஆலை**
கல்,மண் நீக்கப்பட்ட சிவப்பு நாட்டரிசி, பச்சை அரிசி.
மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனை செய்யப்படும்.
இல.212/2, முரசுமோட்டை, பரந்தன்,
கிளிநொச்சி.
077 740 2590

**வேல் அழகன்**
கல் மண் நீக்கப்பட்ட
சிவப்பு பச்சையரிசி
சில்லறையாகவும் பெற்
முல்லை வீதி,
077 965

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாய்க்கால் பன்னங்கண்டி
# டிப் பிள்ளையார் தேவஸ்தானம்
# முறையில் அமைக்கப்பெற்ற
# ர் வெள்ளோட்ட விழா சிறப்பிதழ்



## ரலாறு

டாகும். அந்நாட்டின் சைவமும் தமிழும்
களாகும் அப்பகுதிகளில் தமிழர் தம்
நிலவளமும் செல்வ வளமும் அறிவு வளம்
பரந்தன் பதியாம் பன்னங்கண்டியெனும்
மேன்மக்களும் சூழ்பதியாய் விளங்கி

றசித்தம் கூடிய பதியாய் அமைகின்றது
வீற்றிருக்கும் பிள்ளையார் வினைகள்
அமைவாக மருதமரச்சோலைகள் நிழல்
முரசுமோட்டை பழைய கமம் பகுதியில்
நீர் அருந்த அழைத்துவரும் நிலையில்
யும் களைப்பாற்றி தாமும் களைப்பாறி
ார். பின்பு பிள்ளையார் அருள்பாலிக்க
பிரமணியம் குடும்பத்தினர் பத்து ஏக்கர்
கு வழங்கிய பெரும் கொடையாளர்கள்

ன்ற எண்ணம் ஈழத்து சைவ சேனாதிபதி
ந்து திருமணம் ஆகிய இடமும் இதுவே
முத்துக்குமாரு (ஜி.பு) அவர்களால் ஒரு
சபைக்கு முத்துகுமாரு தலைவராகவும்
ர்களும் பொருளாளராக திருவாளர் ஞா.
ாக திருவாளர்கள் கி. பொடிசிங்கம்
பா திரு வெள்ளையப்பு , இ. இராமநாதன்.
சிவபாக்கியம் அம்மையார் அவர்களும்
அவர்களால் அவ்விடத்திலேயே விநாயகப்
து. நீண்ட காலத்தின் பின்
ன்ற கூற்றிற்கு இணங்க பின்பு தலைவர்
ால் உள்ளத்தால் தன்னை முழுமையாக
அரும்பணியாகக் கொண்டு செயற்பட்ட
ிதானையார். இவர் இரவு பகல் பாராது
வணி பிள்ளையார் சதுர்த்தி தினத்தை
வழிபட்டு நல்ல சித்திகளைப் பெற்றார்கள்.
ர விதானையார் அவர்களும் திருப்பணி
டாமுயற்சியின் ஊடாக அக்காணியில்
மைப்பதற்காக ஆகம விதிப்படி 1950 ஆம்
இருந்த திருவாளர் செல்லத்துரை
ாலும் அழகு எழில் கொஞ்சும் அழகுப்
றது.
பரம்பரையோடு சித்தயோகர் சுவாமி
வருட்கூடத்தில் நயினையம்பதி நயினை
லைநாதக்குருக்கள் 1975 ஆம் ஆண்டு
பன்னங்கண்டிப்பிள்ளையார் இடையில்
னைகள் வேதனைகள் சொத்து சுகம்
வுற்று சிதைந்த கோயிலை இன்றைய
பி 2011 ஆம் ஆண்டு புனராவர்த்தன
மையில் இந்த வருடம் தேரோட்டம்
செல்லையா பாலச்சந்திரன் ஸ்தபதி
தடி யாழ்ப்பாணம் திராவிடக்கலை மரபுச்
ள்ளார்.
ண்டு சித்திரை தமிழ் புத்தாண்டு தினம்
தேரேறி வந்து தேசம் காக்கும் நாயகனார்
த் தேரினில் பிள்ளையாரைத் தரிசித்து
யார்களும் அணிதிரண்டு வடம் பிடித்து
ள கடைத் தெடுத்திட ஓடோடி வாரீர் புதிய
ாம்.

**ஆலய நிர்வாகம்**

## 2016.04.11 திங்கட்கிழமை காலை 9 மணி

### வெள்ளோட்டத்தில் அருள் பாலிக்கட்டும்



இந்து சமுத்திரத்தின் முத்தாக விளங்கும் இலங்கைத் திருநாட்டில் வடபால் அமைந்திருக்கும் நீர்வளமும், நிலவளமும் ஒருங்கே அமையப்பெற்ற நெல்வயல்களின் நடுவிலிருந்து அருளாட்சி புரியும் திருவருள் மிகு பன்னாங்கண்டி விநாயகப் பெருமானுக்கு நடைபெறவுள்ள மகோற்சவத்தில் புதிய சித்திரத்தேர் உருவாகி வெள்ளோட்டங் காணவுள்ளமை யாம்பெற்ற பேறாகும். ஆலயத்தின் வெளிவீதியில் சித்திரத் தேரினை உருவாக்கிய சிற்பியின் வழிநடத்தலில் புதிய தேரானது ஆலய வீதியில் பவனிவந்து அடியவர்களுக்கு அருள்பாலிக்க இருக்கும் சித்திரத்தேரை வாழ்த்தி இத்தேரானது வலம் வந்து பன்னங்கண்டி விநாயகப்பெருமான் அடியவர்கள் எல்லோருக்கும் அருள்பாலிக்க வேண்டும் என விநாயகப்பெருமானை வணங்கி எனது வாழ்த்துச்செய்தியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**சுந்தரம் அருமைநாயகம்,**
**அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலாளர்,**
**கிளிநொச்சி மாவட்டம்.**

### வாழ்த்துச்செய்தி



நீர்வளமும் நிலவளமும் பொருந்திய ஈழ மணித்திருநாட்டின் பச்சைப்பசே லென்று இயற்கை வளம் கொழிக்கும் கிளி நொச்சி மாநன்நகரில் பன்னங்கண்டிப் பதி உறையும் இறைபதியாம் பன்னங் கண்டிப் பிள்ளையார் ஆலய தேர் வெள்ளோட்ட திருவிழாவினை முன்னிட்டு வெளிவரும் சிறப்பிதழுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மனமகிழ்ச்சியடைவதுடன் ஆலய வளர்ச்சி மென்மேலும் வளம்பெற என் சார்பாகவும் மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லக் குழந்தைகள் சார்பாகவும் வாழ்த்துக்களைக் கூறி நிற்கின்றேன்.

கிளிநொச்சி வாழ் மக்களின் வாழ்வில் எத்தனையோ இடர்கள் வந்தபோதும் அத்தனையும் நீக்கி பக்தி செய்து துதிப்போர்க்கு தெய்வமும் வாரிவழங்கும் என்ற நிலையில் தன்னருளை மக்களுக்கு அளித்து அவர்கள் வாழ்வில் நலம்பெற வழி வகுத்து வருகின்றது என்றால் மிகையாகாது. குறிப்பாக கடந்த காலங்களில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையினால் பல்வேறு இன்னல்களுக்கு மக்கள் ஆளாகியபோதிலும் மீண்டும் தம் சொந்த இடங்களில் குடியமர்ந்து நன்மைபெற வழிசெய்தமை யானது இறையருளை இயம்பி நிற்கின்றது.

தொன்றுதொட்டு இந்துக்களாகிய எம்மால் வழிபடப்பட்டுவந்த இவ்வாலயத்தின் பெருமை என்றும் போற்றத்தக்கது. மூலை முடுக்கெங்கணும் வியாபித்துள்ள இறை யருளின் பெருமைதனை பறைசாற்ற முனைந்திருக்கும் கோயில் நிர்வாகத்தினருக்கு எனது மனம் நிறைந்த வாழ்த்துக்களையும் நன்றிகளையும் கூறிநிற்கின்றேன். இவ்வாலய பரி பாலனசபையினரின் பெரு முயற்சி மென்மேலும் வளர்ந்து சிறப்படையவும் இவ்வாலய தேர்த்திருவிழாவினை முன்னிட்டு வெளிவரும் சிறப்பிதழ் சிறப்புற அமையவும் என் சார்பாகவும் இல்லக் குழந்தைகள் சார்பாகவும் மனம் நிறைந்த வாழ்த்துக்களை வழங்கு கின்றேன்.

**தி.இராசநாயகம் தலைவர்,**
**மகாதேவா சுவாமிகள்**
**சிறுவர் இல்லம் ஜெயந்திநகர், கிளிநொச்சி.**

### சித்திரத்தேர் காண வாரீர்



ஈழத் தமிழர்களின் புனிதமான புண்ணிய பூமியில் தெய்வீகம் பூத்து மலர்ந்து தேன் சிந்திய சிவபூமியாகும். சில காலத்தில் அடங்கியும், ஒடுங்கியும் சிதைத்தும் சீரழிக்கப்பட்ட போதும் அவற்றினையும் இறைவன் போக்கிப் புனிதமான இரணைமடுக்குளத் தாயின் அரவணைப்பினால் பசுமைகள் பெருகிப் புதுமைகள் வளர்ந்திட பன்னாங் கண்டிப் பகுதியினில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் வம்சாவழியில் வரலாறு படைத்த பிள்ளையார் திருவருள் நிறை பகுதியாகும்.

2016ஆம் ஆண்டு ஸ்தபதி பாலச்சந்திரனார் கைவண்ணத்தில் உருவாகிய சித்திரத் தேரில் வேழமுகத்தோன் எழுந்து ஆண வம் முதலான மதம். மமதை, அறியாமை அழித்து அறிவு ஞானம் தந்தருள 2016 சித்திரைப் புத்தாண்டு எனும் புனித நாளில் வேழ முகத்து விநாயகனைத் தேரினில் கண்டு தரி சனம் பெற இருக்கும் அடியார்களே!

உடலும் தேரும் ஒன்று. அண்டத்தில் உள்ளது பிண்டத்தில் என்பார்கள். அதாவது மூவுலகாய் விளங்கும் பஞ்ச பூதங்களே தேர் என்பர். பஞ்ச பூதங்களே தமது உடலாகும். அவ்வுடலே பிண்டம் எனப்படும் உள்ளத்தில் பிள்ளையாரை இருத்துதலும் தேர்ப் பீடத்தில் இறைவனை இருத்துதலும் ஒன்றாகும். உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம் என்பதற்கு எடுத்துக்காட்டாகும்.

தேர் காண வாருங்கள் பன்னாங்கண்டிப் பிள்ளையாரை
தேரினில் காணுங்கள். தீராத பிணியாவும் தீர்த்திடுவான்.
தேனிலும் இனிய வளம் யாவும் வாழ்வினில் தந்திடுவான். தேற்றியே எம்மவர் துயர் போக்கி முத்தியைத் தந்திடுவான் திருப்பாற்கடல் கடைந்தால் போல் விநாயகர் தேர் வடம் பற்றித் திருவருளைக் கடைந்து பெற்றிட தேர்த்திருவிழா திருவருள் பெருகிடும் நாளாய் அனைவரும் வருகை தந்து வடம் பற்றி வளமோங்கிப் பரந்தன் கன்னாங்கண்டிப் பிள்ளையார் திருவருளுக்குப் பாத்திரமாகி அருள் பெறுக.

**சைவப்புலவர் சைவசித்தாந்த பண்டிதர்**
**திரு-கு-நித்தியதசீதரன் ஜி.பு இந்து தர்மாசிரியர்.**
**பன்னாலை,தெல்லிப்பழை.**

### அன்பும் ஆசியும் கிடைப்பதாக



ஓங்காரப் பொருளாகிய விக்னேஸ்வரப் பெருமானுக்கு நைமித்திய பூஜை கருமம் இறுதி நாளுக்கு முதல் நாள் சித்திரத்தேர் அமைத்து அதில் எழுந்தருளச் செய்து எம் பெருமானின் கருணையுடன் மக்கள் துயர் தீர கருணை புரியும் தினம்

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் யானை முகத்தானைக்
காதலால் கூப்புவர் தம் கை

நாங்கள் எக்கருமமும் விநாயகப் பெருமானை வழிபட்டு ஆரம்பிப்போம். இரு கைகளையும் மாறிப்பிடித்துத் தோப்புக் கரணம் போட்டு மூன்றுதரம் குட்டிக் கும்பிட்டு வழிபாடு செய்ய வேண்டும் சகல வினைகளையும் தீர்க்கும் பெரும்பரனை பூரணப்படுத்துகின்றேன்.

இறைபணியில்

**கணேசானந்த மகாதேவ சுவாமிகள்**
**மகாதேவ ஆச்சிரமம், ஜெயந்தி நகர், கிளிநொச்சி.**



அருள்மிகு பன்னாங்கண்டிப் பிள்ளையார் ஆலய சித்திரத்தேர் வெள்ளோட்டம் கண்டு மகிழ்வடைகின்றேன். விநாயகர் வழிபாடு என்பது தமிழர் வாழ்வியலில் இணைபிரியாத வழிபாடாகிய நிலையில் இயற்கை எழில் சூழ்ந்த பன்னாங்கண்டிப் பிரதேசம் வயலும் வயல் சார்ந்த இடமுமாகிய மருத நிலமாகும். செல்வம் கொழிக்கும் மருத நிலத்தில் அமைந்திருக்கின்ற விநாயகப் பெருமான் அழகிய சித்திரத்தேரில் எழுந்தருளி வந்து அடியார்களுக்கு அருள்பாலிப்பதைக் கண்டு மகிழ்வடைகின்றேன். சித்திரத் தேரினை வடிவமைத்து இப்பிரதேசத்தின் ஆன்மீக எழுச்சியைக் காட்டி நிற்கும் பன்னாங்கண்டி மக்களுக்கும் ஆலய பரிபாலன சபையினருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எல்லாம் வல்ல விநாயகப்பெருமனின் அருளாசி அனைவருக்கும் கிட்டட்டும்.

**திரு. கோ. நாகேஸ்வரன்**
**பிரதேச செயலர், பிரதேச செயலகம், கரைச்சி.**

### மகோற்சவகுருவின் ஆசிச் செய்தி



' அழகுத்தேரினில் ஆனைமுகன் "முன்னின்று அருள்செய்யும் எலிவாகனப் பிள்ளையாம் பரந்தன் மூன்றாம் வாய்கால் பன்னாங்கண்டிப் பிள்ளையாருக்கு சித்திரத்தேர் வெள்ளோட்டம் நடைபெறுவது பெருமகிழ்வைத் தருகின்றது. யுத்தத்தின் பிடியில் அகப்பட்ட மக்களை பன்னாங்கண்டிப் பெருமான் காத்தும் கரந்தும் அருள்புரித்தமையினை நன்றி பாராட்டும் முகமாக மக்களால் எடுக்கப்படும் பெருபக்தி பெருவிழாவாக அமைந்ததுதான் தேர்த் திருவிழாவாகும். புதுவருட திருநாளில் தேர் ஏறி வரும் பெருமானுக்கு காவடிகள். பறவைக் காவடிகள். பிரதட்டை. கற்பூரச்சட்டி எடுத்தல் அங்கப்பிரதட்ணம் என தமது நேர்த்திக்கடனை ஆற்றினார்கள். ஆனாலும் தமக்கு யுத்தத்தின் பின்னர் மறுவாழ்வளித்த பன்னாங்கண்டியானுக்கு இரவல் தேர் எடுத்துவந்து தேர்திருவிழா செய்வது பெரும் மனக்கவலையாக இருந்தது. இதனை உணர்ந்த பரிபாலன சபையினர் இளைஞர்கள். தொண்டர்கள் உபயகாரர்கள். அடியார்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து சித்திரத்தேர் அமைக்கும் பணியில் ஈடுபட்டார்கள். விவசாயத்தினை முதலாக கொண்டு வாழ்ந்துவரும் மக்கள் பல சவால்களைச் சந்தித்தபோதும் தமது திருப்பணியினை கைவிடாது சிறப்பாக நடாத்தி இன்று வெள்ளோட்டம் கண்டிருப்பது பிள்ளையாரின் கீர்த்தியாகும். தேரினை வடிவமைத்த கலைஞர்களும் பாராட்டப்பட வேண்டியவர்கள். பணத்தினை கருத்தினிற் கொள்ளாது அவர்களும் தமது பணியினை சிறப்புற ஆற்றியுள்ளார்கள். திருப்பணியில் ஈடுபட்ட அனைவருக்கும் புதுவருட திருநாளில் தேரேறும் பிள்ளையாரின் வற்றாத அருள் மழை கிடைக்க தொப்பைப்பனைத் தொழுது ஆசிர்வதிக்கின்றேன்.

" தொழுவினை அறுமே"

**வீணாகானகுருபீட சந்நிதாச்சாரியார்- சிவஸ்ரீ. சபா. வாசுதேவக்குருக்கள்**
**மகோற்சவகுரு சிவன் தேவஸ்தானம் சித்தன்கேணி)**


உரிமையாளர்:
சிவரத்தினம் பிரசாந்தன் (சாந்தன்)
ளையார் ஸ்ரோஸ்
னங்கண்டி, கிளிநொச்சி.

உரிமையாளர்: செல்லையா மகேந்திரன்
கல்ப்பனா
சைவ உணவகம்
A9 வீதி,
கந்தசாமி கோயில் முன்பாக, கிளிநொச்சி.

உரிமையாளர்: த.சர்மிளன் (ரகு)
அனுஷன்
பல்பொருள் வாணிபம்
D3, மருதநகர். கிளிநொச்சி.

சிவனருட் செல்வன்
அரிசி ஆலை
பெரியபரந்தன், கரடிப்போக்கு,
கிளிநொச்சி.

தென்னிலங்கை மக்களின் நலன்கருதி
சம்பந்தன் அரிசி வாணிபம்
ஏ9 வீதி. கரடிப்போக்குச்சந்தி.
கிளிநொச்சி.

சம்பந்தன் அரிசி வாணிபம்
சந்தை முன்புறம்
ஆடியபாதம் வீதி.திருநெல்வேலி.

NO 1 சிவப்பு நாடு
NO 1 தீட்டற் பச்சை
NO 1 அரிசி மா
NO 1 மிளகாய் தூள்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்.நகரில்.....
S.R.M. ஸ்ரோஸ்,
K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.

பிலும் நவீன அரிசி ஆலை
ப்படுத்தப்பட்ட அரிசி ஆலையில் மொத்தமாகவும்
ம் தரமானதுமான அரிசி வகைகளைப் பெற்றுக்
லாம். அத்துடன் எமது சக நிறுவனமான
V'S மருந்துக் களஞ்சியம்
ருந்து வகைகள், உரவகைகள், விவசாய உள்ளீடுகள்
ன் நல்லெண்ணத்தைக் கொண்ட களஞ்சியசாலை
A9. வீதி. பணிப்பாளர். கணேசமூர்த்தி கங்காதரன்
077 788 1537, 021 228 0034

வேல்முருகன் அரிசி ஆலை
தரமான அரிசி வகைகள் மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
எமல்சன் வீதி. கரடிப்போக்கு, கிளிநொச்சி.
S.M.R. 077 635 7024


சிவகுரு ஹாட்வெயார்
உந்துருளி விற்பனை நிலையம்
A9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி.
021 228 5380

ழகன் அரிசி ஆலை
ா நீக்கப்பட்ட சிவப்பு நாட்டரிசி,
பச்சையரிசி மொத்தமாகவும்
ாகவும் பெற்றுக்கொள்ள முடியும்.
ல்லை வீதி, பரந்தன்.
077 965 4201

இராசையா மருந்துக்கடை
கோயில் அபிஷேகப் பொருள்கள்.ஆயுள்வேத மூலிகைகள்,
இந்திய வாசனைத்திரவியங்கள் ஆகியவற்றை
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
இல.202, பசார் வீதி, வவுனியா,
கிளைகள் - இல.209, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
ஏ9 வீதி, கந்தசாமி கோயிலடி, கிளிநொச்சி.

நியூ வி.எம்.கே.ஜுவலறி,
105, நவீன சந்தை,
கண்டிவீதி, சாவகச்சேரி.
021 227 0038


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
கற்பகன் துணை

# தென்கோவை கற்பகப்பிள்ளையார் தேவஸ்தானம்
## இருபாலை, கோப்பாய்.

## நூதனசுந்தர இராஜகோபுர ஸஹித புனராவர்த்தன அஷ்டபந்தன பஞ்சகுண்டபக்ஷ

# மகா கும்பாபிஷேக பெரும்சாந்தி விழா

### ஆலய வரலாறு

இலங்கையின் சிகரமென விளங்கும் யாழ்ப்பாணத்து வலி/ கிழக்கில் அமைந்துள்ள கோப்பாய்க் கிராமத்துச் சிற்றூரான இருபாலை பருத்தித்துறை வீதி கற்பூர வளவிலே 1840- 1850 காலப்பகுதியில் வேதாரணிய சைவகுருவான சின்னத்தம்பி ஐயாவால் நெல்லு மூடைக்குள் கல் என்று மறைத்துக் கொண்டுவரப்பட்ட விநாயகர் சிலையை வைத்து நிறுவப்பட்டது தான் தென் கோவைக் கற்பக விநாயகர் ஆலயம். நீதி தவறாத. பொய் பேசாத நேர்மையாளன் சின்னத்தம்பி ஐயா தன் முயற்சியால் அமைக்கப்பட்ட இவ்வாலயம் போத்துக்கேயர் காலத்தில் ஏற்பட்ட இந்து சமய அச்சுறுத்தல் காரணமாக மூலவிக்கிரம் தனியாக எடுக்கப்பட்டு எதிரே கிழக்குப்புற வயலில் உள்ள திருகட்டுக் (இன்றும் உள்ளது) குளத்தில் மறைத்து வைக்கப்பட்டதாகவும் பின் ஆங்கிலேயர் காலத்தில் சலவைத் தொழிலாளி ஒருவர் சிலையான கல்லிலே புடைவையை அடித்துத் துவைக்கும் போது அதிலிருந்து குருதி பாயவே அதனைப் பக்தியுடன் மீட்டெடுத்துப் பிரதிட்டை செய்ததாகவும் இன்றும் இவ்வாலயப் பிள்ளையாரின் முதுகுப்புறத்தில் சிவப்படையாளம் காணப் படுவதாகவும் கூறப்படுகின்றது.

ஆண்டுகள் பல கடந்தபின் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு அவர்களின் நெகிழ்வுத் தன்மையோடு விநாயகர் கற்பக்கிரகம் மண்டபங்கள் தல விருட்சம் தீர்த்தக் கேணி என்பவற்றோடு ஆலயம் உருவான்து என்பது வரலாறு. அன்று தொட்டு இன்று வரை சின்னத்தம்பி ஐயருடைய வம்சா வழியினரே ஆலய நித்திய. நைமித்திய பூசைகளைத் குறைவின்றித் திறம்படச் செய்து வரு கின்றனர். 1936 ஆம் ஆண்டும் பின் 1952ஆம் ஆண்டும் ஆலய கும்பாபிஷேகம் நடைபெற்றதாக அறிய முடிகிறது.

ஆலயம் தொடர்பான சரியான ஆரம்பகால ஆவணங்கள் கிடைக்கப் பெறாத போதும் கற்பகன் அடியார்களின் திருப்பணி ஆர்வ மேலீட்டால் 1980 ஆம் ஆண்டு திருப்பணிச் சபை ஒன்றை உரு வாகி யாப்பு விதிக்கமையக் காலத்திற்கு காலம் புது நிர்வாக மாற்றங்கள் பெற்று பல வியத்தகு திருப்பணிகள் இடம் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. திருப்பணிச்சபை உதயத்தைத் தொடர்ந்து பழைய ஆலயக்கட்டடங்கள் இடிக்கப்பட்டு புதுக் கட்டடம் அமைக்கும் பணி 11.09.1980 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதுடன் திருமுருகனுக்கு உரிய இடத்தில் தனி ஆலயம் கட்டி முடிக்கப்பட்டு 08.07.1982 (துந்துபி வருடம்) மகாகும்பாபிஷேகம் நிகழ்ந்தது அடுத்து நாட்டின் அசாதாரண நிலை காரணமாக ஏற்பட்ட இடப்பெயர்வு தொடர்பாக பூசை இன்றி இருந்த ஆலயம் மீண்டும் புனரமைக்கப்பட்டு 11.05. 1997ஆம் ஆண்டு மீண்டும் கும்பாபிஷேகம் இடம் பெற்றது. இவ்வாலயத்தில் வைகாசிமாத அச்சுவினி நட்த்திரத்தை தீர்த்தமாகக் கொண்டு கொடியேற்றதுடன் 16 நாள்கள் மகோற்சவங்களும் மற்றும் விநாயகசஷ்டி. சங்கடசதுர்த்தி பெருங்கதை 21 நாளும் லட்சார்ச்சனை என்பன மிக விசேடமாக இடம்பெறுகின்றன. ஆலயத்தின் கிழக்குப்புறமாக இருக்கும் புஸ்கரணியில் சுவாமி தீர்த்தமாடுவதும். மண்டப தெற்கு மேற்குப்புறச் சுவர்களில் பிள்ளையாரின் 32 மூர்த்தங்களும் அலங்கரிக்கும் காட்சி பார்ப்போர் மனதைக் கொள்ளை கொள்ளும்.

இத்தகைய சிறப்பு பெற்ற தென்கோவை கற்பக விநாயகருக்கு இல்லை என்று குறைபாடாக இருந்த கோபுரமும் கட்டப்பட்டு கோபுர குடமுழுக்கும் மூல விநாயருக்கும் ஏனைய பரிவார மூர்த்தி களுக்கும் இன்று மகாகும்பாபிஷேகம் நடைபெறுவது கற்பகனின் கருணையே அன்றி வேறில்லை.
கேட்டதெல்லாம் தரும் கற்பக தருபோல் கோவையம் பதி வளரும் கற்பக விநாயகனே
சேவை செய்துந்தன் பாதம் சேவிக்க நீ அருள் வாய்
நாமும் விநாயகனை இறைஞ்சுவோமாக.



### பிரதமகுருவின் ஆசிச் செய்தி

தென்கோவை கற்பகவிநாயகருக்கு மூன்று தள இராஜகோபுரம் அமைக்க திருவருள் கைகூடிய போது நான் சித்தங்கலங்கினேன். ஆலய கருவறை விக்கிரகம் மற்றும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் புனருத்தாரணம் செய்ய வேண்டிய தேவையை உணர்ந்து அவனருளாலே அவன்தாள் வணங்கி உருகினேன். விக்கினம் தீர்க்கும் விநாயகன் அருட்கடாட்சத்தால் இராஜகோபுரம் கட்டி நிறைவுற்ற கையோடு ஆலயத்தையும் புனரமைக்க விநாயகர் அடியார்களும் திருப்பணிச்சபையினரும் உறுதி பூண்டனர். மிகக்குறுகிய காலத்தில் யாவரும் வியக்கும் வண்ணம் ஆலய பணிகள் கற்பகனின் உள்ளூர், வெளியூர் அடியார்களின் ஒத்துழைப்போடு இன்று இராஜகோபுர குடமுழுக்கும் ஏனைய மூல விக்கிரகம், பரிவாரமூர்த்திகள் கும்பாபிஷேகமும் இடம் பெறுவதையிட்டு மிக்கமகிழ்ச்சி அடைவதோடு விழா சிறப்புற நடைபெற எல்லாம் வல்ல கற்பகனை வேண்டி ஆசி கூறுகிறேன்.

**கற்பக விநாயக கிரியா உபாசகர்**
**சாம ஸ்ரீ தேசமானிய சிவஸ்ரீ பா.செல்வசேனக்குருக்கள்**
**(தேவஸ்தான பிரதமகுரு)**

### திருப்பணிச் சபையின் செய்தி

தென்கோவை கற்பக அடியார்களுக்கு இன்று பேரானந்தம். பெருமானின் குடமுழுக்கு காணும் பாக்கியம் கிடைத்திருக்கின்றது. அடியார்களின் பேராதரவுடன் இலங்கை இந்திய சிற்பக்கலைஞர்களின் கை வண்ணத்தில் மிகப்பிரமாண்டமாக சுந்தர ராஜ கோபுரம் முதல் கருவறை வரை அமைக்கப்பட்டு ஆலயம் புதுப் பொலிவுடனும் கலை அழகுடனும் திகழ்கின்றது.

'எம் கடன் பணி' என்ற புனித நோக்கோடு திருப்பணி செய்யத் தொடங்கிய எம் திருப்பணிச் சபைக்கு திருக்கோயில் அமைத்து திருப்பணி செய்யும் பேறு கிடைத்திருக் கின்றது. அத்திருப்பணிக்கு எமக்கு ஆசி வழங்கிய குருமார்களுக்கும் கட்டட சிற்பக் கலைஞர்களுக்கும் எல்லாவற்றுக்கும் மேலாக பெரு நிதி நல்கிய பெருந்தகை களுக்கும் திருத்தொண்டு புரியும் தொண்டர்களுக்கும் கற்பகன் அருள் வேண்டி வணங்குகின்றோம்.

**திருப்பணிச் சபை**

### கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துவோர்

**SUNDHARSON**
No.138, Jaffna Road, Manipay.
Tel: 021 225 6036.
Email:sundharson@yahoo.com
Distributors:
Kelani Cable
Arpico PVC,
Pipes & Fittings
Abans, Kevilton, Orange & ACL
Electrical Products.
singer, Usha, Piyestra.

**SHIVAN**
**MOTORS STORES**
Dulux
Distributors for:
AKZO NOBEL PAINTS LANKA (PVT)LTD.
HAYLEYS ELECTRONICS LIGHTING (PVT)LTD.
No.70/1, Manipay Road, Jaffna. Srilanka
Tel: +94 21 222 862763, Fax: +9421222 8647

**சக்தி ஜுவல்லர்ஸ்**
**SHAKTHY JEWELLERS**
Manufacturers of gold jewels
புதிய மாநகர சபைக் கட்டடம்
இல. 80/4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021 221 7750, 077 239 5747
New JMC Building, No:80/04, Kasthuriyar Road, Jaffna.

**அமுதாம்பிகை**
**மணி மண்டபம்**
சகலவிதமான சுப நிகழ்வுகளுக்குமான
மண்டப ஒழுங்குகள் செய்துதரப்படும்.
வீரகாளிஅம்மன் கோயிலடி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

**கஜோ லங்கா**
ஆலய கட்டட ஒப்பந்தகாரர்
இணுவில்.
மேற்படி ஆலய கட்டுமானம், வடிவமைப்பு,
கட்டடக்கலை சிவலிங்கம் சிவகஜன்

**MALROW**
YAARL SHOWROOM
Manufactures of Steel & wood Furniture
3rd Mile Post, Point Pedro Road, Kalviyankadu, Jaffna.
Malrowyaarl@gmail.com
021 223 1666, 0777 286 069
(Factory)Management
No: 077 073 0332

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். ஆனைக்கோட்டை

# நாரவராக்காடு கருணைமிகு புக்கை தின்னிப் பிள்ளையார் ஆலய

## புனராவர்த்தன அஷ்டபந்தன பஞ்சகுண்ட பக்ஷ

## பெருஞ்சாந்தி பெருவிழா

## சிறப்பிதழ் - 11.04.2016

### அருளாசிச் செய்தி



பெறுதலுக்கு அரிதான மானிடப் பிறவியை நாம் எடுப்பதற்கு காரணம் யாதெனில் நமது பாவச் ைமையை களைவதற்காகவே பல வகைத் தீர்வுகளை இறைவன் அமைத்துள்ளான். அதில் ஒன்றுதான் கும்பாபிஷேகம். பெருஞ்சாந்தி விழாவும் ஞானசம்பந்தக் குழந்தை பாடலிலே பெருஞ்சாந்தி காணாது போவாயோ பூம்பாவாய் என்று பெருஞ்சாந்தி விழாவைச் சிறப்பித்துக் கூறினார். பிறப்பை அறுத்து எம்மை எல்லாம் புண்ணியாத்மா ஆக்குவதற்கு கும்பாபிஷேகம் ஒரு சிறந்த வழிபாடாகும். எனவே சைவசமயத்தவர்கள் அனைவரும் இக் கும்பாபிஷேகம் மூலம் சிறப்புற்று வாழ இந்த புவிதன்னில் தர்மவழிபாடு வேண்டி துதிக்கையான் பாதம் துதித்து வாழ்த்தி ஆசி கூறுகின்றேன்.

சுபமஸ்து

**மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகம் எல்லாம் "லோகா சமஸ்தா சுகினோ பவந்து!!!**

**கும்பாபிஷேக பிரதம குரு**
**ஆலய பிரதமகுரு**
**சபரீசதாசன் சபரிமலை குருசுவாமி**
**உரும்பிராய் சிவதர்மசாஸ்தா**
**ஆலய தர்மகர்த்தா,**
**பிரம்மஸ்ரீ தாணு வாசுதேவ சிவாச்சாரியார்.**
**தர்புருஷ சிவம்.**



**மஹா கும்பாபிஷேகம்:**
**மன்மத வருஷம் பங்குனி மாதம் 29 ஆம் நாள்**
**11.04.2016 திங்கட்கிழமை காலை 9.20 மணி**
**முதல் 10.00 மணிக்குள்.**

### அருளாசிச் செய்தி



வேரோடு வினை நீக்கும் யாழ். ஆனைக்கோட்டை நாரவராக்காடு கருணை மிகு புக்கை தின்னிப் பிள்ளையார் ஆலயத்தின் புனராவர்த்தன அஷ்டபந்தன பஞ்சகுண்ட பக்ஷ மகா கும்பாபிஷேக பெருஞ்சாந்திப் பெருவிழா சிறப்புமலருக்கு அருளாசிச் செய்தி வழங்கு வதையிட்டுப் பெரு மகிழ்ச்சியடைகின்றோம். அடியார்கள் அனைவரையும் பேரோடும் புகழோடும் வாழ வைக்கின்ற கருணைமிகு புக்கை தின்னிப் பிள்ளையாருக்கு அவர்கள் அழகாக அமைந்திருக்கும் இந்த ஆலயம் அருள்மிகுந்த ஓர் ஆலயமாக விளங்குகின்றமை சிறப்பம்சமாகும். ஆகவே அடியார்கள் ஒன்றிணைந்து ஒற்றுமையாக நின்று அளப்பரிய அறப்பணியைச் செவ்வனே நிறைவு செய்து இன்று கும்பாபிஷேகமும் நடைபெறுவது எல்லாம் வல்ல விநாயகரின் திருவருளின்றி வேறில்லை.

சிறப்பு மிகு திருப்பணி மூலம் ஆலயக் கட்டுமானங்கள் அழகுற அமைந்திருக்கின்றன. விநாயகர் திருவருளால் இன்றைய கும்பாபிஷேக நிகழ்வுகள் சிறப்புற்று நிறைவுற பத்ம மலர்பாதம் பணிந்து அருளாசிகள் நல்கி வாழ்த்துகின்றோம். எம்பெருமானுக்கு நடைபெறுகின்ற உற்சவங்களும் நன்றே நிகழ நல்லைக் குருமணியை வணங்கி வாழ்த்தி உளமாரப் பிரார்த்தித்து ஆசி வழங்கி மனம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஆதீன குருமுதல்வர்**

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்.**
**நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம் - யாழ்ப்பாணம்.**

### செஞ்சொற்செல்வரின் ஆசிச்செய்தி



அருள்நிறைந்த ஆனைக்கோட்டை புக்கைதின்னிப் பிள்ளையார் ஆலய மகாகும்பாபிஷேகம் குறித்து வாழ்த்துவதில் மிகவும் ஆனந்தமடைகிறேன். பாரம்பரியம் மிக்க கிராமத்தில் அற்புதம் வாய்ந்த ஆனைமுகப் பெருமான் குடிகொண்டிருப்பது பெருமைக்குரிய விடயமாகும். ஆண்டுதோறும் இவ்வாலயத்தில் சிறப்பாக அலங்கார உற்சவம் நடைபெறுவதுடன் பல விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று வருவது சிறப்புக்குரியது. இவ்வாலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு புதுமெருகூட்டப்பட்டு அழகுப் பொலிவுடன் கும்பாபிஷேகம் நடைபெறுவது பாராட்டுக்குரிய விடயமாகும். அரிய பரிபாலன சபையின் ஆலயப் பணி தொடர விநாயகப் பெருமானை வேண்டுகின்றேன்.

**கலாநிதி ஆறு.திருமுருகன்.**
**தலைவர், துர்க்காதேவி தேவஸ்தானம்.**

### செயலாளரின் வாழ்த்துச் செய்தி



நாரவராக்காட்டில் கருணையோடு அற்புதமாகவும், அற்புதங்கள் நிகழ்த்தியும் அனைவர் மனதிலும் நீங்கா இடம்பெற்ற புக்கைதின்னிப் பிள்ளையாருக்கு இன் நன்னாளில் மகா கும்பாபிஷேகம் நடைபெற்று தமது பக்தர்களைப் பாகுபாடு பார்க்காது அனைவருக்கும் உதவி செய்யவும் கஷ்ரங்களையும், கவலைகளையும் நீக்குவதற்குத் தம்மை ஆயத்தப்படுத்தி புனருத்தாரணம் செய்யப்பட்டு தமது அருட்கடாட்ச பீடத்திற்கு செல்கின்றார் என மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்து எம்பெருமானை பிரார்த்திக்கின்றேன்.

**சற்குணானந்தம் உஷாநந்தினி**
**செயலாளர்,**
**பரிபாலனசபை.**

### தலைவரின் வாழ்த்துச் செய்தி



அருள்மிகு நாரவராக்காடு புக்கை தின்னிப் பிள்ளையார் ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன பஞ்சகுண்ட பெருஞ்சாந்தி பெருவிழா நடைபெறும் இன் நன்னாளில் நம்மைக் காப்பதற்கும் சலக செளபாக்கியங்களையும் அருளுவதற்கும் எம்பெருமான் மகா கும்பாபிஷேகம் செய்து தன்னைச் சாதாரணமாகவும் மௌனமாகவும் வீற்றிருந்து நன்மைகளையும்,அற்புதங்களையும் செய்தும், தொடர்ந்து செய்யவும் ஆயத்தமாகி உள்ளார் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் எம்பெருமான் திருப்பணி வேலைகள் மற்றும் கும்பாபிஷேகம் சிறப்புற நடத்த பலவழிகளிலும் உதவி புரிந்த அனைத்து அடியார்களுக்கும் நன்றி கூறி எம்பெருமான் கடாட்சம் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

இரத்தினகுமார் பிறேமகுமார்,
(தொழிலதிபர், பிறேம் நகைமாடம்)
தலைவர்.பரிபாலனசபை.

### பெருஞ்சாந்தி விழாவில் பேரருள் தருவீரையா!

வேரோடு வினை நீக்கும் புக்கை தின்னிப் பிள்ளையாரே!
வெவ்வினை தீர்த்து நல்லருள் புரிவீரையா!
பேரோடும் புகழோடும் எம்மை வாழ்விக்கும் கணபதியே!
பெருஞ்சாந்தி விழாவில் பேரருள் தருவீரையா!
சீரோடுஞ் சிறப்போடும் கும்பாபிஷேகம் செய்திட்டோம்!
சித்திகள் தந்து எம்புத்தி தெளியவைப்பீரையா!
பாரோடு இணைந்தே உம் பத்மமலர்ப்பதம் பணிந்தோம்
ஓடோடி வந்தே எமைக் காத்தருள் புரிவீரையா!

**"கலாபூஷணம்"**
**இராசையா ஸ்ரீதரன்**

**மலரமைப்பு: வி.கிரிதரன் - மானிப்பாய்**

**மஹா கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துவோர்**

**பிறேம் நகை மாடம்**
**பிறேம் பிளாஷா**
171, யாழ்வீதி, மானிப்பாய்.

**செல்வ மஹால்**
**திருமண மண்டபம்**
1229, பூநாறி மரத்தடி,
கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

**கஜலக்ஸ்மி ஜுவல்லறி**
இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 077 735 2010

**சுதாஸ் ஐஸ்கிறீம்**
171, யாழ்வீதி, மானிப்பாய் ,
லோட்டஸ் வீதி, மானிப்பாய்

**ஸ்ரீ முருகன் கபே**
**சைவ உணவகம்**
**"(வடைக்கடை)"**
**ஆனைக்கோட்டை**

NEW HEALTH FITNESSH
Gym, yoga & Karate Center
யாழ்வீதி, ஆனைக்கோட்டை,
கூழாவடி.

**ஆர்த்தி**
யாழ்வீதி,
மானிப்பாய்.
கிளை: சங்கானை.

**விநாயகர் பட்டுச் சோலை**
இல.08, ஆலடிச்சந்தி,
மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**(உங்களது எண் பலன் எப்படி? என்ற தலைப்பில் முதலாம் எண்காரர்களுக்கான பலன்கள் நேற்றைய உதயனில் பிரசுரமாகியிருந்தன. இன்று 2 ஆம் எண்காரர்களுக்கான பலன்கள் பிரசுரமாகிறது)**

## எண் 2

இந்த 2 ஆம் எண்ணைப் பற்றி அனைத்து நூல்களும் மக்களை தேவையில்லாமல் பயப்படுத்துகின்றன. உண்மை அதுவல்ல. பெரும் மரங்கள் சாய்ந்தாலும் நாணல் மட்டும் நிலைத்து நிற்கும். ஒவ்வொருவர் வாழ்விலும் புயல் (சோதனைகள்) என்பது நிச்சயம் ஏற்படும். அதற்கு எந்த எண்ணும் விதிவிலக்கல்ல. மற்ற எண்காரர்கள் துவண்டுவிடும்போது, இவர்கள் மட்டும் வாழ்க்கையின் சோதனைகளில் வளைந்து கொடுத்து, முன்னேறி விடுவார்கள். அம்பாளின் அருள் பெற்ற எண் இது. பகலுக்கு இராஜா, சூரியன் என்றால் இரவுக்கு ராணி, சந்திரன். சூரியன் தந்தைகாரகன் சந்திரன் மாதா காரகன். எனவே இந்த எண்காரர்களிடம் பெண்மையும், மென்மையும் உண்டு. இவர்கள் ஓரளவு தடித்த தேகத்தினர். இந்த எண்ணில் பிறந்த ஆண்கள் சுருட்டை முடியையும், பெண்கள் நீண்ட முடியையும் கொண்டவர்கள். அவர்கள் எவ்வளவு தூரம் வளைந்து கொடுக்கிறார்களோ, பல சமயங்களில் அதைவிடக் கடின சித்தராகவும் மாறிவிடுவார்கள். மனத்தினால் செய்யும் தொழில்களில் (கற்பனை, கவிதை, திட்டமிடுதல் போன்ற வற்றில்) மிகவும் விருப்பத்துடன் ஈடுபடுவார்கள். இவர்களுக்கு விட்டுக் கொடுக்கும் குணம் உள்ளதால், மக்களால் பெரிதும் விரும்பப்படுவார்கள். கற்பனை கலந்து கவர்ச்சியுடன் பேசுவதால், இவர்களுக்கு மக்கள் ஆதரவு உண்டு. பெரும்பாலோருக்கு முன்னோர்கள் சொத்துக்கள் இருக்கும். இந்த எண்ணின் ஆதிக்கம் குறைந்தவர்கள், வீண்பிடிவாதம் கொண்டு தங்கள் வாழக்கையைத் தாங்களே கெடுத்துக் கொள்வார்கள்.

நீதிமன்ற வழக்குகளும் சிக்கலைத் தந்து விடும். முன்னோர் சொத்துக்களையும் இழக்க நேரிடும். மனதில் நிம்மதி இருக்காது. இவர்களின் வெற்றிக்கும் அல்லது தோல்விக்கும் ஒரு பெண்ணே காரணமாக இருப்பாள். காரணம் இவர்களுக்குச் சந்தேக குணம் அதிகம் உண்டு. இதனால் முழுமையாக எவரையும், நம்பாமல் திரும்பத் திரும்ப மற்றவர்கள் மீது சந்தேகம் கொள்வதால்தான், இவர்களுக்கு எதிரிகள் உருவாகின்றனர். எதையும் பதட்டத்துடனும், ஒருவித சோம்பலுடனும் அணுகும் குணத்தையும் மாற்றிக் கொண்டால், இவர்கள் நிச்சயம் முன்னேறுவார்கள். முக்கிய காரியங்கள் எவற்றையும் சட்டென முடிக்காமல் காலத்தைக் கழித்து விட்டு, பின்பு அவசரம் அவசரமாகச் செய்து முடிப்பார்கள். ஒரு மாதத்தின் இறுதியில்தான் அவசர அவசரமாக உட்கார்ந்து அந்தந்த மாதத்தின் வேலையை முடிப்பார்கள்.

தங்களது வாக்குறுதிகளை இவர்கள் காப்பாற்றுவது மிகவும் சிரமம். ஒரு இடத்துக்குச் சென்றவுடன் சொல்லிவிட்ட பொருளை வாங்கி அனுப்புவதாகச் சொல்வார்கள். ஆனால் அனுப்பமாட்டார்கள். சந்திர ஆதிக்கம் நல்ல முறையில் அமைந்திருந்தால் நல்ல திட்டங்கள் போட்டு, அவற்றில் வெற்றியும் அடைந்து விடுவார்கள். உதாரணம்: தேசத்தந்தை மகாத்மா காந்தி. தங்களிடம் பல திறமைகள் இருந்தும் துணிந்து செயற்பட விரும்பமாட்டார்கள். இல்லாததைக் கற்பனை செய்து கொண்டு தங்களது வாழ்க்கையில் முடிவெடுக்க முடியாமல் திண்டாடுவார்கள். காலையில் சுறுசுறுப்புடன் தொடங்குவார்கள். ஆனால் மாலைக்குள் ஊக்கம் குறைந்து, சோர்ந்து விடும் இயல்பினர்.

(தொடரும்)

# தலைமன்னார் ஊர்மனை இளைஞர் சமுதாயத்தின் எதிர்காலச் சிந்தனைத் துளிகள் சில...

எஸ்.அல்விறெட் சில்வா

தலைமன்னாரும் ஒரு குட்டிப் பட்டணமாகுமா? என்ற கேள்வி எழும்போது நிச்சயமாக இது நிகழ பல வாய்ப்புக்கள் உள்ளன என்பதுதான் பதிலாகவுள்ளது.

தலைமன்னார் ஊர்மனை (கிராமம் அல்ல) யின் மேற்கே அமைந்திருக்கும், கடல் மணற் பரப்பில் அமைந்திருக்கும் கடற்படை முகாம் தொடரில் அமைந்துள்ள அழகான பாதை கிட்டத்தட்ட ½ மைல் தூரம் வரும். இந்தத் தொடரில்தான் இராமர் அணை (சரித்திர பூர்வமானது) என அழைக்கப்படும் பழம் பெரும் மணற் தீடைகள் (மணற் பிட்டிகள்) அமைந்துள்ளன. கடல் ஓரமான இந்த இடம் அரச உதவியோடு உல்லாச வசதிகளுடனான நீண்டதொரு இடமாக உருவாகிக் கொண்டிருக்கிறது. இது நிச்சயமாக வெளி நாட்டுப் பயணிகள் நேரத்தைக் கழிக்கும் பொழுது சிறந்த பொழுதுபோக்குமிடமாக அமையும். இந்த இடத்தில் ஏற்கனவே சில வெளியூரவர்கள் தங்குமிட வசதிகளை அமைக்கத் தொடங்கி விட்டனர். அதே நேரத்தில், இராமர் அணை எனக் கூறப்படும் மணற் பிட்டிகளூடாகப் பாலங்களும் வீதி வசதிகளும் ஏற்படுத்தப்படலாம் என்ற வதந்தி வந்து கொண் டிருக்கிறது. எனவே, இதையொரு இந்திய - இலங்கை நுழைவாயில் என்று கூறலாம்.

இந்த வருடத்துக்குள் இந்திய தனுஷ்கோடிக் கரையில் இருந்து தலைமன்னார் துறைமுகத்துக்கும் (இது ஊர்மனையாகவும் இருக்கலாம்) கப்பல் போக்குவரத்துத் தொடங்க வாய்ப்பு உண்டு. இதற்கு முன்னோடியாக புகையிரதப் பாதைகளும் அமைய வாய்ப்புண்டு.

தலைமன்னார் காவல்துறையின் கட்டமைப்பு 2013க்கு முன் இருந்த நிலைமை மாறி, புதிய கட்டட அமைப்புக்களுடன் உருவாகியுள்ளது. மேலும் எந்த நேரத்திலும் காவல் துறையினருடன் தொடர்பு கொண்டு தேவையான உதவிகளைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்புக்கள் உள்ளன. மாதத்தில் ஒருமுறை பொது மக்களுடன் மன்னார் காவல்துறை அத்தியட்சகர் சந்திப்பை மேற்கொள்ளத் தொடங்கி விட்டார். இதனால் மக்களின் தேவைகளை நேரில் கேட்டு அறிந்து கொள்ள அவருக்குச் சந்தர்ப்பம் கிட்டியுள்ளது. அது மட்டுமல்ல, ஒவ்வொரு வட்டாரத்துக்கும் ஓர் இரு காவல்துறையினரை நியமித்தும், பாடசாலைகளின் முன்பாக மாணவர் போக்குவரத்தைக் கவனிக்கும் பொறுப்புக்களும் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன.

தலைமன்னார் வைத்திய சாலையில் 2013க்கு முன் இருந்த நிலைமைமாறி, தற்சமயம் புதிய பெரிய கட்டடங்களுடன் நவீன தொழில் நுட்ப உபகரணங்கள் அமைக்கப்பட்டு, அதற்கான அதிகாரிகளும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

உதாரணமாகப் பல் சிகிச்சை, நீரிழிவுப் பரிசோதனை, இரத்த அழுத்தம் போன்ற பல்வேறு அத்தியாவசியத் தேவைகளுக்கான சிசிச்சை வசதிகள் காணப்படுகின்றன.

> தலைமன்னார் வைத்திய சாலையில் 2013க்கு முன்னர் இருந்த நிலைமை மாறி, தற்சமயம் புதிய பெரிய கட்டடங்களுடன், நவீன தொழில்நுட்ப உபகரணங்கள் அமைக்கப்பட்டு அதற்கான அதிகாரிகளும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். உதாரணமாகப் பல் சிகிச்சை, நீரிழிவுப் பரிசோதனை, இரத்த அழுத்தம் போன்ற பல்வேறு அத்தியாவசியத் தேவைகளுக்கான சிகிச்சை வசதிகள் காணப்படுகின்றன.

மிகமிக அழகிய பூஞ்சோலையுடனான வீதி வசதிகளுடன், பாதுகாப்பு ஊழியர்கள் இரவு பகலாகப் பணி புரிந்தும், எந்த நேரத்திலும் (இரவு பகல்) பொதுமக்களின் சேவை உறுதி செய்யப்பட்டு மன்னார் மாவட்டத்துக்கு எடுத்துக்காட்டான ஒரு வைத்தியசாலையாக இது விளங்குகிறது.

கத்தோலிக்க, இஸ்லாமிய, இந்து ஆலயங்கள் வரிசையில் தலைமன்னார் ஊர்மனையில் பிரதான ஆலயமான புனித லோறன்ஸ் ஆலயம் பழைய நிலைமை மாறி, புதிய மிக மிக அழகிய பவனிப் பாதை (கற்கள் பதிக்கப்பட்ட நிலையில்) ஒரு பாதையின் இரு பக்கங்களிலும் மின் கம்பங்களூடாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் அழகிய கலையரங்க மண்டபம் ஒன்றும் கட்டப்பட்டு இருக்கிறது. பழைய பாடசாலை மண்டபம். புதுமெருகூட்டப்பட்டு ஒரு கல்யாண மண்டபமாகக் காட்சி தந்து பொதுமக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது.

இஸ்லாமிய பழம்பெரும் மசூதி (சரித்திர பூர்வமானது) நாற்பது முளந்தான் பள்ளிவாசல் (முஸ்லிம் மக்களுக்கு இது ஒரு யாத்திரை ஸ்தலம்) ஊர்மனையில் பன்னெடுங்காலமாக பாதுகாக்கப்பட்டு வருகிறது. தலைமன்னார் துறைமுகத்தில் இந்து ஆலயமும் அமைந்துள்ளது. தலைமன்னார் ஊர்மனையில் ஓலைக் குடிசைகள் மாறி கல்வீடுகளும், மேலும் வீட்டுத் திட்டங்களும் வர வாய்ப்பும் உள்ளது. வீடு தோறும் நல்ல தண்ணீர்க் குழாய் வசதிகளுக்காக ஒரு பெரும் நன்னீர் வடிகால் கட்டடமும் அமையப் பெற்றிருக்கிறது. எனவே, எமது இளைஞர் சமுதாயம் எதிர்பார்க்கும் பட்டணமாக இது உருவாகப் போகின்றது.இவர் களின் கனவு நனவாக மாற எல்லாம் வல்ல இறைவன் கருணைமழை பொழிவாராக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த (சாதாரண தரப்) பரீட்சைப் பெறுபேறுகளில் பிரதேச ரீதியான ஒப்பீடுகளில் ஏற்றத்தாழ்வுகள்

கலாநிதி பா.தனபாலன்



ஒப்பீட்டு ரீதியாக கல்வியியல் தரவுகளும், ஆய்வுகளும் ஒரு நாட்டின் கல்வி முறைகளைச் சரியான திசையில் கொண்டு செல்ல வழியேற்படுத்திக் கொடுக்கின்றன. இந்த வகையில் இன்று ஒப்பீட்டுக் கல்வி ஆய்வு களும் பிரயோகங்களும் முதன்மை பெறுகின்றன. கல்விப் பெறுபேறுகளின் நிலை, இந்தப் பெறுபேறுகளில் தாக்கத்தை ஏற்படுத்திய காரணிகள், பிரயோகிக்கப்பட்ட கல்வி முறைகளின் ஒப்பீடு, அவற்றின் விளைவுகள் பற்றிய பகுப்பாய்வும், பிரச்சினைகளுக்கான தீர்வுகளும் ஒப்பீட்டுக் கல்வியின் செயன் முறைகளாகவுள்ளன.
நாடுகளின் அல்லது ஒரு நாட்டின் சமூக, சமய, கலாசார, பொருளாதார, இனத்துவ, அரசியல் காரணிகளைப் பகுப்பாய்வு செய்து கல்விப் பிரச்சினைகளை இனம் கண்டு தீர்வுகளைக் காண ஒப்பீட்டுக் கல்வி அணுகுமுறை வழிகாட்டுகின்றது.
இந்த வகையில் ஒரு நாட்டின் இடைநிலைக்கல்வி மனிதவாழ்க்கைக் காலத்தில் மிக முக்கிய பரிமாணமாகக் கருதப்படுகின்றது. எதிர் கால உயர்கல்வி, தொழிற்கல்வி, தொழில் வாழ்க்கை தேர்ச்சிகளின் அடிப்படைகள் இடைநிலைக் கல்வியினூடாகவே வழங்கப்படுகின்றன. இந்த வழங்கலில் நாட்டினுள்ளேயே பிரதேச ரீதியாக ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றமைக்கு 2015 ஆம்ஆண்டுநடைபெற்ற க.பொ.த சாதாரண பரீட்சைப் பெறு பேறுகள் சான்று பயக்கின்றன.

**பொதுவாக ஆட்சியமைப்பில் பெரும்பான்மையினரின் மேலாதிக்கம் மிகுந்து காணப்பட்டால் சிறுபான்மையினரின் கல்வி போன்ற துறைகள் நிதி வளப்பற்றாக் குறை காரணமாகப் பாதிக்கப்படுவதும், பாரபட்சமாக நடத்தப்படுவதும் ஒப்பீட்டு ஆய்வுகளினூடாகப் புலனாகின்றன.**

கல்விப் போக்குகள் பற்றிய தேசிய தரவுகளும் அவற்றை அடிப்படையாகக் கொண்ட பகுப்பாய்வு முடிவுகள் குறித்த நாட்டின் கல்வி நிலைமைகளை வெளிப்படுத்தும். தேர்ச்சி மட்ட இடைநிலைக்கல்வி கலைத்திட்டத்தை முறையாக இடைநிலைப் பாடசாலைகள் பூர்த்தி செய்தமைக்கான ஆதாரம் க. பொ.த. சூதாரண தரப் பரீட்சைப் பெறுபேறு கள் ஆகும். பொதுவாக ஆட்சியமைப்பில் பெரும்பான்மையினரின் மேலாதிக்கம் மிகுந்து காணப்பட்டால் சிறுபான்மையினரின் கல்வி போன்ற துறைகள் நிதி வளப் பற்றாக்குறை காரணமாகப் பாதிக்கப்படுவதும், பாரபட்சமாக நடத்தப்படுவதும் ஒப்பீட்டு ஆய்வுகளினூடாகப் புலனாகின்றன.
2015 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த(சா/த) பெறுபேறுகளின் கல்வி வலய அடிப்படையில்: க.பொ.த (உயர்தரம்) கற்க தகைமை பெற்றோர் வீதம் (இலங்கையிலுள்ள 98 கல்வி வலயங்களில் முன்னிலையிலுள்ள முதல் 15 வரிசைப்படுத்தப்படுகிறது.)

| வலயம் | உ/த தகுதி வீதம் |
|---|---|
| கண்டி | 83.06 |
| வலஸ்முல்ல | 83.03 |
| ஜெயவர்த்தனபுர | 78.68 |
| கொழும்பு | 78.57 |
| மாத்தறை | 78.47 |
| காலி | 77.85 |
| மட்டக்களப்பு மத்தி | 77.07 |
| கேகாலை | 76.85 |
| கம்பஹா | 76.81 |
| முளட்டியான | 76.57 |
| அக்கரைப்பற்று | 76.32 |
| குருநாகல் | 75.48 |
| குளியாப்பிட்டி | 75.42 |
| அக்குறச | 75.24 |
| நிக்கரவட்டி | 74.86 |

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் 2016

கல்வியில் சமவாய்ப்பு என்பது பொதுவான உலக ஒப்பீட்டுக் கல்விச் செல்நெறியாகவுள்ளது. ஆனால் இலங்கையில் இது ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் பல்வேறு அரசியல் இனப்பாகுபாட்டுக் கொள்கைகளின் பின்னணித்தாக்கங்கள் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதை மேற்குறிப்பிட்ட அட்டவணை எடுத்தியம்புகின்றது. க.பொ.த சாதாரண தரத்தில் முதல் பதினைந்து சிறந்த பெறுபேறுகளைக் கொண்ட வலயங்கள் பெரும்பான்மைச் சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களாகும். மட்டக்களப்பு மத்தி மட்டும் புறநடையாகவுள்ளது.
ஒப்பீட்டுக் கல்வி ஆய்வுகளின்படி ஒரே இனத்தைச் சேர்ந்த நாடுகளில் சமமாக, உயர்வான கல்வி அடைவுகள் காணப்படுகின்றன. உதாரணம் நோர்வே, சுவீடன், டென்மார்க் இன்றைய உலகில் நாடுகள் பல்லின சமூகங்கள் வாழ்பவையாகவுள்ளன. தேசியப் பிரச்சினைகளின் தீர்வுக்காக கல்வி உதவியுள்ளது. உதாரணமாக அமெரிக்கா, கறுப்பு இனமக்களை வெள்ளையின மக்களுடன் இணைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் நீண்ட காலமாகத் தோல்வியுற்ற போதிலும் 1970 இன் பின் கல்வியினூடாக இருமொழி, இரு கலாசார வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. சமூக மய மாக்கலின் மூலம் சகலரையும் அமெரிக்கராக்கும் திட்டம் கல்வி மூலமாக வெற்றியடைந்துள்ளது. இலங்கையில் இந்த நிலை தோல்வியடைந்ததாகவேயுள்ளது.

**வடமாகாண நிலை**

நீண்டகாலமாக கல்வியில் முதன்மை பெற்றிருந்த வடமாகாணம் நாட்டிலேற்பட்ட இனவாத ஒடுக்குமுறைகள், மிகப் பயங்கரமான போர்க் காலத்திலும் கல்வித்துறையில் சளைக்கவில்லை. ஆனால் இன்று பல பின்னடைவுகளை எதிர்நோக்கியுள்ளது.

(அட்டவணை 01)

| நிலை 2015 | நிலை 2016 | கல்வி வலயம் | உயர்தரத்துக்கு தெரிவாகுவோரின் வீதம் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | 2012 | 2013 | 2014 | 2015 |
| 27 | 21 | யாழ்ப்பாணம் | 67.79 | 71.91 | 71.06 | 70.61 |
| 35 | 6 | மன்னார் | 67.44 | 72.71 | 78.02 | 69.69 |
| 51 | 13 | வவுனியா தெற்கு | 67.64 | 72.95 | 74.06 | 65.89 |
| 60 | 23 | வடமராட்சி | 64.74 | 67.88 | 66.07 | 63.81 |
| 61 | 53 | மடு | 53.18 | 60.15 | 65.03 | 63.78 |
| 84 | 83 | வலிகாமம் | 58.14 | 62.82 | 58.02 | 58.33 |
| 85 | 62 | தென்மராட்சி | 60.00 | 64.67 | 64.03 | 57.37 |
| 90 | 90 | வவுனியா வடக்கு | 58.25 | 61.75 | 52.07 | 55.46 |
| 93 | [illegible] | முல்லைத்தீவு | 48.46 | 59.01 | 58.01 | 53.21 |
| 94 | 94 | துணுக்காய் | 42.71 | 51.23 | 50.04 | 49.19 |
| 97 | 93 | கிளிநொச்சி | 47.23 | 52.51 | 52.02 | 46.44 |

தேசிய ரீதியாக க.பொ.த சாதாரண தர சித்தி வீதங்களுடன் ஒப்பிடுகையில் வடமாகாணம் கடைசி நிலையில் காணப்படுகின்றது. இதற்குப் பல காரணங்கள் எடுத்தியம்பப்படுகின்றன. பலர் பலவாறாக விமர்சனங்களை வெளியிட்டுள்ளனர். சரியான முகாமைத்துவமின்மை, பாடசாலை மட்டத்தில் ஒவ்வொரு அதிபரும், ஆசிரியர்களும் தமது பிள்ளையை எவ்வாறு கவனிப்பார்களோ! அவ்வாறான நிலையில் பாடசாலை அனைத்து மாணவர்களையும் கவனிக்க வேண்டும். மாணவர்கள் பரீட்சையில் சித்தியடைந்தால் என்ன? சித்தி அடையாவிட்டால் என்ன அவர்களுக்குச் சம்பளம் வழங்கப்படும். எனவே அவர்கள் பொறுப்புக் கூற வேண்டிய நிலை இல்லையோ என வேதனைப்பட வேண்டிய நிலை.

2015 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த(சா/த) பரீட்சைப் பெறுபேறுகளின்படி தர வரிசையில் உள்ள மாகாணங்கள் க.பொ.த(உ/த) வகுப்புக் கற்கத் தகைமை பெற்றோர்

| மாகாணம் | வீதம் |
|---|---|
| தென் | 75.21 |
| மேல் | 72.67 |
| சப்ரகமுவ | 69.97 |
| வடமேல் | 69.66 |
| மத்திய | 66.98 |
| வடமத்திய | 66.61 |
| ஊவா | 65.85 |
| கிழக்கு | 63.54 |
| வட | 60.38 |

**பரீட்சைத் திணைக்களம் 2016**

போரின் தாக்கவிளைவுகள், உளப்பாதிப்புக்கள், அர்த்தமற்ற அதிகூடிய சுயநலம், போரால் உடல்உள ரீதியாகப் பாதிப்படைந்தவர்களுக்கான நிவாரணமின்மைகள், மாகாண அரசின் மந்தகதி, ஒற்றுமையின்மை, அதிகாரிகளின் அர்த்தமற்ற அதிகாரம், கல்விப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண பொருத்தமான ஆய்வு அபிவிருத்திப் பிரிவுகளின்மை, பல்கலைக் கழகம் மற்றும் நிறுவனங்களின் அக்கறையீனங்கள், அரசியல்வாதிகள் கல்வியில் மிகக் கூடுதல் அக்கறையை காட்டாமை, நீண்டகால நோக்கில் படிப்படியாக வளர்ச்சித் திட்டங் களைப் பொருத்தமாகத் தயாரிக்காமை, பாடசாலைகள், கல்விப் பிரிவினர் அனை வரும் மாணவர்களுக்காகவே உள்ள னர் என்பதை மறந்து விட்டார் களே! இவ்வாறான விமர்சனங்கள் உண்மையான தமிழினப் பற்றுறுதி காரணமாகவே எழுகின்றன. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வரலாற்றில் இன்றைய தினம்

1809 - பிரான்ஸ் மற்றும் ஐக்கிய ராச்சியத்துக்கு இடையே கடற் சண்டை நடைபெற்றது.
1909 - டெல் அவிவ் நகர் உருவாக்கப்பட்டது.
1919 - சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் (ILO) ஸ்தாபிக்கப்பட்டது
1970 - அப்பலோ 13 தொடங்கப்பட்டது
1987 - இஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர் ஷிமோன் பெரஸ் மற்றும் ஜோர்தான் மன்னர் ஹுசைன் ஆகியோர் லண்டன் ஒப்பந்தத்தில் இரகசியமாகக் கைச்சாத்திட்டனர்.
1993 - 3000 சிங்களக் குடும்பங்களை மட்டக்களப்பில் குடியேற்றும் திட்டத்தை இந்த ஆண்டில் செயற்படுத்த அரசு தயார் எனச் செய்தி.
2000 - செஞ்சிலுவைச் சங்க வாகனம் மீது விமானப் படைத் தாக்குதல், சர்வதேச ஒப்பந்த மீறல் என இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளைத் தூதுவர் தெரிவிப்பு.
2000 - கண்கள் கட்டப்பட்ட நிலையில் மன்னாரில் 3 சடலங்கள் மீட்பு.
2007 - அல்ஜீரிய தலைநகர் அல்ஜியர்சில் இடம்பெற்ற இரண்டு குண்டுத் தாக்குதல்களில் 33 பேர் சாவு. மேலும் 222 பேருக்குக் காயம்.

# மிகப் பெரிய முட்டாள் யார்?



ஆற்றிலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தான் முல்லா. அப்போது அவன் நண்பர்கள் இருவர் காலைக் கடன்களைக் கழிக்க ஆற்றுக்குச் சென்று கொண்டிருந்தனர். அவர்கள் இருவரும் சரியான வடிகட்டிய முட்டாள்கள் என்று முல்லாவுக்குத் தெரியும். இருந்தாலும் ஒரு மரியாதையின் பொருட்டு, "காலை வணக்கம்" என்று கூறிவிட்டுச் சென்றான் முல்லா.

உடனே ஒருவன் இன்னொருவனிடம் கேட்டான். "காலை வணக்கத்தை உனக்குச் சொல்லாமல் ஏன் எனக்குச் சொன்னான் முல்லா. நீதானே எனக்கு முன்பிருந்தே முல்லாவின் நண்பன்.

இதைக் கேட்ட அடுத்தவன் எரிச்சலானான்.

"நீ ஒரு சரியான முட்டாள். அவன் எனக்குத்தான் வணக்கம் தெரிவித்தான். நீதான் தப்பாக அர்த்தம் செய்து கொண்டாய்" என்று கூறினான். உடனே முதலாமவனுக்குக் கோபம் வந்தது. அவர்கள் இருவரும் அப்பிரச்சினை பற்றி காரசாரமாகப் பேசினர். இருவரும் ஒருவரை ஒருவர் சரமாரியாகத் திட்டித் தீர்த்துக் கொண்டனர்.

கடைசியாக ஒரு முடிவுக்கு வந்தனர்.

''இந்தப் பிரச்சினையை முல்லாவிடமே கேட்டுத் தெரிந்து கொள்ளலாமே"

எனவே இருவரும் முல்லாவிடம் சென்றனர்.

"நீ யாருக்கு உன் காலை வணக்கத்தைச் சொன்னாய் முல்லா? எனக்கா இவனுக்கா? என்று ஒருவரை ஒருவர் சுட்டிக்காட்டி கேட்டனர். முல்லா அமைதியாகக் கூறினான்.

''உங்களில் யார் ஒருவன் மிகப் பெரிய முட்டாளோ அவனுக்குத்தான் சொன்னேன்"

அவர்கள் முல்லாவை விட்டு விலகி வந்தனர். அந்த முட்டாள் நான்தான் என்றான் ஒருவன். இல்லை அது நான்தான் என்றான் அடுத்தவன். மீண்டும் அவர்களுக்குள் பிரச்சினை ஆரம்பித்தது.



# சுற்றுலா



சுற்றுலா என்பது வெறும் கேளிக்கைகளுக்காகவும் வேடிக்கை வினோதங்களுக்காகவும் மட்டும் அல்ல; அறிவு வளர்ச்சியே அதன் நோக்கமாக இருக்க வேண்டும். பயணங்கள் நமது அனுபவத்தை விரிவாக்குகின்றன. தேசப்படங்களின் மூலம் நாம் பல்வேறு இடங்களையும் பல நாடுகளையும் பற்றி அறிந்து கொள்கிறோம். எனினும் நேரில் செல்லும்போதுதான் நமக்கு நேரடி அனுபவம் கிடைக்கிறது. செல்வதற்கு முன் இடங்களின் வரலாற்றை நன்றாகப் படித்திருக்க வேண்டும். அந்த இடங்களுக்கு நேரில் செல்லும் போது, அந்த இடங்களின் முக்கியமான விடயங்களைக் குறிப்பு எடுத்துக் கொள்ள வேண்டும்.

பொருள்காட்சிச் சாலைகளுக்குச் சென்றால் அங்கு வைக்கப்பட்டுள்ள எந்தப் பொருளையும் அனுமதியின்றித் தொடக் கூடாது. ஓர் இடத்தின் சிறப்பைப் பற்றி ஆசிரியரோ பிறரோ விளக்கும்போது கவனமாகக் கேட்க வேண்டும். ஆறு அல்லது கடலுக்கு அருகில் செல்லும் போது எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். ஆசிரியர்களின் துணையின்றி அவற்றில் குளிப்பதும் நீந்தி விளையாடுவதும் மிகவும் ஆபத்தானது.

பயண வேளைகளில் வண்டியிலிருந்து தலையையோ கைகளையோ வெளியே நீட்டக் கூடாது. நமது பயணம் பத்திரமாக மட்டுமன்றி மகிழ்ச்சியாகவும் அறிவுக்கு விருந்தாகவும் அமைவதற்காக நாம் பயணம் கிளம்புவதற்கு முன்பே கடவுளை வேண்டிக் கொள்ள வேண்டும்.



# வர்ணம்

## தீட்டுவோம் வாங்க....



# விடுகதைகள்

1. அதிக நீளமும் இல்லை, அதிக அகலமும் இல்லை; உடையவர் அளந்தால் ஒரு சாண் நீளம்?

2. ஒரே வீட்டுக்கு ஒரே ஆள்; உருவில் மிகவும் சிறிய ஆள்?

3. சாப்பாட்டுக்கு அவசியமாம், தனியாய்த் தின்ன முடியாதாம்?

4. வேலைக்காரிகள் வெள்ளை நிறம், வீட்டு வாசல் காக்கிறார்கள்; வீட்டுக்காரி சிவப்பு நிறம், மேலும் கீழும் ஆடுகிறாள்?

5. ஒரு மரத்துக்குப் பன்னிரண்டு கிளை, ஒரு கிளைக்கு நாலு கூடு, ஒரு கூட்டுக்கு ஏழு முட்டை, ஏழு முட்டையில் ஒரு முட்டை பொன் முட்டை?

6. அழையாத விருந்தாளியாக அரண்மனைக்குள் செல்வேன்; அரசர் முன் அமர்வேன் அறுசுவையோடு உண்பேன் நான் யார்?

7. அறுக்க உதவாத கருக்கரிவாள் எது?

## விடைகள்

1. செருப்பு,
2. நத்தை,
3. உப்பு,
4. பற்கள், நாக்கு,
5. வருடம், மாதம், வாரம், கிழமைகள், விடுமுறை நாளான ஞாயிறு,
6. ஈ,
7. சந்திரனின் பிறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் அறியோம்...! உங்கள் கடமையைப் போய்ச் செய்யுங்கள்

காலத்தால் முற்பட்டு எம்முன் வாழ்ந்து மறைந்த சித்தர்களில் முக்கியமானவர் செல்லப்பா சுவாமிகள். உலகத்துக்குத் தன்னை வெளிக்காட்டிக் கொள்ளாத சித்த புருஷர் இவர். மக்கள் கண்களில் பைத்தியக்காரன் போலவே தோற்றம் தந்தார். இதனால் மக்கள் விசர்ச் செல்லப்பா என்றும் பெயர் சூட்டி அவரை அழைத்திருந்தனர். இந்த மகான் சைவத்திற்கும், மக்களுக்கும் பல அரிய அற்புதங்களையும் மகத்துவங்களையும் சொல்லி வைத்துவிட்டுச் சென்றிருக்கிறார்.

சண்டை போடுவார், தடியால் விரட்டுவார், சமையல் செய்வார், சமையல் முடிந்த பின் சட்டி பானையையும் உடைப்பார். இப்படியாகச் சம்பந்தமில்லாத காரியங்களைச் செய்தாலும் அவரது செய்கைகளில் நிறைந்த போதனைகளும், சிந்தனைகளும் சூட்சுமமாய்ப் பொதிந்திருந்தன. செல்லப்பர் தன்னை நாடி வருபவர்களுக்குக் கொடுக்கின்ற உபதேசம் எல்லோரும் ஒரே குலம், ஒரே இனம். எல்லோரும் சமம். நீயும் மனிதன், நானும் மனிதன் போய்க் கடமையைச் செய்யுங்கள் என்பதாக அமைந்திருந்தன.

இதைவிட செல்லப்பா சுவாமிகள் யோகர் சுவாமிகளுக்குக் கொடுத்த உபதேசங்களும் மகா வாக்கியங்களும் மகத்தானவை. ஒரு பொல்லாப்புமில்லை, எப்பவோ முடிந்த காரியம், நாம் அறியோம், முழுதும் உண்மை என்பனவே அவை. அத்தனையும் தற்காலத்திலும் பொருளுரைக்கின்றன.

இந்த நாட்டில் வாழ்கின்ற சகோதர இனம் தமிழினம். அவர்களுக்கான நியாயமான உரிமைகளைக் கால தாமதமின்றி வழங்க வேண்டும், இன சமத்துவத்தைப் பேண வேண்டும், நல்லிணக்கமாக வாழ வேண்டும் என்பதான செயல் நிலைகள் இன்னமும் கீழ் நிலையிலேயே இருந்து வருகின்றன. அவற்றை மேல் நிலைப்படுத்துவதற்கான எந்த முனைப்புக்களும் இதுவரையில் வலுப் பெறவில்லை.


அரசின் தற்போதைய நகர்வுகளும் நல்லூர் தேரடிச் சித்தர் தன்னை நாடி வந்த அடியவருக்கு வழங்கிய உபதேசங்களும் ஒன்றோடு ஒன்று கருத்து நிலையில் ஒற்றுமைப்பட்டு நிற்கின்றன. செல்லப்பரின் மகத்துவம் வேறு. அவரின் கருத்தும் செயலும் மக்களை ஆற்றுப் படுத்தின, வளம்படுத்தின, நல்வழிகாட்டின, அவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வைத் தந்தன. ஆனால் அரசின் செயற்பாடுகளைப் பார்த்தால் தமிழனுக்கு நியாயமாகத் தர வேண்டிய - எதையும் வழங்கவில்லை. அரசின் செயற்பாடுகள் செல்லப்பர் தன் அடியவருக்கு நன்மைக்கென சொன்ன விடயங்களை இங்கே பட்டறிவாக உணர்த்தி நிற்கின்றன. இங்கு ஏன் வருகின்றீர்கள்.? நாங்கள் பிச்சைக்காரர்கள்..?, எங்களிடம் தருவதற்கு ஒன்றுமில்லை.! நாங்கள் சும்மா இருக்கின்றோம். எங்களைத் தொந்தரவு செய்யாதீர்கள்.. என்பதாக அவை அமைந்திருந்தன.



நீண்ட நாட்கள் அமைதியாக இருந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல தமிழர் தரப்பு விடயம் என்றவுடன் மீண்டும் தன் பாணியில் கருத்துக்களில் சதிராடியிருக்கிறார். வட மாகாண சபையின் தீர்வுத் திட்டம் குறித்த வரைவு அண்மையில் வெளியிடப்பட்டது. இது தொடர்பில் கருத்துக் கூறுகையிலேயே அவர் ஆட்டம் போட்டிருக்கின்றார். தனித் தமிழ் பிராந்தியங்களும், தனியான சிங்கள, தமிழ் பிராந்தியங்கள் அமைக்கப்படுமாயின் நாட்டில் தமிழ் சிங்கள உறவில் விரிசல் ஏற்படும் என்று வழக்கமான தன் பாணியில் பாணி கிண்டியிருக்கிறார். அதனையும் தாண்டி வடமாகாண சபையின் நகர்வுகளும், புலம்பெயர் அமைப்புகளின் செயற்பாடுகளும் வடக்கில் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளன. ஆகவே மீண்டும் வடக்கில் இராணுவப் பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டும். அதற்கான காலம் மீண்டும் தோற்றம் பெற்றுள்ளது, வடக்கு பிரிவினை வாதத்தின் பக்கம் தொடர்ச்சியாகச் செயற்படுகின்றது என கூறி இனவாதம் என்கின்ற பக்கவாத நோயின் அறிகுறியை மீண்டும் தொட்டுக் காட்டியிருக்கின்றார்.

இதற்கிடையிலே மைத்திரிபால சிறிசேன, இனப்பிரச்சினை தீர்க்கப்படாவிடில் நாட்டில் கிளர்ச்சி மீண்டும் தலை தூக்கும் என்று கூறி நோயின் அறிகுறிக்கான எதிர்வினைக் குறியாக வழக்கம் போல வார்த்தைகளில் நோய்க்கான முதலுதவியை வழங்கியிருக்கிறார்.

நல்லாட்சி அரசின் மீதான தமிழ் மக்களின் நம்பிக்கையையும், பொறுமையையும் இனிமேலும் சிறுமைப்படுத்தாமல் தீர்வுகளை விரைந்துதர தற்போதைய அரசு செயலாற்ற வேண்டும். இதுவே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும். தமிழ் மக்கள் சித்தர்களின் உபதேசங்களையும் தியாகப் பித்தர்களின் உயர்வுகளையும் உணர்ந்தவர்களாகத் தான் பொறுமையோடு தம்மை முன்னகர்த்தி வருகின்றனர். ஆகவே உங்கள் கடமையைப் போய் செய்யுங்கள்...



தெல்லியூர்த் தேவி

# இளம் சமுதாயத்தை பாதுகாப்போம்

சமுதாயம் என்பது அனைத்து மதங்களையும், மக்களையும் சார்ந்தது. அனைத்து மதங்களிலும், மக்களிலும், அன்பு, பண்பு, பாசம், வரவேற்பு, உபசரிப்பு ஆகியன பின்னிப் பிணைந்து இருப்பதை உணர முடிகின்றது. மனிதர்கள் மனிதர்களாக வாழ வேண்டும். மிருகங்களாக மாறக் கூடாது எங்களுக்கு உறவு என ஒன்று உள்ளது. அப்பா, அம்மா, சகோதரம், நண்பர்கள் மற்றும் ஏனைய உறவுகள் யாவும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்து பரந்துள்ளன. எங்களது கலாசாரம் மென்மையானது. இனிமையானது உலகில் தனியிடம் பெற்றுச் சிறந்து விளங்குகின்றது. இப்போது இளைய தலைமுறையில் வேறு கலாசாரம் சிறிது சிறிதாக ஊடுருவி வருகின்றமை புலனாகின்றது. இன்றைய காலகட்டத்தில் காலப் போக்கில் மாறுதல்கள் தேவைதான். ஆனால் இந்த மாறுதல்களினால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களையும் எதிர்கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமையும் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டி உள்ளமை கண்கூடு.

நாங்கள் எத்தனையோ போர்களையும் இடர்களையும் சந்தித்து நொந்து போய் உள்ள நிலையில் மேலும் எல்லையில்லாத துயரத்தை அடைந்து கொண்டிருக்கின்றோம். இந்தக் கலாசார மாற்றங்களால் எத்தனை பெறுமதி மிக்க உயிர்களைப் பறிகொடுத்துக் கொண்டிருக்கிறோம். உலகரீதியாகத் தீவிரவாதம் என்று ஒழிகின்றதோ அன்று தான் உலக மக் களுக்கு நிம்மதி கிடைக்கும்.

ஆனால் பெற்றோர்களும் ஆசிரியர்களும் பிள்ளைகளுக்குச் சிறுவயதிலிருந்தே நல்ல பழக்கவழக்கங்களைக் கற்றுக் கொடுத்து அவன் /அவள் பெரியவராகும் வரை சத்தியம், நாணயம், தர்மம் இவற்றைச் சிதறவிடாது பாதுகாத்து குடும்பத்துக்கும் நாட்டுக்கும் நற்பிரசைகளைத் தந்து உதவ வேண்டும்.

இன்று ஆசிரியர்கள் நிலை தடுமாறுவதை என்ன என்று கூறுவது! ஆசிரியத் தொழில் புனிதமானது ஆசிரியத் தொழிலின் கடமையைச் சரிவரச் செய்பவன் உயர்ந்த இடத்தில் போற்றப்படுகின்றான். அருளாசியும் கிடைக் கின்றது. ஆசிரியரும் அப்பா, அம்மா, சகோதரத்துடன் தானே உறவு முறையுடன் கூடியவராகவே வாழ்கிறார். எனவே அவரும் அந்தச் சமூகக் கட்டுக்கோப்பில் நின்று தனது ஆசிரியத் தொழிலுக்கு அதன் புனிதத் தன்மையை மெருகூட்டி நடப்பாராயின் மாந்தருள் மாணிக்கமாகப் பரிணமிப்பார். சிறந்த சமூகப் பிரதிநிதியாக மதிக்கப்படுவார்.

பெற்றோர்களும் பிள்ளைகளின் ஒவ்வொரு அசைவையும் சிறு குழந்தை முதல் பெரியவனா கும் வரை கண்காணித்தல் வேண்டும். தவறு செய்யும் போது அன்புடன் கண்டித்தும் நல்லன செய்யும்போது அன்பாக ஆதரித்தும் உற்சாக மூட்டியும் வளர்க்கப்படல் வேண்டும். தவறு செய்யும் பட்சத்தில் அதனால் ஏற்படப் போகும் தீய விளைவுகளை உதாரணங்களுடன் பிள்ளைகளுக்கு அன்பான அரவணைப்புடன் விளங்க வைத்தல் வேண்டும். சிறு பிள்ளைகள் பெரியவர்களாக (Teen Age) மாறும் போது தான் தடம்புரள வாய்ப் புள்ளது. எனவே அக் கால கட்டத்தில் பெற்றோர் ஆசிரியர்கள் பக்கத்துணையாக நின்று அவர்களை ஆற்றுப்படுத்தல் வேண்டும். நல்ல பிள்ளைகளாகவே மண்ணில் பிறக்கிறார்கள் அவர்கள் நல்லவர்களாவதும் கெட்டவர்களாவதும் அன்னை வளர்ப்பினிலே என்பார்கள். ஆகவே நல்லவர் களாக வளர்த்தெடுப்பது பெற்றோரின் கைகளிலேயும் சிறந்த அறிவாளியாக்குவது ஆசிரியப் பெருந்தகைகளின் கைகளிலேயும் தங்கியுள்ளமை வெள்ளிடைமலை. ஒருவர் பெரியவராகும் போது குடிப்பழக்கம், தகாத நண்பர்கள் கூட்டம், திருட்டு, கொலை, கொள்ளை போன்றவற்றில் ஈடுபட்டு நாளடைவில் சமூகத்தில் அவனுக்குரிய மரியாதை சிறப்புகள் இன்றி அவதிப்பட்டுக் கடைசியில் சிறையையோ அல்லது சாவையோ அடைய நேரிடுகிறது. இல்லாவிட்டால் தகாத நடத்தையால் கெட்டு, அவமதிக்கப்பட்டு வாழ வழி தெரியாது தடுமாற வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றார்கள்.

ஆகவே பெற்றோர்கள் தம்பிள்ளைகளைக் கவனமாக ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து வளர்ப்பதுடன் தர்மத்துக்குக் கட்டுப்பட்ட குடும்ப அமைப்பில் மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு அவர்களை இட்டுச் செல்லும் பாதையில் நடைபோட வழி காட்டி வளர்ப்பார் களாக!

தாய் தந்தை இருவருமே இன்று தொழில் பார்க்கும் கட்டத்தில் ஒரு நேரமாவது இரவுச் சாப்பாட்டின் போதா வது ஒன்றாக இருந்து அன்றாட நடவடிக்கைகளை அலசிப் பரிமாறி அதில் உள்ள கஷ்ட நஷ்டங்களை உணர்வு பூர்வமாக ஆராய்ந்து நல்வழிப் படுத்துதல் வேண்டும். அத்துடன் அடுத்த நாள் வேலைத் திட்டத்தையும் பகிர்ந்து கொள்வார்களேயானால் நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகமாக மாறி நாட்டில் நற்பிரசைகளாக வாழலாம்.

ஆசிரியத் தொழில் புனிதமானது ஆசிரியத் தொழிலின் கடமையைச் சரிவரச் செய்பவன் உயர்ந்த இடத்தில் போற்றப்படு கின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







**மேடம்:** முன்யோசனையுடன் செயற்பட்டு வருவீர்கள். தொழில், வியாபாரத்தில், மித மான வருமானம் கிடைக்கும். உறவினர் வருகையால், சந்தோசம் கூடும். பெண்கள், ஆடை ஆபரணம் வாங்குவர்.



**இடபம்:** புதியவர்களின் அறிமுகத்தால், நன்மை காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். இஷ்ட தெய்வ வழிபாடு சிறப்பாக நடந்தேறும். பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு மகிழ்வீர்கள்.



**மிதுனம்:** மனதில் நேர்மை நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில், வருமானம் மிதமாக இருக்கும். உடல்நலனில் அக்கறை உண் டாகும். பெண்கள், தாய் வீட்டாரின் அன்பைப் பெறுவர்.



**கடகம்:** அவமதித்து பேசியவர், அன்பு பாராட்டு வார். தொழில், வியாபாரத்தில், வியத்தகு முன்னேற்றம் உண்டாகும். ஆதாயம் அதி கரிக்கும். புத்திரர் விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள்.



**சிங்கம்:** சான்றோர்களின் ஆசியும், அன்பும் கிடைக்கும். தொழில் வளர்ச்சியால், வருமானம் பெருகும். பெண்களுக்கு, பொன் பொருள் சேரும். பணியாளர்கள், சலுகை பயன் கிடைக் கப் பெறுவர்.



**கன்னி:** எதிர்கால நலனில், அக்கறை செலுத் துவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சிக்கு, விடாமுயற்சி தேவைப்படும். வரவை விட நிர்வாகச் செலவு அதிகரிக்கும். கண் பாது காப்பில், கவனம் தேவை.



**துலாம்:** உறவினர்களின் கருத்தை விமர் சிக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில், பொறுப்பு அதிகரிக்கும். மிதமான வருமானம் கிடைக்கும். உடல் நலனில் கவனம் செலுத் துவது நல்லது.



**விருச்சிகம்:** சந்தோச மனப்பான்மை உண் டாகும். தொழில், வியாபாரத்தில், அபரிமித மான முன்னேற்றம் ஏற்படும். ஆதாயம் கூடும். குடும்பத்தினருடன், விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள்.



**தனுசு:** பணிகளைப் பொறுப்புடன் நிறை வேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும். சேமிக்கும் விதத் தில் இலாபம் வரும். அரசியல்வாதிகளுக்கு புதிய பதவி கிடைக்க வாய்ப்புண்டு.




**மகரம்:** நல்லோர்களின் ஆலோசனை, வளர்ச்சிக்கு வழிவகுக்கும். தொழில், வியா பாரத்தில், எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். எதிர்பார்த்த சுபச் செய்தி வந்து சேரும். பெண்களின் எதிர்பார்ப்பு நிறைவேறும்.



**கும்பம்:** உங்களைப்பற்றி குறை சொல்ல சிலர் காத்திருப்பர். தொழில், வியாபார வளர்ச் சிக்கு, புதிய உத்திகளைப் பின்பற்றுவது நல் லது. பெண்கள், வீட்டுச் செலவுக்குக் கடன் வாங்க நேரிடும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை.



**மீனம்:** எதிரிகள் இருந்த இடம் தெரியாமல் மறைவர். அதிக உழைப்பால் தொழில், வியா பாரத்தில், வளர்ச்சி ஏற்படும். பணம் கொடுக் கல், வாங்கல் சீராகும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி குறித்த பேச்சு நடந்தேறும்.




**இந்த உலகத்தில் ஒருவனை கெட்டவன் என்று சொல்ல ஒரு வார்த்தை போதும்**



**ஆனா நல்லவன் என்று சொல்ல சாட்சி தேவைப்படுகிறது**



**மகள்கள் கேட்டதை முடிந்தவரை முடியாது என்று சொல்லிவிடக் கூடாது என்கிற வாழ்க்கையைத் தான் அப்பாக்கள் வாழ ஆசைப்படுகிறார்கள்.**




படித்ததில் பிடித்தது

நோயாளி ஒருவர் ஒரு முறை உடல் நிலை சரியில்லை என வைத்தியரிடம் போனார். அவரைப் பரிசோதனை செய்த வைத்தியர் "உனக்கு எந்த நோயும் கிடையாது" -என்றார். ஆனால் நோயாளி "வெளியில் ஒன்றும் தெரிய வில்லை. உள்ளுக்குள் ஏதோ செய்கிறது" -என்றார்.
வைத்தியர், "அப்படி என்றால் நீ சிரிக்கக் கற்றுக் கொள்" என்றார்.
நோயாளி, "சிரிக்க வேண்டும் என்றால் என்ன செய்யவேண்டும்" என்றார்.
வைத்தியர், "ஏதாவது கலைவாணர் படம் பார். அப்போது உனக்கு சிரிப்பு வரும்" என்றார்.
நோயாளி மறுநாளும் வைத்தியரிடம் வந்தார்.
வைத்தியர் "கலைவாணர் படம் பார்த்தீர்களா? உங்களுக்கு சிரிப்பு வந்ததா"? என்றார்.
நோயாளி, "எனக்கு சிரிப்பு வரவில்லை" என்றார்.
வைத்தியருக்கு கோபம் வந்தது. "கலைவாணர் படம் பார்த்தும் கூட உனக்கு சிரிப்பு வரவில்லை என்றால் நீ என்ன மனிதன்?
யார் நீ என்றார்"..
நோயாளி, "நான் தான் அந்த கலைவாணர்" என்றார்...



♥ கோபிகா ♥
தவறான புரிந்துணர்வுகள் தான் இரு அன்பான இதயங்களின் அழ கான உறவுகளைப் பிரித்து விடுகின்றன.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2 | | | | | | 7 | |
| 7 | | 6 | 5 | | | | | 3 |
| 5 | | | 8 | | | | | |
| | | | 3 | | 2 | | 5 | 6 |
| 6 | | | | | | | | 1 |
| 3 | 1 | | 6 | | 4 | | | |
| | | | | | 8 | | | 9 |
| 2 | | | | | 5 | 3 | | 4 |
| | 6 | | 4 | | | | 1 | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 6 | 9 | 8 | 5 | 4 | 7 |
| 8 | 4 | 9 | 2 | 7 | 5 | 3 | 6 | 1 |
| 6 | 7 | 5 | 4 | 1 | 3 | 8 | 2 | 9 |
| 9 | 5 | 4 | 1 | 3 | 2 | 7 | 8 | 6 |
| 3 | 1 | 8 | 7 | 6 | 4 | 2 | 9 | 5 |
| 7 | 6 | 2 | 8 | 5 | 9 | 4 | 1 | 3 |
| 2 | 3 | 6 | 9 | 4 | 7 | 1 | 5 | 8 |
| 4 | 9 | 7 | 5 | 8 | 1 | 6 | 3 | 2 |
| 5 | 8 | 1 | 3 | 2 | 6 | 9 | 7 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதி யான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப் படை. 1–9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல் களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப் பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தட வைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப் பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதி யில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதா கும். 1986 இல் ஜப்பானிய நிறுவன மான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றி கரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.




வசனம் இல்லாத படம், பாடல் இல்லாத படம், இருவர் மட்டுமே நடிக்கும் படம், ஹீரோயின் இல்லாத படம் என மாறுபட்ட கதை அம்சத்துடன் படங்கள் வந்திருக்கின்றன. அதுபோல் ஒரேயொரு நடிகர் மட்டும் நடிக்கும் படமாக உருவாகிறது "மற்றொருவன்". இதுபற்றி இயக்குநர் மஜோ மேத்யூ கூறும்போது, உளவியல் சார்ந்த கதை. ஹீரோ ஒவ்வொரு விடயத் தையும் கனவு காண் கிறான். அது நிஜத்தில் நடக்கிறது. அதிர்ச்சி தரும் ஒரு கனவு காண்கிறான். அது நிஜமாகிறதா என்பது கிளைமாக்ஸ். இது ஒரேயொரு நடிகர் மட்டும் நடிக்கும் படம். ரியாஸ்கான் நடித்தி ருக்கிறார். இவர் நிழலுடன் சண்டைபோடும் காட்சிகள் கஷ்டப் பட்டு படமாக்கப்பட்டுள்ளது. தமிழ், தெலுங்கு, மலையாளம் என 3 மொழிகளில் இந்தப் படம் உருவாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | – | 40 | 60 | 60 | 60 | 25 | 30 |
| கத்தரி | 80 | 50 | 70 | 60 | 80 | 40 | 60 | 50 |
| கரட் | 80 | 100 | 80–200 | 120 | 120 | 120 | 80 | 140 |
| மரவள்ளி | 50 | 50 | 40 | 40 | 50 | 60 | 40 | 40 |
| பயிற்றை | 60 | 70 | 80 | 120 | 80 | 40 | 60 | 60 |
| பாகல் | 120 | 100 | 140 | 120 | 100 | 100 | 120 | 80 |
| கருணைக்கிழங்கு | 100 | 80 | 80 | – | 60 | – | 60 | 50 |
| பெ.வெங்காயம் | 80 | 100 | 80 | 90 | 80 | 100 | 75 | 60 |
| சி.வெங்காயம் | 50 | 70 | 80 | 90 | 80 | 120 | 75 | 65 |
| பூசணி | 40 | 30 | 40 | 40 | 20 | 50 | 15 | 35 |
| தக்காளி | 50 | 40 | 40 | 120 | 120 | 80 | 100 | 160 |
| வாழைக்காய் | 50 | 40 | 40 | 40 | 35 | 50 | 40 | 30–40 |
| கீரை | 30 | 30 | 40 | 15 | 40 | 20 | 20 | 30 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 35 | 30 | 30 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 100 | 100 | 100 | 80 | 130 | 120 | 100 | 120 |
| புடோல் | 40 | 50 | 50 | 60 | 60 | 40 | 20 | 160 |
| கோவா | 50 | 60 | 80 | 70 | 60 | 100 | 70 | 40 |
| வெண்டி | 80 | 50 | 80 | 60 | 100 | 60 | 50 | 60 |
| போஞ்சி | 120 | 100 | 120 | 140 | 120 | 120 | 100 | 120 |
| லீக்ஸ் | 140 | 100 | 120 | 140 | 120 | 120 | 100 | 90 |
| தேங்காய் | 40 | 40 | 50 | 40 | 30 | 40 | 30 | 30 |
| உருளைக்கிழங்கு | 80 | 90 | 80 | 90 | 80 | 100 | 75 | 100 |
| தேசிக்காய் | 200 | 240 | 200 | 200 | 160 | 200 | 220 | 200 |
| வல்லாரை | 15 | 20 | 10 | .15 | 20 | 20 | 10 | 12 |
| கறிமிளகாய் | 80 | 80 | 200 | 140 | 100 | 120 | 70 | 80 |
| இராசவள்ளி | 140 | 140 | 140 | 160 | 160 | – | 110 | 80 |
| முருங்கைக்காய் | 500 | 300 | 400 | 300 | 380 | 300 | 350 | 300 |
| பனங்கிழங்கு | – | – | – | – | – | – | – | – |



## றொப் பிளவுஸ்

இது புதுசு

றொப் பிளவுஸ்கள் அறிமுகமாகியுள்ளன. கலாசார வடிவமைப்பில் உருவாக்கப்பட்ட இவை நீண்ட கையு டன், அலங்கார வேலைப் பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவை 800 ரூபாவில் இருந்து 900 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறன.



**நாளை**
**பங்குனி -30**
செவ்வாய்க்கிழமை
12.04.2016
திதி: ஷஷ்டி
பி.இ.04.54 வரை
நட்சத்திரம்: மிருகசீரிடம்
மு.இ.08.42 வரை
ராகுகாலம்:
03.06-04.36 வரை
சுபநேரம்:
10.36-12.06 வரை

## முட்டை சாதம்

**தேவையானவை**

அரிசி ஒரு சுண்டு
முட்டை – 2
வெங்காயம் – 2
பச்சை மிளகாய் – 2
மிளகு தூள் – 1 தேக்கரண்டி
மஞ்சள் தூள் – அரைத் தேக்கரண்டி
உப்பு – தேவையான அளவு
தாளிக்க – எண்ணெய், கடுகு, கறிவேப்பிலை

**செய்யும் முறை**

அரிசியை சிறிது உப்புச் சேர்த்து முக்கால் வேக்காடாக வேக வைத்து எடுத்து வைத்துக் கொள்ளவும்.

வெங்காயம், பச்சை மிளகாயைப் பொடியாக நறுக்கவும்.

ஒரு கிண்ணத்தில் உப்பு, மஞ்சள் தூள், மிளகு தூள் போட்டு சில துளி தண்ணீர் ஊற்றிக் கரைத்து அதில் முட்டைகளை உடைத்து ஊற்றி நன்கு அடித்து வைத்துக் கொள்ளவும்.

ஒரு சட்டியில் எண்ணெய் ஊற்றி கடுகு, கறிவேப்பிலைப் போட்டுத் தாளிக்கவும்.

பிறகு வெங்காயம், பச்சை மிளகாயைப் போட்டு வதக்கவும்.

நன்கு வதங்கியதும் முட்டையை ஊற்றிக் கிளறவும். பாதி வெந்ததும் வடித்து வைத்திருக்கும் சாதத்தைப் போட்டு 5 நிமிடம் கிளறி இறக்கவும்.

சூடான முட்டை சாதம் தயார்.





# நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 650 | 600 | 700 | 800 | 500 | 700 |
| நண்டு | 250 | 400 | 300 | 800 | 300 | 200 | – |
| கணவாய் | 550 | 600 | 500 | 500 | 600 | 600 | – |
| பாரை | 500 | 600 | 500 | 600 | 600 | – | 400 |
| சுறா | 500 | 700 | 600 | 800 | 700 | – | 600 |
| சீலா | 300 | 500 | 400 | 500 | 500 | 400 | 400 |
| விளை | 650 | 400 | 400 | 500 | 450 | 400 | 400 |
| முரல் | 300 | 400 | 350 | 450 | 400 | 300 | – |
| கும்பிளா | 500 | 400 | 300 | 400 | 400 | – | – |
| கிளாக்கன் | 800 | 800 | – | – | 500 | – | – |
| ஓரா | 400 | 400 | – | – | 450 | – | – |
| திரளி | 300 | 350 | 200 | 200 | 450 | 100 | 350 |
| நகரை | 200 | 300 | – | 250 | 300 | – | 370 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | 100 | – |
| ஒட்டி | 300 | 250 | 150 | 250 | 300 | – | 300 |
| திருக்கை | 180 | 350 | 200 | 400 | 400 | 150 | – |
| மதனம் | 150 | 200 | 180 | 300 | 350 | – | 300 |
| கொய் | 100 | 200 | 60 | 100 | 100 | 100 | – |
| பாலை | 400 | 200 | 250 | 300 | 400 | 300 | – |
| வாழை | 100 | 200 | 200 | 400 | 300 | – | – |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயன்தரும் வீட்டுக் குறிப்புகள்!


- சின்ன வெங்காயத்தை வாங்கி வெயிலில் உலர்த்தி எடுத்து வைத்திருந்தால் ஒரு மாதம் வரை கெடாமல் முளை வராமல் இருக்கும்.
- எலுமிச்சம் பழத்தை நாளொன்றுக்கு ஒரு மணி நேரம் தண்ணீரில் போட்டு எடுத்து வைத்திருந்தால் ஒரு வாரம் வரை வாடாமலும் கெட்டுப் போகாமலும் இருக்கும்.
- இஞ்சியை ஈர மணலில் புதைத்து வைக்க வேண்டும்.
- வாழைக்காயை தண்ணீரில் போட்டு வைத்திருந்தால் ஒரு வாரம் வரை கெடாமல் இருக்கும்.
- வெண்டைக்காயின் காம்பையும், தலைப்பாகத்தையும் நறுக்கி விட்டு வைத்தால் மறுநாள் சமைப்பதற்குள் முற்றிப் போகாமல் இருக்கும்.
- கடலை எண்ணெய் கெடாமல் இருக்க சிறிது புளியை போட்டு வைக்க வேண்டும்.
- எரிந்து கொண்டிருக்கும் பல்பின் மேல் இரண்டு சொட்டு சென்டைத் தெளியுங்கள். அறை முழுக்க கமகமவென்று வாசனை பரவும்.
- நைலோன் துணியை தைக்கும்போது ஊசி லேசில் இறங்காது ஊசியை அடிக்கடி சோப்பில் குத்தி எடுத்து நைலோனைத் தைத்தால் சுலபமாக ஊசி இறங்கும்.
- பற்பசையை கடைசி வரை எடுக்க அதனை வெந்நீரில் போட்டுச் சிறிது நேரம் கழித்துப் பின் அழுத்த மிச்சம் மீதி பற்பசையும் வந்துவிடும்.
- உப்புக் கரைந்த குளிர்ந்த நீரில் குருதிக் கறை பட்ட துணிகளைக் கொஞ்ச நேரம் ஊறவைத்து பின் எடுத்துச் சுத்தம் செய்யுங்கள். கறை போய்விடும்.
- முகம் பார்க்கும் கண்ணாடியின் மீது தேயிலையினால் துடைத்தால் அழுக்கு நீங்கிக் கண்ணாடி பளபளவென்று இருக்கும்

## நுட்பம்



# இறக்கைகளுடன் யமஹா ஸ்கூட்டர்

தொழில்நுட்ப வசதிகள் அதிகரிக்கும் இந்தக் காலத்தில் அதன் ஒவ்வொரு வசதிகளையும் வாகன உற்பத்தி நிறுவனங்களும் பயன்படுத்தி வருகின்றன. அந்த வகையில் இறக்கைகளுடன் கூடிய புதிய ஸ்கூட்டர் ஒன்றை முன்னணி மோட்டார் சைக்கிள் தயாரிப்பு நிறுவனமான யமஹா அறிமுகப்படுத்தியுள்ளது.
யமஹாவின் இந்தப் புதிய தயாரிப்பு தற்பொழுது வியட்நாமில் நடைபெற்றுவரும் வருடாந்த மோட்டார் சைக்கிள் கண்காட்சியில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. இந்த ஸ்கூட்டருக்கு யமஹாவின் நான்காம் தலைமுறைப் பதிப்பு என்று பெயரிடப்பட்டுள்ளது.
அன்னப்பறவை வடிவில் உருவாக்கப்பட்டுள்ள இந்த ஸ்கூட்டர், வியட்நாம் மோட்டார் சைக்கிள் கண்காட்சியில் அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது. இந்தப் புதிய ஸ்கூட்டரின் வசதிகள் மற்றும் அதன் சிறப்பம்சங்கள் குறித்து விரைவில் தகவல்கள் வெளியிடப்படும் என்று தெரி விக்கப்பட்டுள்ளது.



# அதிக காலம் உயிர் வாழ குளிகைகள் தயாரிப்பு

மனிதர்கள் சாதாரணமாக உயிர்வாழும் காலத்தை விடவும் அதிகமான காலம் உயிர் வாழக் கூடிய வகையிலான குளிகைகளைத் தயாரிக்கவுள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இதன் மூலம் சுமார் 10 வருடங்கள் அதிகமாக ஒருவருக்கு உயிர்வாழ முடியும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.
மனிதர்களை நீண்ட காலம் உயிர் வாழ வைப்பது தொடர்பில் பல்வேறு புதிய ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. அந்த வகையில் தற்போது ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த 2 நிறுவனங்களைச் சேர்ந்த விஞ்ஞானிகள் இதற்கான ஆராய்ச்சி நடத்தினார்கள்.
பொதுவாக உடலில் உள்ள ஜி.எஸ்.கே. – 3 என்ற புரோட்டீன் மூலக்கூறுகள் மனிதர்களின் வாழ்நாளைக் குறைக்கின்றன. அவற்றை கட்டுப்படுத்தி ஆயுளை நீடிப்பது குறித்த ஆய்வுகளும் பரிசோதனைகளுமே குறித்த விஞ்ஞானிகளின் ஆய்வின் போது மேற்கொள்ளப்பட்டன.
அதற்காகப் பழ வண்டுகள் பயன் படுத்தப்பட்டன. அவற்றின் உடலில் குறைந்த அளவில் லித்தியம் என்ற இரசாயனப் பொருள்களைச் செலுத்தினர். இதன் மூலம் அவை வழக்கத்தை விட 16 சதவீத அளவு கூடுதலான காலம் உயிர் வாழ்ந்தன.
அதே முறையில் புதிய மாத்திரைகளைத் தயாரித்து மனிதர்களும் சாதாரண வாழ்நாளை விட 10 வருடங்கள் அதிகமாக உயிர் வாழ வழிவகை செய்ய முடியும் என அவ்விஞ்ஞானிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

# வெல்வெட்டின் மங்கையின் மகத்துவம் நாடளாவிய முயற்சி வெற்றிப்பாதையில்

இலங்கையின் முதல் நிலை அழகு சவர்க்காரமான வெல்வெட், சர்வதேச மகளிர் தினத்தையொட்டி தமது வாழ்க்கையில் பெண்கள் வெளிப்படுத்திய அன்பைப் பாராட்டுவதற்கான சந்தர்ப்பத்தை இலங்கை மக்களுக்கு வழங்கும் வகையில், அண்மையில் நாடளாவிய நிகழ்ச்சியொன்றை ஆரம்பித்தது.



நாடெங்கிலும் பயணித்த மங்கையின் மகத்துவம் அணியிடம் ஆயிரக்கணக்கானோர் தமது கதைகளை பகிர்ந்து கொண்டனர். தமது வாழ்க்கையில் நீடித்த தாக்கம் செலுத்திய விசேடமான பெண்களின் அன்பையும், அரவணைப்பையும் ஹொட்லைன் சேவையான 9900 ஊடாகவும், வெல்வெட் பேஸ்புக் பக்கம் ஊடாகவும் இணைந்து கொண்ட மக்கள் வெளிப்படுத்தினர்.
அடுத்து வரும் வாரங்களில் வெளியாகும் தேசிய வானொலிச் சேவையில் இந்தக் கதைகளைக் கேட்க முடியும், தேசிய தொலைக்காட்சியில் இந்தக் கதைகளைப் பார்க்க முடியும், பத்திரிகைகள் மற்றும் இலத்திரனியல் ஊடகங்களிலும் வெளியாகும். இதற்கு ஆதரவளிக்கும் வகையில், இலங்கைப் பெண்களை மீண்டும் கௌரவப்படுத்த வெல்வட் விரும்பியது, எனவே எழுமாறாக 100 அதிர்ஸ்ட சாலிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு தலா ரூ. 10,000 பணப்பரிசும், அவர்களை முன்மொழிந்தவருக்குப் பெறுமதி வாய்ந்த பரிசுகளும் வழங்கப்படும்.
வெல்வெட் அழகு சவர்க்காரங்கள் 100 வீதம் உள்ளூரில் தயாரிக்கப்படுபவையாகும். பத்து வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது.
வெல்வெட் ஆனது ரோஜா மற்றும் மாதுளை, பால் மற்றும் பாதாம், சந்தனம் மற்றும் மரமஞ்சள், வேம்பு மற்றும் கற்றாழை, நீலத்தாமரை மற்றும் லாவெண்டர், நீர் அல்லி மற்றும் கடல் தாவரங்கள் மற்றும் சமீபத்தில் தேன் மற்றும் யோகர்ட் ஆகிய தேர்வுகளைக் கொண்டுள்ளது.
வெல்வெட்டானது விற்றமின்கள் அடங்கியதுடன் மென்மையான சருமத்தைத் தருவதுடன் உயர் உலகளாவிய தரங்களுடன் விருத்தி செய்யப்பட்டு, உற்பத்தி செய்யப்பட்டு, சந்தைப்படுத்தப்படும் முழுமையான உண்மையான உள்ளூர் உற்பத்தியாக உள்ளது.

(தி)

# தேசிய பாதுகாப்பு விருதுகள் 2016 பங்காளராக ஹொல்சிம் லங்கா

லஃபார்ஜ் ஹொல்சிம் குழுமத்தின் அங்கத்துவ நிறுவனமான ஹொல்சிம் லங்கா, நிர்மாணத்துறையில் சர்வதேச முன்னோடியாகத் திகழ்வதுடன், தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான தேசிய நிறுவனத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளது. இதன் மூலம் 2016 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள தேசிய பாதுகாப்பு விருதுகளின் தொழில்நுட்ப ஆலோசனைப் பங்காளர் எனும் நிலையை தன்னகத்தே பேணவுள்ளது.
ஹொல்சிம் லங்கா சார்பாக இந்த உடன்படிக்கையில் பிரதம நிறைவேற்று அதிகாரி பிலிப்பே ரிச்சார்ட் கைச்சாத்திட்டிருந்ததுடன், தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர் கௌரவ ஜோன் செனவிரட்ன கையொப்பமிட்டிருந்தார். இந்த நிகழ்வு அண்மையில் நடைபெற்றதுடன், இதில் தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் தொடர்பான நிறுவனம், தொழிற்றிணைக்களம் மற்றும் ஹொல்சிம் லங்கா ஆகியவற்றின் சிரேஷ்ட அதிகாரிகள் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.



இலங்கையில் தொழில் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றுக்குப் புகழ்பெற்ற நிறுவனங்களாக தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவனம் மற்றும் ஹொல்சிம் லங்கா ஆகியன திகழ்கின்றன. இதன் காரணமாக இந்தச் செயற்பாட்டை தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவனம் நிறுவியிருந்தது. துறையில் காணப்படும் பொறியியலாளர்களை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதுடன், விருதுக்குத் தெரிவை மேற்கொள்ளும் போது ஹொல்சிம் லங்கா தனது நிபுணத்துவத்தைப் பயன்படுத்தும்.
ஹொல்சிம் லங்கா நிறுவனத்தின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்புப் பிரிவின் தலைமை அதிகாரி [illegible] இந்த புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடல் குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில், இலங்கையின் வளர்ச்சியுடன் பாதுகாப்பு, நலன் மற்றும் சூழல் பாதுகாப்பு ஆகியன பொருளாதாரம் மற்றும் உட்கட்டமைப்பு மேம்படுத்தலுக்குப் பங்களிப்பு செலுத்துகின்றன என்பது தெளிவாகியுள்ளது. எனவே இந்தத் தேசிய விருதுகள் வழங்கலுக்கு தொழில்நுட்ப ஆலோசனைப் பங்காளராக இணைந்து கொண்டமைக்கு ஹொல்சிம் லங்கா மிகவும் பெருமையடைகிறது.
தொடர்ச்சியான இரண்டாவது ஆண்டாக கைகோர்த்துள்ளது. இந்த ஆண்டு ஹொல்சிம் லங்கா தனது உதவியை வழங்கியுள்ளதுடன், சர்வதேச நிபுணத்துவத்தை வழங்கியுள்ளதுடன், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றுக்கான அறிவு மையமாகவும் திகழ்கிறது என்றார். தேசிய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார சிறப்புகள் விருதுகளுக்காக விண்ணப்பித்திருந்தோருக்கு பல்வேறு நுட்பங்கள் மற்றும் முன்மாதிரித் தன்மை போன்றன விண்ணப்பத்துடன் வழங்கப்பட்டிருந்தன.
இதை தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான தேசிய நிறுவனம் மற்றும் ஹொல்சிம் லங்கா ஆகியன தயாரித்திருந்தன.
மேலும், ஏற்றுக் கொள்ளப்பட்ட உலகளாவிய செயற்பாடுகள், விருதுக்காக இறுதி ஏழு வகைப்படுத்தலில் உற்பத்தி, சுற்றுலா மற்றும் சுற்றுலா சார்ந்த, நிர்மாணம், ஆடை, உணவு மற்றும் பானம், போக்குவரத்து மற்றும் ஏனையவை போன்ற பிரிவுகளில் அமைந்துள்ளன.
ஒவ்வொரு விண்ணப்பப்படிவமும் கடுமையான மூன்று கட்ட மதிப்பீட்டுச் செயன்முறைக்கு உட்படுத்தப்படும். முதற்கட்ட மதிப்பீடு, கள விஜய மதிப்பீடுகள் மற்றும் நிபுணர்களின் மீளாய்வு போன்றன மேற்கொள்ளப்படுகின்றன.
இதனைத் தொடர்ந்து வெற்றியாளர்கள் உள்நாடு மற்றும் பல்தேசிய ஆகிய இரு பிரிவுகளில் வகைப்படுத்தப்படுவர். சகல ஆவணங்களும் தேசிய பாதுகாப்பு விருதுகளுக்காகச் சமர்ப்பிக்கப்படும். (தி)

## வணிகம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அமைச்சரவைக்

சபையின் அமைச்சரவைக் கூட்டம் கடந்த வாரம் இடம் பெற்றுள்ளது. இதன் போது அமைச்சர் ஒருவர், அமைச் சரவைப் பத்திரம் ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார். வாழ்வாதார உதவித் திட்டங்களை வழங்குவதற்கு, வெளிநாட்டுத் தூதுவர் ஒருவரைச் சந்தித்து நிதி உதவி கோரப்பட்டது. இந்த நிதியைப் பெற்றுக்கொள்வதற்கு முறைப் படியாக விண்ணப்பிப்பதற்கே அமைச்சரவைப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.


இதன்போது முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், தனது அனுமதியில்லாமல் வெளிநாட்டுத் தூதுவரைச் சந்தித்தது தவறு என்று குறிப்பிட்டுள்ளார். அத்துடன் இவ்வாறான கோரிக்கைகள் தனக்குத் தெரியப்படுத்தப் பட்டே வெளிநாட்டுத் தூதுவர்களிடம் சமர்ப்பிக்க வேண் டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இருப்பினும் இறுதியில் குறித்த அமைச்சரவைப் பத்திரத்துக்கு நீண்ட விவாதத்தின் பின்னர் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(த-வ-5)

## மரண அறிவித்தல்கள்

### சுவாம்பிள்ளை சவரிமுத்து (தம்பித்துரை)



சில்லாலையைப் பிறப் பிடமாகவும் வசிப் பிடமாக வும் கொண்ட சுவாம் பிள்ளை சவரிமுத்து 07.04.2016 வியாழக் கிழமை காலமா னார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான சுவாம் பிள்ளை- ஆரோக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர் களான சில்வெஸ்ரர் வார் வரா தம்பதியரின் மரு மகனும் காலஞ்சென்ற அன்னம்மாவின் அன்புக் கணவரும் பிறேமளா, மஞ்சுளா (விவசாயத் திணைக் களம் யாழ்ப்பாணம்), புவேந்திரராஜா, மகேந்திரராஜா, சசீந்திரராஜா, ரவீந்திரராஜா, நிர்மலா, அனுலா ஆகி யோரின் அன்புத் தந்தையும் லீற்ரா, ஸ்ரெலா, ஜெயந்தி, சாந்தி, யோகராஜா, மார்க்கஸ் ஆகியோரின் அன்பு மாமனாரும் கிளிவ், கிளன், டெனிஷன், மிறில்லா, அல்வின், டயானா, யுவானா, கான்ரன் லறிஸ்ஷா ஆகி யோரின் அன்புப் பேரனும் ஆவார்.


அன்னாரின் பூதவுடல் இன்று (11.04.2016) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து கதிரைமாதா ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலியின் பின்னர் கதிரைமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீலகண்டர்வளவு,
சில்லாலை

தகவல்:
குடும்பத்தினர்.

(68232) (12.18)

### செல்லத்துரை இளங்கோவன்(ராசா)



ஏழாலையைப் பிறப்பிடமாகவும் உடுப்பிட்டி யை வசிப் பிடமாகவும்கொண்ட செல்லத்துரை இளங் கோவன் (ராசா) 09. 04.2016 சனிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான செல்லத்துரை-அன்ன பூரணம் தம்பதியரின் அன்புப் புதல்வனும் கமலவேணி, அம் பிகைபாகன், காலஞ்சென்ற குகதாசன் மற்றும் கிருஷ்ண வேணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற தனலட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற வர்களான சுப்பிரமணியம் -தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் தயானந்தன், பாமினி (டோகா, கட்டார்) காலஞ்சென்ற ஜெயானந்தன் (காண்டீ- டோகா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சசிகாந்தன் (டோகா), யோகராணி ஆகியோரின் அன்பு மாமனாரும் அபினாஷ், அஸ்வின், ரித்திகா, பிரணவன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற ஜெயலட்சுமி மற்றும், யோகராணி, கனகாம்பிகை, கமலாம்பிகை, கதிரவேல் (பிரான்ஸ்), கௌரிமலர்(கொலன்ட்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(11.04.2016) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றக் கொள்ளவும்.

பிள்ளையார் கோயிலடி,
இமையாணன் மேற்கு ,
உடுப்பிட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.


(68232) (12.18)

077 8010209

## மரண அறிவித்தல்கள்

### கனகசபை சிறீகாந்தராஜா

மண்ணில்
13 . 02 . 1957



விண்ணில்
05 . 04 . 2016

யாழ்.இணுவிலைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை சிறீகாந்தராஜா 05.04.2016 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை மற்றும் பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத் துரை - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், பிறேமா வதியின் அன்புக் கணவரும், மதுசன், மேனுசன், மாதங்கி ஆகியோரின் அன்புத் தந்தையும், சந்திரலீலா (லண்டன்), இந்திர லீலா (கனடா), தவராசா (ஜேர்மனி), குகராசா (லண்டன்), யோகராசா ஆகியோரின் பாசமிகு சகோதரரும், பாரதிதாசன் (கனடா), இரஞ்சிதமலர், காலஞ்சென்ற தேம்பாமலர் மற்றும் வசந்த குமாரி (கனடா), கருணாகரன் (ஜேர்மனி), விக்கினதாசன் (லண்டன்), காலஞ்சென்ற கனகராசா மற்றும் நித்தியானந்தம் (கனடா), ஜெயமங்களதேவி (ஜேர்மனி), சிவலோஜி (லண்டன்), சுபாஜினி (அபிவிருத்தி உத்தியோகத்தர், உடுவில் பிரதேச செயல கம்), ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற சின்னத்தம்பி மற்றும் துரைராசா, பாலசிங்கம் (கனடா) ஆகி யோரின் அன்புச் சகலனும், சிசிலியா (கனடா), சசிகலா (ஜேர் மனி), மைதிலி (லண்டன்) ஆகியோரின் அன்பு உடன்பிறவாச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.04.2016) திங்கட்கிழமை Nierster str 75, 40668 Meerbusch Germany எனும் முகவரியில் மு.ப. 10.00 மணி தொடக்கம் பி.ப.2.00 மணிவரை நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
க.யோகராசா (யோகு-சகோதரன்)

### திருமதி இந்திரா உமாமகேசன்

(ஓய்வுபெற்ற ஆசிரியை-கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்)

பிறப்பு
19 . 05 . 1952



இறப்பு
08 . 04 . 2016

299, பூதவராயர் வீதி, திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இந்திரா உமாமகேசன் 08.04.2016 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணபிள்ளை முத்தம்மா தம்பதியரின் ஏக புதல்வியும் காலஞ்சென்றவர் களான சிவராமலிங்கம்- நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் உமாமகேசனின் (ஓய்வுபெற்ற கணக்காய்வாளர்) அன்பு மனைவியும் Dr.சாமளா (ஆயுள்வேத வைத்தியர் , அருண்(Quantity Surueyar), பானுசா ஆகியோரின் பாசமிகு தாயாரும் சஞ்ஜீவன்நாத்தின் (அபிவிருத்தி உத்தி யோகத்தர், கரைதுறைப்பற்று ) பாசமிகு மாமியாரும் அஸ்விகாவின் அன்பு அம்மம்மாவும் ஆறுமுகம், காலஞ் சென்ற சிறிஸ்கந்தராஜா மற்றும் ரவீந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் மகேஸ்வரி, மீனாட்ஷியம்மா, சித்ரா, பத்மா, குமுதினி,ஆதி, நாகேஸ்வரி, இராஜேஸ்வரி, செல்வ மலர் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.04.2016) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திறகு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


இல. 299, பூதவராயர் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

021 321 0481

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நல்லம்மா முத்துத்தம்பி (முத்தம்மா



மீசாலை மேற்கைப் பிறப் பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நல்லம்மா (முத் தம்மா) முத்துத்தம்பி 10.04.2016 ஞாயிற்றுக் கிழமை இறைவனடி சேர்ந் தார்.

அன்னார் காலஞ்சென்ற வரான முத்துத்தம்பியின் அன்பு மனைவியும் இராச கோபாலபிள்ளை, காலஞ் சென்றவர்களான கண்மணி, விசாலாட்சி மற்றும் சரஸ்வதி, வீரசிங்கம்(இ.போ.ச), இராசேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவபாக்கியம், ஜெகநாதன் , காலஞ்சென்ற நவரத்தினம் மற்றும் நாகேஸ்வரி (ஆசிரியர் - நவீல்ட் பாடசாலை), காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம் ஆகியோரின் அன்பு மாமியாரும் இராஜீகன் - கார்த்திகாயினி, சகுந்தலாதேவி - தருமலிங்கம், செல் வானந்தம் - ஜெயந்தினி, சிவானந்தன் - சுபாஜினி, காலஞ் சென்ற ஜெயரூபன் மற்றும் ஜெயரூபி - சிவானந்தராசா, ஜெயசுதன் - சிவமதி, காலஞ் சென்ற ஜெயசுதா மற்றும் ஜெயசீலன் - சுகந்தி, ஜெகந்தன் - சிவகலா, ஜெயந்தினி - கலைரங்கன், அயுசனா - சுதர்சன், இயுனா, சுலக்ஷன் - டோமினா, செந்தூரன் - காயத்திரி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் யுரேன், சுரேந்தன், கிஷாந்தன், கவிநயா, அஸ்வின், டிசா, சாருஜன், சாஜன், சஞ்சயன், பிரத்தாபன், பிரியங்கா, பிரதீஷன், பிரார்தனா, ஸ்வேத்தன், ஸ்வேத்தா, பாரிகா, தபிரா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.04.2016) திங்கட்கிழமை மு.ப 9.00 மணிக்கு இடம் பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஊரெல்லை வீதி,
மீசாலை மேற்கு,
மீசாலை.

தகவல்:
குடும்பத்தினர்.

077 312 6447

### யோசெப் அன்ரனி



பிறப்பு
04.02.1936

இறப்பு
09.04.2016

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட யோசெப் அன்ரனி 09.04.2016 சனிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வஸ்ரியாம் பிள்ளை சவரிமுத்து -சவரிமுத்து இன்னேசியாபிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் பவுலின் மேரியின் அன்புக் கணவரும் காஞ்சனா(நோர்வே), யமுனா(லண்டன்), ஸ்ரீபன் (நெதர்லாந்), யான்சி (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும் கைலைநாதன் (நோர்வே), மரியதாஸ்(லண்டன்), லக்ஸ்மினி(நெதர்லாந்) ஆகி யோரின் அருமை மாமனாரும் நிவேத்தா (நோர் வே),கெவின்(நோர்வே), அர்வின்(நோர்வே), மென்சி (லண்டன்), சிடோனி, யூலியா, அய்டன் (நெதர் லாந்து) ஆகியோரின் அன்புப் பேரனும் மேரிதிரேசாவின்(வேவி- இலங்கை) அருமை சகோதரனும் காலஞ்சென்ற ச.வ.பீற்றர்பிள்ளையின் (அதிபர் இலங்கை) மைத்துன ரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (11.04.2016) திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு நாரந்தனை சம்பேதுருவார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு சம்பேதுருவார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
மேரிதிரேசா- இலங்கை 077 782 6817
காஞ்சனா- 004 797 077 108, 004 793 939 357
யமுனா- 004 474 460 03680
நாரந்தனை வடக்கு, நாரந்தனை. (68232) (12.17.18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### ஐயாத்துரை நடராசா

(நடேசன்)

(ஈக்கிள்ஸ் பாஸ்)

(யாழ்.ஸ்ரான்லிவீதி நடராஜன் ரேணிங் வேக்ஸ் முன்னாள் உரிமையாளர்)



காளிகோயிலடி மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது கனடா ரொறன்ரோவை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை நடராசா நேற்று (10.04.2016) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - அன்னப்பிள்ளை தம்பதிகளின் ஏகபுத்திரனும், காலஞ்சென்ற கமலாதேவி மற்றும் சகுந்தலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17.04.2016 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**மில்லேன்,**
**காளிகோயிலடி,**
**மல்லாகம்.**

**தகவல்:**
**சு.சுதாகரன்**
**(மருமகன்)**

**077 282 1924**

## மரண அறிவித்தல்கள்

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம



### இளையகுட்டி சின்னத்தம்பி

(சுப்பிரமணியம் இளைப்பாறிய அதிபர்)

சாவகச்சேரி, சங்கத்தானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளையகுட்டி சின்னத்தம்பி (சுப்பிரமணியம் இளைப்பாறிய அதிபர்) கடந்த (08.04.2016) வெள்ளிக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இளையகுட்டி-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வர்களான நாகமணி-அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், சரஸ்வதியின் (கண்மணி) அன்புக் கணவரும், குகநேசன் (திருகோணமலை), தயாபரன் (லண்டன்), பாஸ்கரன் (சாவகச்சேரி), நளாயினி (லண்டன்), சிவகுமார், கலாநிதி(தாவடி), காலஞ்சென்ற இரவீந்திரன் மற்றும் மலர்விழி (சாவகச்சேரி), புவனேந்திரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற குமாரசாமி, அழகம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காந்திமதி, சியாமளா, கமலாம்பிகை, லக்ஷ்மிகாந்தன், குமுதினி, குகராஜா, தயாநிதி, பஞ்சலிங்கம், மாதலி (பாப்பா) ஆகியோரின் பாசமிகு மாமனும், டிலக், டினேஸ், டிலானி, ஜனகன், ஜனனி, வாகினி, தாரணி, சரண், பாமினி, மயூரன், சமித்திரா, ஜாமினி, ஜெயந்தினி, வினோத், காயத்திரி, தயானி, துஷானி, நிலானி, விஜிதா, வசந்தசேகரன், மயூரன், நீலன், முரளிதரன், துஷ்யந்தன் ஆகியோரின் பேரனும், துவாரகா, கஜேந்திரா, யனோஜ், டிலான், யதுசயன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.04.2016) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

### இராசா நவரத்தினம்

(இளைப்பாறிய இ.போ.ச.சாரதி)



ஏழாலை தெற்கு, களபாவோடையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசா நவரத்தினம் நேற்று (10.04.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசா - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கனகம்மாவின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான கந்தவனம், பொன்னுத்துரை, தங்கம்மா, சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், தவச்செல்வி (ஆசிரியர் - ஊரெழு கணேசா வித்தியாசாலை), கண்ணதாஸ் (இ.போ.ச.கோண்டாவில்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கணேசலிங்கம் (பாதுகாப்பு ஊழியர் - Golden Egle), கலைமகள் (ஆசிரியர் - யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், விஷ்ணுகா, சங்கவிகா, கனிகா, கஜாத்மிகா, சசிகேஷ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.04.2016) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காடா கடம்பை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**களபாவோடை அம்மன்கோயிலடி,**
**ஏழாலை தெற்கு.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

### திருமதி மகேஸ்வரி சிதம்பரப்பிள்ளை



கரணவாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி சிதம்பரப்பிள்ளை நேற்று (10.04.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னையா-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து-வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகளும், பூபதியின் அன்புச் சகோதரியும் சரவணப்பெருமாள், கிருஸ்ணவேணி (சுவிஸ்), நந்தகுமாரன் (பிரான்ஸ்), வேந்தனார் (சுவிஸ்), கேசவநம்பி (பிரான்ஸ்), பூங்குழலி (பிரான்ஸ்), பத்மலோசனா(பிரான்ஸ்), கமலவேணி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் மோகன்(சுவிஸ்), லோகேஸ்வரி, கிருபாதேவி(பிரான்ஸ்), மாதங்கி (சுவிஸ்), பானு (பிரான்ஸ்), நவசுதன் (பிரான்ஸ்), ஆதவன் (பிரான்ஸ்), கரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் யோகிலன்(பிரான்ஸ்), ஹிரெஞ்சன் லோசன், அபிநயா, நிருதி(சுவிஸ்), சுபீட்ஷா, லாவண்யன் (பிரான்ஸ்), மிதுனா, தமீஸ், கௌதம்(பிரான்ஸ்) , ராகவி, சாமந்தி, நவீனா(சுவிஸ்), ஜனனி, வுபந்தன் (பிரான்ஸ்) வர்சனா, அஸ்வின், அனுஸ்கா (பிரான்ஸ்), கெவின், அலெக்ஸியா (பிரான்ஸ்) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.04.2016) திங்கட்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காகபூவரந்திட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மாணிக்க வளவு,**
**கரணவாய் தெற்கு,**
**கரணவாய்.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**
**021 226 2083, 077 667 9340**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20 பில்லியன்

அமைப்பு (குளோபல் பினேன்ஷியல் இன்டக்கிரீட் நிறுவனம்) அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

2 இலட்சத்து 88 ஆயிரம் கோடி (2.88 ரில்லியன்) ரூபாவுக்குச் சமனான பணம் கடந்த 2004 தொடக்கம் 2013ஆம் ஆண்டுவரையான காலப் பகுதியில் இலங்கையை விட்டுச் சட்டத்துக்கு முரணான வகையில் வெளியேற்றப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சட்டவிரோதமாக வெளியேற்றப்பட்ட பணத்தின் பெறுமதி இலகுவில் கண்டறியப்பட முடியாது என்பதால், இதன் தொகை அதிகரிக்கக்கூடும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் சில சட்டவிரோதப் பணப்பரிமாற்றங்கள், இலத்திரனியல் பரிமாற்றமாகக் காணப்படுவதால், வங்கி நிலுவைகள் மூலம் அறியமுடியாது உள்ளதாகவும் ஆய்வில் தெரியவந்துள்ளது.

குறித்த சட்டவிரோத பணப்பரிமாற்றமானது 2011ஆம் ஆண்டில் கூடுதலாக இடம்பெற்றுள்ளதோடு, அந்த ஆண்டில் மாத்திரம் 4.6 பில்லியன் அமெரிக்க டொலர்கள் பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளன.

இந்தத் தொகையானது 2009ஆம் ஆண்டு பரிமாற்றப்பட்ட தொகையில் இரண்டு மடங்காகும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் போரின் பின்னரான 2010ஆம் ஆண்டில் 2.63 பில்லியன் அமெரிக்க டொலர்கள் பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளதோடு, 2009ஆம் ஆண்டானது போர் முடிவடைந்த ஆண்டு மட்டுமல்லாது, உலகப் பொருளாதாரம் நெருக்கடியைச் சந்தித்த ஆண்டாகவும் பதிவாகியிருந்தது.

2009ஆம் ஆண்டு 1.45 பில்லியன் அமெரிக்க டொலர்களும், 2004ஆம் ஆண்டில் 1.48 பில்லியன் அமெரிக்க டொலர்களும், 2005ஆம் ஆண்டில் 1.38 பில்லியன் அமெரிக்க டொலர்களும் நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டுள்ளன.

சட்டவிரோத பணப்பரிமாற்றமானது போலிப் பற்றுச்சீட்டு அல்லது வர்த்தக பணமோசடி மூலம் இடம்பெற்றுள்ளது.

வர்த்தகத்தின் பெறுமதியை சுங்கத் திணைக்களத்திடம் குறைத்து மதிப்பிடல் மூலம் இது இடம்பெற்றுள்ளதோடு, மேலும் தவறான வழியில் பெறப்பட்ட பணத்தைப் பதுக்குவதன் மூலமும் இந்தச் சட்டவிரோத செயல் இடம்பெற்றுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இலங்கையின் சட்டவிரோத பணப்பரிமாற்றமானது உலகின் போதைப்பொருட்களின் முக்கிய இடமான கொலம்பியாவில் 14.74 பில்லியன் அமெரிக்க டொலர்கள் என்ற தொகையை விட மோசமாகக் காணப்படுகின்றது.

மேலும் இது பனாமாவை விட பல மில்லியன்கள் குறைவாகக் காணப்படுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-வ-5)

## மூன்று

முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரனும் கலந்து கொண்டார்.

இந்த கலந்துரையாடல் முடிவில் கருத்துத் தெரிவித்த சட்டத்தரணி வி.புவிதரன்,

எங்களுடைய தீர்வுத் திட்ட வரைவு, தமிழ் மக்களின் பிரதிநிதிகளின் ஊடாகவும் , நேரடியாகவும் , முதலமைச்சர் ஊடாகவும், சர்வதேசத்தின் உதவியுடனும் நடைமுறைப்படுத்துவதற்குத் தீர்மானித்துள்ளோம்.

அத்துடன், அந்தத் தீர்வுத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவது தொடர்பிலும் சில ஏற்பாடுகளை ஆலோசித்துள்ளோம் . சர்வதேச தரப்பான புலம்பெயர் தமிழர்கள் மற்றும் தாயாக மக்களை ஒன்று திரட்டி அவர்கள் ஊடாகவும், எமது மக்கள் பிரதிநிதிகளின் ஊடாகவும் இதனைச் செயற்படுத்த வேண்டிய தேவையுள்ளது. அதையே செய்துகொண்டு இருக்கின்றோம்.

முஸ்லிம் மக்களின் பிரச்சினைக்கான தீர்வினை, முஸ்லிம்கள் தான் தயாரித்துத் தர வேண்டும். அதனை உள் வாங்குவதற்கு நாம் தயாராகவே உள்ளோம். எமது தீர்வுத் திட்ட யோசனைகள் இன்னும் மூன்று தினங்களில் நிறைவுறும் – என்றார். (த-வ-10)

## வட்டுவாகலில்

கடற் படையினர், அங்கு பெரியளவிலான கடற்படைத்தளம் ஒன்றை அமைத்து நிலை கொண்டுள்ளனர்.

எனினும் குறித்த காணிகளின் உரிமையாளர்கள் தமது நிலம் தமக்கு வேண்டும் என்று நீண்ட காலமாகக் கோரிக்கை விடுத்து வருகின்றனர். அத்துடன் மேற்படி காணியை நில அளவை செய்வதற்குப் பல தடவைகள் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும், பொதுமக்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். இந்த நிலையில் கடந்த ஜனவரி மாதம் 16 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் மற்றும் மாவட்ட அரச அதிபர் தலைமையில் இடம்பெற்ற காணி தொடர்பான கூட்டத்திலும், குறித்த காணிகளைக் கடற்படைக்கு வழங்க அதன் உரிமையாளர்கள் கடும் ஆட்சேபனை தெரிவித்தனர்.

இதனை அடுத்து, சகல விவரங்களையும் ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறும் பெப்ரவரி இறுதியில் இதற்கான திருப்திகரமான பதில் வழங்கப்படும் எனவும் பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் தெரிவித்திருந்தார். அதன் பின்னர் இன்றுவரை அந்த மக்களுக்கான பதில் வழங்கப்படவில்லை.

இவ்வாறான நிலையில், மேற்படி காணியின் பெறுமதியை மதிப்பீடு செய்து தருமாறு மதிப்பீட்டுத் திணைக்களத்துக்குப் பாதுகாப்பு அமைச்சு கடிதம் அனுப்பியுள்ளது. இதற்கமைய, இதற்குரிய காணி மதிப்பீட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-வ-5-10)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவசோதி இந்திரலிங்கம்



நுணாவில் மேற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவசோதி இந்திர லிங்கம் நேற்று (10.04.2016) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பு மற்றும் தங்கச்சியம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மயிலுப்பிள்ளை தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும்; இந்திரலிங்கத்தின் (பாலா ஸ்ரோர்ஸ் -சிறி) அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.04.2016) திங்கட்கிழமை பி.ப.ஒரு மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**நுணாவில் மேற்கு,**
**சாவகச்சேரி.**

**தகவல்:**
**கணவர் (சிறி)**

### பழனிப்பிள்ளை ஜோன்

பிறப்பு
17 . 06 . 1934



இறப்பு
10 . 04 . 2016

சீனட்டி, கரணவாயைப் பிறப்பிடமாகவும் நவிண்டில் கரணவாயை வசிப்பிடமாகவும் கொண்ட பழனிப்பிள்ளை ஜோன் நேற்று (10.04. 2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் ஜானகியின் பாசமிகு கணவரும், ஜெயரட் ணம், விஜயரட்ணம் (அப்பு), ஜெயராணி, குணரட்ணம் (சின்னத் தம்பி), நந்தரத்தினம் (குட்டி - லண்டன்), காலஞ் சென்ற ஜீவ ரட்ணம் (குஞ்சு) ஆகியோரின் அன்புத் தந்தை யும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.04.2016) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தக னக்கிரியைக்காக எள்ளங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**நவிண்டில், கரவெட்டி.**
**077 5096109**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

### திருமதி விஜயலட்சுமி முத்தையா



சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும், கரந்தன் அக்கராயன் கோணவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விஜயலட்சுமி முத்தையா நேற்று (10.04.2016) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்..


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.04.2016) திங்கட்கிழமை பி.ப.2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் உரும்பிராய் இளங் காடு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல. 64, சிவன் வீதி,**
**உரும்பிராய் கிழக்கு,**
**உரும்பிராய்.**

**தகவல்:**
**க. உருத்திரமூர்த்தி**
**(குஞ்சுபவா)**

## மரண அறிவித்தல்கள்

### ஜெயரட்ணம் பாலேந்திரா



தபால் கந்தோர் வீதி, சாவகச்சேரியைப் பிறப்பிட மாகவும் சுதுமலை வடக்கை வசிப்பிடமாக்வும் கொண்ட ஜெயரட்ணம் பாலேந்திரா (ஓய்வுபெற்ற சுகாதார திணைக்கள உத்தியோகத்தரும் தற் போதைய சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் ஆலய நிர்வாக பொறுப்பாளரும்) நேற்று (10.04. 2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜெயரட்ணம்-இலட்சுமிபிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நடேசர் சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும் சிவகாம்பிகையின் அன்புக் கணவ ரும் குமரன்(லண்டன்), நந்தன் (லண்டன்), பா. பிரணவன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.04. 2016) செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சுதுமலை வடக்கு,**
**மானிப்பாய்.**

**தகவல்:**
**மனைவி (பா. சிவகாம்பிகை)**

021 225 5336

### ஆசீர்வாதம் நேசம்மா

பிறப்பு
1936 . 04 . 25



இறப்பு
2016 . 04 . 10

உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆசீர்வாதம் நேசம்மா 10.04.2016 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசீர்வாதம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான மாரிமுத்து சூசைப்பிள்ளை (வாச்சர் - சுந்தரம்) அன்னமுத்து தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான இரோசேந்திரம், புலேந்திரம், அன்னம்மா, தேவராசா மற்றும் சின்னராசா, தேவி(இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான வேலாயுதம் பொன்னம்மா அழகம்மா கனகசிங்கம் மற்றும் லூர்தம்மா . இராசம்மா ஆகியோரின் மைத்துனியும் அன்ரன் உதயகுமார், உதயகலா, மாலா, இராசன், விஜயன், சந்திரன் ஆகியோ ரின் அன்புத் தாயாரும் சகாயராணி காலஞ்சென்ற மரியதாஸ் மற்றும் எட்வின், பாமா, கமலி, றமேசினி ஆகியோரின் அன்பு மாமியாரும் சுரேகா(சதீஸ்டீன்) - ஜென்சி(சுபாஸ்கரன்) - நிரோஜன், கஜாந், டனிஸ்ரன், டிலக்சன், டொனால்ட்சன், றெக்சன், டினோஸ்ரன், மோகிதா, சந்தோஸ், ஆகாஸ், நிதுசா, சயிலா, மிதுசன், டனுசா, அருண், அஜய் ஆகியோரின் பாசமிகு பேர்த்தி யும் சுயித், டிலான் ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (11.04.2016) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் இருந்து பி.ப 3.00 மணிக்கு உரும்பிராய் மிக்கேல் தேவாலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு புனித மிக்கேல் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பலாலி வீதி,**
**உரும்பிராய் வடக்கு,**
**மடத்தடி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய மோதல்கள்

கரணவாய், ஏப். 11

**இளைஞர் வி.க. தொடர்**

பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடர் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இந் தத் தொடரில் இன்று திங் கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வல்வெட்டித்துறை கருணாகரன் விளையாட்டுக் கழகமும் மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் மெலிஞ்சி முனை இருதய ராஜா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி யுத் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

**அல்ஹிஜ்ரா வி.க. தொடர்**

வவுனியா அல்ஹிஜ்ரா விளையாட்டுக் கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையில் நடத்தும் விலகல் முறையி லான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவு னியா முஸ்லிம் மகா வித்தியாலய அஷ்ரப் ஞாபகார்த்த மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங் கட்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் அல்ஹிஜ்ரா 'ஏ' அணியை எதிர்த்து அல்மாதர் சுப்பர் ஸ்ரார் அணி மோதவுள்ளது. (ம-108-23)

# ஐக்கியம், கில்லறி அணிகள் வென்றன மன்னார் கால்பந்தில்

யாழ்ப்பாணம், ஏப். 11

மன்னார் கால்பந்தாட்ட லீக்கும் ஜோசவாஸ்நகர் யுனைற்ரெட் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் மன்னாரின் சமர் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் ஐக்கியம், கில்லறி அணிகள் வெற்றி பெற்றுள்ளன.

ஆட்டங்கள் ஜோசவாஸ்நகர் யுனைற்ரெட் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இரவு 7மணிக்கு இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் தோட்டவெளி ஐக்கிய அணியை எதிர்த்து அடம்பன் ஐக்கிய அணி மோதிக் கொண்டது. இதில் தோட்டவெளி ஐக்கிய அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. தொடர்ந்து 8.30 மணிக்கு இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் மன்னார் கில்லறி அணியை எதிர்த்து விடத்தல்தீவு ஐக்கிய அணி மோதிக் கொண்டது. இதில் கில்லறி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

# பொம்மர்ஸ், றோயல் அசத்தல்

யாழ்ப்பாணம், ஏப். 11

தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையத்தின் 53ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டுவந்த கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் பொம்மர்ஸ், றோயல் அணிகள் வெற்றிபெற்றன.

தொடர் நாமகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகிறது. பிற்பகல் 3.45 மணி க்கு இடம்பெற்ற ஆட்டத்தில் வதிரி பொம்மர்ஸ் அணியை எதிர்த்து சிவானந்தா அணி மோதிக் கொண்டது. இதில் வதிரி பொம்மர்ஸ் அணி 1:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது. தொடர்ந்து மாலை 4.45 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து உரும்பிராய் திருக்குமரன் அணி மோதிக் கொண்டது. இதில் ஊரெழு றோயல் அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.(ம-23)

# கிண்ணம் வென்றது நல்லூர்

யாழ்ப்பாணம், ஏப். 11

பிரதேச செயலகங்களுக்கு இடையிலான மாவட்ட மட்ட கூடைப்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் நல்லூர் பிரதேச செயலக அணி சம்பியனானது.

யாழ். மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் யாழ். பிரதேச செயலக அணியை எதிர்த்து நல்லூர் பிரதேச செயலக அணி மோதிக்கொண்டது. இதில் நல்லூர் பிரதேச செயலக அணி 51:41 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றுச் சம்பியனானது. (ம-23)

## சிவில்

தெரிவித்தன. 'இந்தச் சம்பவம் தொடர்பில் தகவல் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. மாவட்ட இராணுவத் தளபதியுடன் தொடர்பு கொள்ள முயற்சித்த போதும் பலனளிக்கவில்லை. நாளை (இன்று) இது தொடர்பில் நேரில் பேசுவேன்' என்று முல்லைத் தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், 'உதயன்' தொடர்பு கொண்டு கேட்டபோது பதிலளித்தார்.

**தென்னிலங்கை ஆதிக்கம்**

முல்லைத்தீவு மாவட்டத்தின் நகராக அமைந்திருப்பது கரை துறைப்பற்று பிரதேச செயலகம். இதன் எல்லை கிராமங்களாக கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் கிராமங்கள் காணப்படுகின்றன. இடப்பெயர்வுக்கு முன்னர் மேற்படி கிராமங்களில் தென்னிலங்கை மீனவர்கள் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டிருந்தனர். 72 பேருக்கு இதற்கான அனுமதி வழங்கப்பட்டிருந்தது. போரின் பின்னர் தென்னிலங்கையைச் சேர்ந்த 200 பேர் வரையில் அந்தப் பகுதியில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த 5 வருடங்களாக தென்னிலங்கை மீனவர்கள் உரிய அனுமதியின்றி பாதுகாப்புத் தரப்பின் துணையுடன் இவ்வாறு மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவதாக, முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் குற்றம் சுமத்தியிருந்தனர். இந்த நிலையில் கடந்த 2 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டத்திற்குப் பயணம் மேற்கொண்ட மீன்பிடித்துறை அமைச்சர் மகிந்த அமரவீர விடமும், முல்லை மீனவர்கள் மேற்படி விடயத்தைச் சுட்டிக்காட்டியிருந்தனர்.

**பலனற்ற உத்தரவு**

இதன்போது மீன்பிடித்துறை அமைச்சர், தென்னிலங்கையிலிருந்து சட்ட விரோதமாக வந்து தொழில் ஈடுபடுபவர்களை அங்கிருந்து வெளியேற்றுமாறும், அதற்கு உரிய அதிகாரங்களைப் பயன்படுத்துமாறும் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளருக்குப் பணித்திருந்தார். இவ்வாறு பணிப்புரை விடுக்கப்பட்டு ஒரு வாரத்தினுள்ளேயே, தென்னிலங்கை மீனவர்கள் 25 பேர் மாவட்ட நிர்வாகத்துக்குத் தெரியாமல், கொக்குத்தொடுவாய் வடக்கிலுள்ள புலிபாய்ந்த கல்லடி என்னும் இடத்தில் வாடிகள் அமைத்து தொழில் செய்து வருகின்றனர்.

வாடி அமைத்து தங்கியிருந்து தொழில் செய்வோர் அருகிலுள்ள தனியார் ஒருவரின் காணியின் வேலிக்கு அமைத்திருந்த கொங்கிறீற் வேலித்தூண்களை அகற்றியமை தொடர்பாக காணி உரிமையாளர் கிராம சேவகருக்கு முறைப்பாடு செய்துள்ளார்.

**இராணுவத் தலையீடு**

இதனையடுத்து கொக்குத்தொடுவாய் வடக்கு கிராம சேவகரான சீ.ஜேசுரட்ணம், கொக்குத்தொடுவாய் மத்தி கிராமசேவகரான தர்மசீலன் ஆகியோர் நேற்று மாலை நேரில் சென்று ஆராய்ந்துள்ளனர். இதன் போது அங்கிருந்த தென்பகுதியைச் சேர்ந்தவர்கள், கிராம சேவகர்களுடன் கடுமையான தர்க்கம் புரிந்துள்ளனர். தர்க்கம் முற்றியதில், கிராம சேவகரான சீ.ஜேசுரட்ணம் மீதும் அவர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். அத்துடன் தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள் உடனடியாக 593 ஆவது பிரிகேட்டுக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

அங்கு வந்த, கேணல் சமந்த சில்வா, கிராம சேவகர்களை அச்சுறுத்தியதாகவும், அவர்களிடமிருந்து தொழில் அடையாள அட்டை மற்றும் தேசிய அடையாள அட்டை என்பவற்றை கட்டாயப்படுத்திப் பெற்றுக் கொண்டதாகவும், சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். இராணுவத்தினரின் நெருக்கடியினால், கிராம சேவகர்கள் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளருக்கு தொலை பேசியூடாக தகவலைத் தெரியப்படுத்தியுள்ளனர்.

**இராணுவத்தினரே பொறுப்பு**

பிரதேச செயலாளர் கேணல் அதிகாரியை தொடர்பு கொண்டு, சிவில் நிர்வாகத்தில் தற்போதும் இராணுவத் தலையீடு உள்ளதா, உங்களுக்கு யார் அனுமதி அளித்தது. இந்த இடத்தில் அசம்பாவிதம் நிகழுமாக இருந்தால், இராணுவமே அதற்குப்பொறுப்பு என்று சுட்டிக்காட்டியதோடு, கிராம சேவகர்களிடமிருந்து பறிமுதல் செய்த அடையாள அட்டைகளை உடன் கையளிக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார். அத்துடன் பொலிஸாருக்கும் இது தொடர்பில் தகவல்களை வழங்கியுள்ளார். இதன் பின்னர் கிராம சேவகர்களினது அடையாள அட்டைகளை இராணுவத்தினர் மீள வழங்கியுள்ளனர். அத்துடன் அங்கிருந்த தென்னிலங்கை மீனவர்களிடம், இவர்கள் (கிராமசேவகர்கள்) இலஞ்சம் கோர வந்தமையினாலேயே, இராணுவத்துக்கு தகவல் கொடுத்ததாக பொலிஸிடம் தெரிவிக்குமாறு குறிப்பிட்டுள்ளதாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

**பொலிஸில் முறைப்பாடு**

சம்பவ இடத்துக்கு சிறிது நேரத்திலேயே பொலிஸார் வந்துள்ளனர். கிராம சேவகர்களை பொலிஸ் நிலையம் வந்து முறைப்பாடு பதிவு செய்யுமாறு கோரியுள்ளனர். கிராம சேவகர்கள் பொலிஸ் நிலையம் சென்றபோது, நீண்ட நேரம் காத்திருக்க வைக்கப்பட்டு இறுதியில் மாஞ்சோலைப் பொலிஸாரினால் முறைப்பாடு ஏற்கப்பட்டது.

இந்தத் தாக்குதலில் காயமடைந்த கிராம சேவகர் ஜேசுரட்ணம் மாஞ்சோலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். அத்துடன் இந்தத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் 10 பேர் வரையில் நேற்று இரவு பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து வரப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பில் மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, சம்பவங்கள் தொடர்பில் பிரதேச செயலாளரினால் உடனடியாக எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இராணுவத்தினரின் செயல் குறித்து அறிய மாவட்ட இராணுவத் தளபதிக்கு பல தடவை தொலைபேசி அழைப்பை மேற்கொண்டேன். இருப்பினும் தொடர்பு கிடைக்கவில்லை. இது தொடர்பில் நாளை (இன்று) தொடர்பு கொண்டு அல்லது நேரில் சென்று ஆராயப்படும் எனத் தெரிவித்தார். (உ-வ-5-101-102)

## சித்திரைப்

காணப்படுகின்றமைக்கு காரணமாக அமைகின்றது.

புத்தாண்டுக் கொண்டாட்டங்களை முன்னிட்டு யாழ். நகரில் வியாபாரிகள் பல ஆயத்தங்களை மேற்கொண்ட போதும், மக்களின் வருகை முன்னெப்பொழுதும் இல்லாத அளவுக்கு வீழ்ச்சி அடைந்துள்ளது.

இது தொடர்பில் வியாபாரிகள் கருத்து தெரிவிக்கையில்,

அதிகரித்து வரும் கடைகளும், நகரமயமாதலும் வியாபாரத்தை பாதிக்கின்றன. ஊருக்கு ஊர் சென்று தென்னிலங்கை வியாபாரிகள் விற்பனை நடத்துவதால், நகருக்கு வந்து கொள்வனவு செய்யும்தேவை அற்றுப்போயுள்ளதால் இந்தப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. வெப்பமும் ஒரு காரணியாக இருக்கலாம் என அனுமானிக்கப்பட்டபோதும், வெயில் குறைந்த மாலை நேரங்களில் கூட மக்களின் வரவு அவ்வளவாக இல்லை என அவர்கள் கூறுகின்றனர்.

மேலும், வெளிமாவட்ட வியாபாரிகளைத் தடை செய்யக் கோரியும், தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை என வியாபாரிகள் கவலை தெரிவித்துள்ளனர். ஒரு சில நாள்கள் வந்து செல்லும் வியாபாரிகளால், எமது வியாபாரம் வீழ்ச்சி அடைந்துள்ளது. கடந்த 3 ஆண்டுகளாக நுகர்வோருக்கான வீழ்ச்சியை எதிர்நோக்கிய போதும், இந்த வருடம் நிலைமை மிக மோசமடைந்துள்ளது.

இவ்வாறு தொடருமாயின் முதலீட்டை மீளப்பெறுவதே சாத்தியமற்றதாகிவிடும். தெரிவுகளின் அதிகரிப்பும், விற்பனையை முடக்கிவிட்டுள்ளது என்ற கருத்தையும் வியாபாரிகள் முன்வைத்தனர்.

இது தொடர்பில் நுகர்வோர் கூறுகையில், வழமைக்கு மாறான நிலையில் காலநிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதால், வெளியில் செல்லமுடியாத நிலை தோன்றியுள்ளது. சிறிய நகரங்கள் நவீனமயப்படுத்தப்பட்டுவரும் காரணத்தால், அலைச்சலின்றி அந்த இடங்களிலேயே எமது தேவையைப் பூர்த்தி செய்யக்கூடியதாக உள்ளது-என்றனர். (து-வ-ரி4-ரி)

## நல்லிணக்கம்

தெரிவித்துள்ளார்.

உண்மைகளைக் கண்டறிவதன் மூலமே, நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும். ஆனால், நல்லிணக்கம் என்ற பெயரில் எவரையும் நாம் பழிவாங்கமாட்டோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அலரிமாளிகையில் நேற்று இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பின்போதே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாம் மேற்கொண்ட சீன பயணத்தினூடாக, அந்த நாட்டுக்கும் எமக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்தியுள்ளோம். இதேபோல், ஏனைய நாடுகளுடனும் உறவுகளைப் பேணுவோம். எமது வெளிவிவகாரக் கொள்கைக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் சீனாவுடனான அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்போம்.

போர்ட் சிற்றி திட்டத்திற்காகச் சீனாவுக்கு நட்டஈடு செலுத்த தேவையில்லை. இந்தத் திட்டத்தில் ஏற்பட்ட காலதாமதத்திற்காக நட்டஈடு செலுத்தவேண்டும் என்று எமது நாட்டு ஊடகங்களால் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆரம்பத்தில் சீனா 125 மில்லியன் அமெரிக்க டொலர்களைக் கோரியிருந்தது. இருப்பினும், அந்த நட்டஈட்டை இப்போது செலுத்தத் தேவையில்லை.

சீனாவுடன் பொருளாதார உடன்படிக்கைகளை மேற்கொண்டது போல, இந்தியா, ஜப்பான், ஐரோப்பிய நாடுகள், சிங்கப்பூர், தாய்லாந்து போன்ற நாடுகளுடனும் வர்த்தக உடன்படிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோம். இதனூடாக அனைத்து நாடுகளுடனும் எமது உறவுகளைப் பேணுவோம்.

மேலும், ஜூனில் புதிய பொருளாதார கொள்கையொன்றையும் வெளியிட எதிர்பார்க்கின்றோம் –

அத்துடன், இலங்கையில் நல்லிணக்க நடவடிக்கைகளை முன்னெடுப்பது குறித்து ஜூனில் ஐ.நா. மனித உரிமைகள் சபையுடன் பேச்சு நடத்தப்படவுள்ளது – என்றார். (து-வ-சி)

## பாலியல்

தொடர்பிலான விசாரணை இன்றைய தினம் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உடுவில் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட சமுர்த்தி வங்கி ஒன்றின் முகாமையாளர், உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் கடந்த வாரம் நெடுந்தீவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார். குறித்த சமுர்த்தி வங்கியில் பாலியல் துஷ்பிரயோகம் இடம் பெற்றதாக, யாழ். மாவட்ட அரச அதிபருக்கு முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இதனையடுத்து 4 பேர் கொண்ட விசாரணைக் குழு நியமிக்கப்பட்டது. குறித்த சமுர்த்தி வங்கிக்கு உட்பட்ட பிரதேச பொது மக்களிடம் ஏற்கனவே விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இந்த நிலையில் இன்றைய தினம், சமுர்த்தி வங்கி ஊழியர்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (து-வ-5)

## இரணைதீவு

நீரியல்வளதுறைத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் இ.இரவீந்திரன் தெரிவித்தார்.

இரணைதீவு கடற்பரப்பில் வைத்து நாச்சிக்குடா பகுதியைச் சேர்ந்த 4 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இரணைதீவு கடற்பரப்பில் ரோந்துபணியில் ஈடுபட்டிருந்த கடற்படையினர், அங்கு மீன்பிடியில் ஈடுப்பட்டிருந்த இரு படகுகளையும் சோதனையிட்டனர்.

இதன் போது தடைசெய்யப்பட்ட தங்கூசி வலைகள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. கைதான மீனவர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி கடற்றொழில் நீரியல் வளதுறைத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் குறிப்பிட்டார். (து-வ-4,107)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரளி, ஹர்பஜன் இருவரும் பெரும் சிரமம் கொடுத்தார்கள்

## கில்கிறிஸ்ட் தெரிவிப்பு

தனது கிரிக்கெட் வாழ்க்கையில் முரளிதரன், ஹர்பஜன் சிங் இருவரினதும் பந்துவீச்சை சமாளிக்க சிரமப்பட்டதாக ஆஸ்திரேலிய முன்னாள் வீரர் கில்கிறிஸ்ட் தெரிவித்துள்ளார்.

டெல்லியில் நடந்த ஒரு நிகழ்ச்சியில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். மேலும், உரையாற்றுகையில்; முத்தையா முரளிதரன், ஹர்பஜன் சிங் இருவரும் எப்போதும் எதிரணிக்கு சவாலாகவே இருப்பர். முரளிதரன் என்ன பந்துவீசுகிறார் என்பதை என்னால் எளிதில் கணிக்கவே முடியாது. அவர் எப்போதும் என்னை 10 வயதுக் குழந்தையாகவே நினைக்க வைப்பார். என்னைப் போலவே மைக் ஹஸியும், முரளிதரன் பந்தில் திணறக் கூடிய வரே. டெஸ்ட் ஆட்டங்களில் முரளிதரன் பந்தை உணவு இடைவேளை வரை கூட சமாளிக்க முடியாது. அவ்வளவு கடினமாக இருக்கும் – என்றார். (ம)



# மனோகரா முன்னேற்றம் கரவைச்சுடரின் தொடரில்

மாங்குளம், ஏப். 11

கரவைச்சுடர் வி.கழகம் நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரில் அல்வாய் மனோகரா அணி அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

கரவைச்சுடர் விளையாட்டுக் கழகத்தின் 45ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தப்பட்டுவரும் இந்தத் தொடரில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் மனோகரா அணியை எதிர்த்து செஞ்சுடர் அணி மோதியது. மனோகராவின் ஆதிக்கம் ஆட்டத்தில் மிகையாக நிலைபெற்றிருந்தது. முதல் பத்து நிமிடங்கள் முடிவடைவதற்குள் மனோகரா அணியின் தனேஸ் 4 ஆவது, 5ஆவது, 7ஆவது நிமிடங்களில் அடுத்தடுத்து மூன்று கோல்களைப் பதிவுசெய்து அசத்தினார். அதன் பின்னரும் அந்த அணியின் வீரர்களான மிதுசன் 10ஆவது, 13ஆவது நிமிடங்களிலும், சாருஜன் 17ஆவது நிமிடத்திலும் கோல்களைப் பதிவுசெய்ய, இடைவேளைக்கு முன்னர் மனோகரா அணி 6:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.

கிட்டத்தட்ட உறுதியான வெற்றியில் மனோகரா அணி. ஆகக்கூடிய முயற்சியை வழங்கும் முனைப்பில் கரவைச்சுடர் அணி ஆரம்பமானது இரண்டாம் பாதி. 18ஆவது நிமிடத்தில் மனோகரா அணி வீரர் சாருஜன் மற்றொரு கோலைப் பதிவு செய்ய முடிவில் அந்த அணி 7:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது. (ம-422)



# சம்பியனானது யாழ். பிரதேச செயலக அணி

## பிரதேச செயலகங்களின் கூடைப்பந்தாட்டத்தில்

யாழ்ப்பாணம், ஏப். 11

பிரதேச செயலகங்களுக்கு இடையிலான மாவட்ட மட்ட கூடைப்பந்தாட்டத் தொடரில் பெண்கள் பிரிவில் யாழ். பிரதேச செயலக அணி சம்பியனாகியுள்ளது.

யாழ். மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் யாழ். பிரதேச செயலக அணியை எதிர்த்து நல்லூர் பிரதேச செயலக அணி மோதிக்கொண்டது. இதில் யாழ். பிரதேச செயலக அணி 48:35 என்ற புள்ளிகளின் அடிப்படையில் சம்பியனானது. (ம-23)

# ஐ.பி.எல். கிண்ணம்




# சென்னையின் ரசிகர்கள் அனைவரும் புனேக்கு ஆதரவு வழங்க வேண்டும்

சென்னை அணிக்கு தடை விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து அந்த அணியின் ரசிகர்கள் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட புனேக்கு தமது ஆதரவை வழங்க வேண்டும் என்று புனே அணியின் நட்சத்திர சுழல்பந்து வீச்சாளரான அஸ்வின் தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல். தொடரில் ஆதிக்கம் செலுத்திவந்த சென்னை, ராஜஸ்தான் அணிகளுக்கு 2 ஆண்டுகள் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் இவ்விரு அணிகளுக்கு பதிலாக குஜராத் லயன்ஸ், ரைசிங் புனே சூப்பர் ஜெயின்ஸ் அணிகள் இணைக்கப்பட்டுள்ளன. இதில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியில் விளையாடிய அஸ்வின் தற்போது புனே அணிக்காக விளையாடுகிறார். இந்நிலையில் சென்னை ரசிகர்கள் புனே அணிக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்று வீடியோ மூலம் தமிழில் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ம)



# மன்செஸ்டர் சிற்றி, பரிஸ் செயின்ட் ஜேர்மைன் அணிகளுக்கு இடையிலான ஆட்டம் சமநிலையில்

ஐரோப்பிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையே இடம்பெற்று வரும் சம்பியன்ஸ் லீக் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மன்செஸ்டர் சிற்றி, பரிஸ் செயின்ட் ஜேர்மைன் அணிகளுக்கிடையிலான ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

இரு அணிகளும் தலா இரு கோல்களைப் பதிவுசெய்திருந்தன. மன்செஸ்டர் சிற்றி சார்பாக பெறப்பட்ட கோல்களை, ஆட்டத்தின் 38ஆவது நிமிடத்தில் கெவின் டீப்ரூனும் 72ஆவது நிமிடத்தில் பெர்னாண்டின்ஹோவும் பெற்றனர். பரிஸ் செயின்ட் ஜேர்மைன் அணி சார்பாக பெறப்பட்ட கோல்களை, ஆட்டத்தின் 41ஆவது நிமிடத்தில் சல்டான் இப்ராமோவிக்கும் 59ஆவது நிமிடத்தில் அட்ரியன் ரபியோட்டும் பெற்றனர். (ம)





# ரியல் மட்ரிட் அதிர்ச்சித் தோல்வி

ஐரோப்பிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையே இடம்பெற்று வரும் சம்பியன்ஸ் லீக் தொடரில் நேற்று இடம்பெற்ற ஆட்டமொன்றில் ரியல் மட்ரிட் அணிக்கு அதிர்ச்சி கொடுத்துள்ளது வொல்ஸ்பேர்க்.

இந்த ஆட்டத்தில் ரியல் மட்ரிட் வெற்றி பெறும் என்ற எதிர்பார்ப்பே பரவலாக நிலவியது. ஆனால் ஆட்டத்தின் 44ஆவது, 73 ஆவது நிமிடங்களில் கோல்களைப் பதிவுசெய்து வொல்ஸ்பேர்க் அணி ரியல் மட்ரிட் கழகத்தை இலகுவாக ஊதித்தள்ளியது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வென்றது அல் மதினா

யாழ்ப்பாணம், ஏப். 11


வவுனியா அல்ஹிஜ்ரா விளையாட்டுக் கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையில் நடத்தும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலய அஷ்ரப் ஞாபகார்த்த மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் அல் மதினா அணியை எதிர்த்து அல் மாதர் அணி மோதிக் கொண்டது. இதில் அல் மதினா அணி 10:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

Rent a Car
நாள், மாதாந்த அடிப்படையில்
கார்கள் வாடகைக்கு உண்டு.
TP:0774696695, 075 2040061

காணி விற்பனைக்கு
கைதடி கிழக்கில் கொத்தாக்குடை
என்னுமிடத்தில் அமைந்துள்ள
" ஒயிட்டி செம்பாடு புலம் " என்னும்
நி.பர. 9 குளி 12.7 விஸ்தீரணக்
காணி விற்பனைக்குண்டு.
076 700 8559

மெகா சேல்
புதுவருடத்தை முன்னிட்டு
ஏசியன் தளபாடத்தின்
மாபெரும் மெகாசேல்
TP; 0768219413
0768219415
இலுப்பையடிச் சந்திக்கும்
ஆனைப்பந்திச் சந்திக்கும்
இடையில்

# டெல்லியை வீழ்த்தியது கொல்கத்தா சகலதுறை அசத்தல் கைகொடுக்க



ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற டெல்லி–கொல்கத்தா அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் 9 இலக்குகளால் அபார வெற்றிபெற்றது கொல்கத்தா அணி.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற கொல்கத்தா முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. அகர்வால், டி ஹொக், ஐயர், சாம்சன், பீரீத்வைட், மொறிஸ் என அதிரடி வீரர்கள் இருந்தாலும் இவர்களில் ஒருவர்கூட நிலைக்கவில்லை. ஆடுகளம் போதிய புற்களுடன் பந்துவீச்சுக்கும் சாதகமாய் இருந்ததும் டெல்லியின் தடுமாற்றத்துக்கான ஓர் காரணமாகக் குறிப்பிடலாம். பவர்பிளேய் முடிவதற்குள் நான்கு இலக்குகள் சரிக்கப்பட்டுவிட்டன. மத்திய வரிசையில் களமிறங்கிய சாம்சனின் ஆட்டத்தில் சிறிது நிதானம் எதிரொலித்தது. ஆனால் ஹொக்கின் அனுபவத்துக்கு முன்னால் அவரால் சமாளிக்க முடியவில்லை.

அதிக விலைக்கு ஏலம்போன நெகியால் முடிந்தது வெறும் பதினொரு ஓட்டங்கள் மட்டுமே. உலகக்கிண்ண சிக்சர் மன்னர் பீரீத்வைட் நேற்றும் ஒரு சிக்சரை விளாசினார். ஆனால் அதுவே அவரது துடுப்பில் இருந்து பெறப்பட்ட ஒட்டுமொத்த ஓட்டமுமாக அமைந்ததுதான் பரிதாபம். முடிவில் 98 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது டெல்லி.

பந்துவீச்சில் கொல்கத்தாவின் சார்பாக ஹொக், ரசல் இருவரும் தலா மூன்று இலக்குகளையும், ஹஸ்ரிங்ஸ், சாவ்லா இருவரும் தலா இரு இலக்குகளையும் கைப்பற்றினர்.

உத்தப்பா, கம்பீர், பாண்டே, முன்றோ, சூர்யகுமார் யாதேவ், யூசொப் பதான், ரசல் என பெரும் துடுப்பாட்ட வரிசையைக் கொண்டுள்ள கொல்கத்தாவை 98 ஓட்டங்களுக்குள் சுருட்டுவதென்பது இயலாத காரியம். ஆரம்ப வீரர்களாக கம்பீர், உத்தப்பா. பெரிதான விளாசல்கள் இல்லை. என்றாலும் இலக்கை எட்டும் படியான சராசரியில் இலக்குச் சரிவில்லாமல் நகர்ந்தது கொல்கத்தாவின் இன்னிங்ஸ். அணி 69 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளையில் 35 ஓட்டங்களுடன் வீழ்ந்தார் உத்தப்பா. கம்பீர், பாண்டே இணைய மேலதிக இலக்கை இழக்காமல் டெல்லியை வீழ்த்தியது கொல்கத்தா. (ம)

Obtain a world class
Civil Engineering Qualification




BTEC HND
CIVIL ENGINEERING
Leads to BSc.
April intake
16.04.2016
மேலதிக விபரங்களுக்கு
071 777 5 666
021 4 900 900
பல நூறு மாணவர்கள் பயணித்த இவ் வெற்றிப் பாதையில்
உங்கள் காலடியையும் பதித்துக்கொள்ளுங்கள்
IIS CITY CAMPUS
#200, Sivan Pannai Road, Jaffna
Tel: 222 8060 Web: www.iis.edu.lk

பணியாளர்கள் தேவை
கையடக்கத் தொலைபேசி நிலையத்துக்கு அனுபவம் உள்ள விற்பனையாளர் மற்றும் சிட்டை எழுதுனர் தேவை. அனுபவம் உள்ள விற்பனையாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 20.000/ ரூபாய் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு: யாழ் போன் சொப்
ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 077 3611282

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
- வெளிநாடுகளுக்கு பொதிகளை மிக விரைவாக அனுப்பிக்கொள்வதற்கும்
- வெளிநாடுகளில் இருந்து பொதிகளை விரைவாகப் பெற்றுக் கொள்வதற்கும்
- காய்கறிகள், பழவகைகள், கடல் உணவுப்பொருட்கள், மருந்து, எண்ணை வகைகள், பால்மா உட்பட அனைத்துப் பாவனைப் பொருட்களையும் அனுப்பிக் கொள்ளலாம்.

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்
அருள் குளோபல் எக்ஸ்பிரஸ்
1, பிறவுண் வீதி, நாவலர் வீதி, சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 6113

புத்தாண்டை முன்னிட்டு
வீதி உலாவும் மலிவு விற்பனையும்



11.04.2016, 12.04.2016 களில்
(கணினி, கணினிசார் பொருட்கள்) பரமேஸ்வரா சந்தியிலும், சுன்னாகத்திலும்
NALIN Information Technologies(Pvt)Ltd.
NALIN INFORMATION TECHNOLOGIES (PVT) LTD.
No. 195/4, Parameswara Junction, Palaly Road. T.P. 021 222 1121, 0777 66 7975
City COMPUTERS
No. 116 G, K.K.S. Road
Chunnakam, Jaffna
T.P: 021 224 2222
077 714 0431

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.04.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.